# கேரளப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு IX

**பகுதி 1**

Kerala Reader - Tamil (AT)
Standard IX
Part - 1

கேரள அரசு
பொதுக்கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
**2024**

ST-319-1-TAMIL (AT)-9-VOL-1

# தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

# உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தோர் எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன். எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

## தமிழ்

## 9

*Prepared by*
State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition : 2024
Printed at : KBPS, Kakkanad, Kochi
© Department of General Education, Government of Kerala

## முகவுரை

உலகில் நாம் காணும் உயிரினங்களை ஓரறிவு உயிர், ஈரறிவு உயிர், மூவறிவு உயிர் என ஆறுவகை உயிரினங்களாக வகைப்படுத்தியிருப்பதை நாம் அறிவோம். உயர்ந்தபட்சமாக ஆறறிவு படைத்தவன் மனிதன். ஆறாவது அறிவு என்பது சிந்திக்கும் ஆற்றல். அந்தச் சிந்தனைக்கு மூலகாரணமாக விளங்குவது மொழி. எனவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனை வேறுபடுத்திப் பெருமைப்படுத்துவது மொழியே எனலாம்.

மொழி! அது கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு கருவியாக மட்டுமே பொதுவாகப் பலரும் கருதுகின்றனர். ஆனால் மொழி பன்முக ஆற்றல் வாய்ந்த ஒன்று. அதற்கு உயிருண்டு என்று கூறினாலும் தவறில்லை. மொழியானது மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ப, காலந்தோறும் அதன் ஆழத்திலும் பரப்பிலும் வளர்ச்சியடைந்து கொண்டேயிருக்கும் தன்மையது.

இன்றைய அறிவியல் உலகில் உயர் வகுப்புகளுக்கு மொழிக்கல்வி தேவையா? என்ற கேள்வியைச் சிலரேனும் எழுப்புகின்றனர். எந்த வகுப்பு ஆனாலும் மொழிக்கல்வியும் அதனால் கிடைக்கும் பயனும் இல்லையென்றால் மனிதனும் எந்திரமாகிவிடுவான் என்பது உண்மை. மொழிப் பாடங்கள், படித்துச் சுவைப்பதற்கான பாடங்களாக மட்டும் இருந்துவிடக் கூடாது. அவை தனிமனித வாழ்க்கைக்கும் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன் தருவனவாக அமைதல் வேண்டும்.

மொழிக் கல்வியின் வாயிலாக மொழிப்பயிற்சி, மொழி அழகு, மொழி ஆற்றல், மொழிக்கூறுகள், மொழி வெளியீட்டு வடிவங்கள், படைப்பிலக்கியங்கள் முதலானவற்றிலும் மாணவர்கள் திறன்பெற வேண்டும். இவற்றையெல்லாம் உள்வாங்கியே இப்பாடநூல் வடிவமைக்கப்பட்டுள்ளது. அறிவு என்பது கேட்டுப் பெறுவதல்ல; ஆக்கிக்கொள்வது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

வாழ்த்துகள்.

**முனைவர். ஜெயப்பிரகாஷ், ஆர்.கெ.**
இயக்குநர்,
எஸ்.ஸி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Tamil - IX (AT) Part I

### Advisor

**Dr. Nainar, M.**
Reader in Tamil (Rtd.), University College, Thiruvananthapuram.

### Chairperson

**Dr. Santhi, P.**
Associate Prof., Dept. of Tamil, University College, Thiruvananthapuram.

### Experts

**Dr. Dhanya, V.S.**
Asst. Prof., Dept. of Tamil, University College, Thiruvananthapuram.
**Dr. Karthikeyan, A.**
Prof. (Rtd.), Tamil University, Thanjavur.
**Dr. Sajan.**
Associate Prof., Dept. of Tamil, NMCC, Marthandam.
**Dr. Soundara Mahadevan.**
Associate Prof., Dept. of Tamil, Sadakathullah Appa College, Tirunelveli.

### Members

**Archana, M.,** HST, CPMGHSS Peermade, Idukki.
**Hepsi Christinal, S.,** BPC, BRC Munnar, Idukki.
**Dr. Jayalakshmi, S.,** HM, GHSS, Devikulam, Idukki.
**Mercy Premalatha, R.,** HST (Rtd.), LMS Tamil HS, Chervarakkonam, Parassala, Thiruvananthapuram.
**Parameswaran, K.,** HST, GHS, Muthalamada, Palakkad.
**Pushpalatha, P.,** HST, GHS, Vandiperiyar, Idukki.
**Shailaja, S.,** HST, GHS, Pambanar, Idukki.
**Dr. Selvakumar, R.,** HST, GTHS, Mattathukad, Palakkad.
**Velkuthalam, P.,** HST, GHSS, Chinnakanal, Idukki.
**Bimal Kumar**, Drawing Teacher, Anchalamoodu, Kollam.
**Jessy, V.A.**, Drawing Teacher, St. Thomas HSS, Koorathund, Kozhikode.
**Lakesh, G.L.,** National HS, Vattoli, Kozhikode.
**Premjith Sureshbabu**, Nelolpana, Pakaloor, Thiruvananthapuram.
**Santhosh, K.**, Drawing Teacher, GHS, Neduva, Malappuram.

Academic Co-Ordinator

**Dr. Sahaya Dhas, D.**
Assistant Professor (Tamil), SCERT.


மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அலகு 1 | ஒரே ஒரு பூமி | 7 – 32 |
| | இயற்கை | 8 – 13 |
| | விடியலைத் தேடி | 14 – 25 |
| | உயிர்த்துளி | 26 – 32 |
| அலகு 2 | நேசமே சுவாசம் | 33 – 62 |
| | உதவிக்கரம் நீட்டுவோம் | 34 – 44 |
| | தன்னம்பிக்கை | 45 – 53 |
| | நல்லிணக்கம் | 54 – 62 |
| அலகு 3 | நீரும் நிலமும் | 63 – 85 |
| | இயற்கை விளையாட்டு | 64 – 69 |
| | வெக்கை | 70 – 77 |
| | கலங்கரை விளக்கம் | 78 – 85 |

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

அலகு 1

# ஒரே ஒரு பூமி



உலகமயமாக்கல், நகரமயமாக்கல் போன்ற காரணங்களால் இயற்கைப் பேரழிவுகள் ஏற்படுகின்றன. நகரமயமாக்கலின் விளைவாகக் காற்று, நீர்நிலைகள் மாசடைந்துள்ளன. இந்நிலையிலிருந்து இயற்கையை மீட்டெடுப்பது சமூகத்தின் கடமை.

# இயற்கை



## காடு

உலகத்தைத் துயில் எழுப்ப புதிய ராகத்தைப் பாடிக் கொண்டு எழுகிறான் இளங்கதிரோன்!

மனிதர்கள் விழிக்கிறார்களோ இல்லையோ, காடு விழித்துக்கொள்கிறது!

பறவைகள் சலசலக்கின்றன! மிருகங்கள் சோம்பல் முறிக்கின்றன!

தூங்காத மிருகங்கள் ஒரு பெருமூச்சு விடுகின்றன!

இயற்கையின் இன்ப விளையாட்டில் வன விலங்குகள் பங்கு கொள்கின்றன!



சிருஷ்டியின் ஆழ்ந்த ரகசியம் அவற்றுக்குத் தெரிவது போல் மனிதர்களுக்குத் தெரிவதில்லை!

மரங்கள் மிருகங்களுக்காகவே பழுக்கின்றன! நதிகள் விலங்குகளுக்காகவே ஓடுகின்றன!

இதோ, சிருஷ்டி தேவனின் தர்ம சத்திரத்தில் தேவதைகளின் குரல் கேட்கிறது!

மான்களாக, மந்திகளாக, வண்ண வண்ணப் பறவைகளாக,

உயரத்தில் வானை எட்டும் ஒட்டைச் சிவிங்கிகளாக,

தோற்றத்தில் மலை போலிருக்கும் யானைகளாக,

வாய்மொழி இல்லாத குடிமக்கள்; வாய்மொழி இல்லாத ராஜாக்கள் தர்பார் நடத்தும் ராஜாங்கம்! இது, எல்லைக்கோடுகள் இல்லாத ஒரு சாம்ராஜ்யம்.

அங்கே தனக்கென்று பதுக்கி வைத்துக் கொள்ளும் முதலாளிச் சிங்கங்களும் உண்டு! உறவுக்கெல்லாம் விருந்து படைக்கும் ராஜாளிகளும் உண்டு!

உயிருக்குப் பயந்தோடும் பலவீனர்களும் உண்டு!

ஓடினாலும் விடமாட்டேன் என்று துரத்தும் வல்லுநர்களும் உண்டு!

மனிதனுடைய ஆதிக்கத்தைக் கட்டுப்பாடாக எதிர்க்கும் புகழ் பெற்ற யானைக் கூட்டங்கள்!

'உன் ஆதிக்கத்தை ஒப்புக் கொள்கிறேன். என்னை விட்டு விடு' என்று கெஞ்சும் மான் குட்டிகள்!'

விலங்குகளுக்கு இது வீடு!

ஆனால், வேட்டைக்காரர்களுக்குக் காடு!

பரந்து கிடக்கும் சமவெளியில் பல கோடி ஆண்டுகளாக இறைவன் நடத்தும் லீலையே இந்தக் காடுகள்!

பாலைவனம், கோரைப் புற்கள், புயலால் குவிக்கப்பட்ட மணல் திட்டுகள், பெய்த மழையில் உருவாக்கப்பட்ட காட்டு நதிகள், பயம் வந்தால் பதுங்கிக் கொள்ள சிறிய பெரிய புதர்கள், பயம் நீங்கினால் ஏறி நின்று சிறகடிக்க இளம் குன்றுகள்!



ஆதி மனிதர்களின் மூதாதையர்கள் நம்மை அழைக்கிறார்கள்!

'இன்றைய உலகத்தைவிட நாங்கள் என்ன தாழ்ந்து போனோம்? வந்து பாருங்கள்' என்று கூப்பிடுகிறார்கள்!

அவர்கள் பசியை உணர்கிறார்கள்; காதலை உணர்கிறார்கள்; நோயை உணர்கிறார்கள்; பகையையும் உணர்கிறார்கள்!

ST-319-2-TAMIL (AT)-9-VOL-1

அவர்களுக்குப் பகுத்தறிவு எதற்கு?

குட்டியைக் கவ்வும்போது பூனைக்கு இருக்கும் பல் வேறு; எலியைக் கவ்வும்போது இருக்கும் பல் வேறு!

தாய்மை அங்கே பரிபூரண சக்தி கொண்டு விளங்குகிறது!

தகப்பனைத்தான் இனங்கண்டு கொள்வதில்லையே தவிர, தாய், அண்ணன், தங்கை, பாட்டி என அனைவரும் உணரப்படுகிறார்கள்!

கொல்லப்பட்ட தங்கள் இனத்தைச் சுற்றிக் கூடி அழும் குணம் ஒவ்வொரு விலங்குக்கும் இருக்கிறது!

எல்லையில்லாத வனவெளியில் எல்லையில்லாத பேரன்பு!

காரணமின்றித் தொல்லை செய்யாத மிருகங்கள்!

அடிமைப்பட்டவர்களின் விடுதலை கீதங்களுக்கு அடி எடுத்துக் கொடுத்த ஜாதிகள்!

உலக விடுதலைப் போராட்டத்தின் முதல் கதாநாயகர்கள்!

இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டு, மகாகவிகளால் வருணிக்கப்பட்டு, மகாத்மாக்களால் பாதுகாக்கப்பட்டு, மனிதர்களால் வேட்டையாடப்படும் வாயில்லா விலங்குகள்!

அவை பேசாவிட்டால் என்ன?

நாம் பேசுவோம்!

அவை பாடாவிட்டால் என்ன?

நாம் பாடுவோம்!

அவை தங்களை அறியாவிட்டால் என்ன? நாம் அவற்றை அறிவோம்!

சுயசரிதம் எழுதத் தெரியா அவற்றைப் பற்றி நாம் ஒரு சரிதம் எழுதுவோமே!

– கண்ணதாசன்



**கண்ணதாசன்** : இவர் சிவகங்கை மாவட்டம், சிறுகூடல்பட்டி என்னும் ஊரில் 1927 ஜூன் 27 ஆம் நாள் பிறந்தார். இவரது இயற்பெயர் முத்தையா. திரைப்படப் பாடலாசிரியர், கவிஞர், கட்டுரையாளர், இதழாசிரியர் எனப் பன்முக ஆளுமை உடையவர். இயேசு காவியம், அர்த்தமுள்ள இந்து மதம், மாங்கனி, ஆட்டனத்தி ஆதி மந்தி, தைப்பாவை போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். சேரமான் காதலி என்னும் புதினத்திற்கு 1980 ஆம் வருடம் சாகித்ய அகாதமி விருது கிடைத்தது. 1981 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் காலமானார்.

## செயல்பாடுகள்

- உலக வன நாளன்று காடுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உறுதிமொழி தயார் செய்யுங்கள்.
- 'குட்டியைக் கவ்வும் போது பூனைக்குப் பல் வேறு, எலியைக் கவ்வும் போது இருக்கும் பல் வேறு!
  தாய்மை அங்கே பரிபூரண சக்தி கொண்டு விளங்குகிறது'. இக்கருத்தினை விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- காடு வர்ணனைக் கட்டுரையில் இடம்பெறும் இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர் சொற்களைத் தேர்ந்தெடுத்து வாக்கியத்தில் எழுதுங்கள்.

## தேவாரம்

மானும்மரை இனமும்மயி லினமுங்கலந் தெங்கும்
தாமேமிக மேய்ந்துதடஞ் சுனைநீர்களைப் பருகிப்
பூமாமர முரிஞ்சிப் பொழி லூடேசென்று புக்குத்
தேமாம்பொழில் நீழற்றுயில் சீபர்ப்பத மலையே

–சுந்தரர்

**சுந்தரர்** : சுந்தரமூர்த்தி நாயனார் என அழைக்கப்படும் சுந்தரர் 63 நாயன்மார்களில் ஒருவர். திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூர் ஊரில் சடையனார், இசை ஞானியார் ஆகியோருக்கு மகனாய்ப் பிறந்தார். இவரது இயற்பெயர் நம்பியாரூரன். இவரது காலம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு.

## புறநானூறு

மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளி தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கைபோல

– பாடல் எண் 2

**புறநானூறு** : எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. பல்வேறு புலவர்கள் பாடிய நானூறு பாடல்களைக் கொண்டது. புறத்திணை சார்ந்த நூலாகும். இப்பாடலின் ஆசிரியர் முரஞ்சியூர் முடி நாகராயர்.

## சீவக சிந்தாமணி

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் எற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதம்என்று இசையால் திசை போயது உண்டே

–திருத்தக்கதேவர்

**திருத்தக்கதேவர்:** ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சீவக சிந்தாமணி என்னும் காப்பியத்தில் நாமகள் இலம்பகத்திலிருந்து எடுக்கப்பட்டது இப்பாடல். இதன் ஆசிரியர் திருத்தக்க தேவர். இவர் 'நரிவிருத்தம்' என்ற நூலையும் எழுதியுள்ளார். இவரது காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

### செயல்பாடுகள்

- மலைவளம் குறித்து தேவாரப் பாடல் குறிப்பிடும் செய்திகளைப் பட்டியலிடுங்கள்.
- புறநானூற்றுப் பாடல் குறித்துக் குறிப்பு எழுதுங்கள்,
- ஏமாங்கத நாட்டின் வளத்தினைத் தற்காலச் சூழலுடன் ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.
- மலைகள் அழிக்கப்படுவதால் வனவிலங்குகளின் வாழ்விடம் எத்தகைய பாதிப்புகளுக்கு உள்ளாகின்றன என்பதை உணர்த்தித் துண்டுப்பிரசுரம் தயாரியுங்கள்.

## சிலப்பதிகாரம்

பொலம்பூங் காவும், புனல்யாற்றுப் பரப்பும்,
இலங்குநீர்த் துருத்தியும் இளமரக் காவும்,
அரங்கும் பள்ளியும் ஒருங்குடன் பரப்பி
ஒருநூற்று நாற்பது யோசனை விரிந்த
பெருமால் களிற்றுப் பெயர்வோன் போன்று
கோங்கம், வேங்கை, தூங்கிணர்க் கொன்றை,
நாகம், திலகம், நறுங்காழ் –ஆரம்
உதிர்பூம் பரப்பின் ஒழுகுபுனல் ஒளித்து,
மதுகரம் ஞிமிறொடு வண்டினம் பாட

(காட்சிக் காதை 10–19)

**சிலப்பதிகாரம்** : ஐம்பெருங்காப்பியங்களுள் தனித்தமிழ்க் காப்பியமாக விளங்குவது சிலப்பதிகாரம். இதைப் பாடியவர் இளங்கோவடிகள். இந்நூல் முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், மூவேந்தர் காப்பியம் எனப் பல பெயர்களில் அறியப்படுகின்றது. புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் ஆகிய மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் கொண்டு விளங்குகிறது.

## செயல்பாடுகள்

- சிலப்பதிகாரம் குறிப்பிடும் பேரியாற்றங்கரையின் (பெரியாறு) தன்மையைத் தற்கால ஆற்றின் சூழலோடு ஒப்பீடு செய்து எழுதுங்கள்.
- பாடலில் இடம்பெறும் மலர் வகைகளைப் பட்டியலிடுங்கள்.




தற்குறிப்பேற்ற அணி

இலக்கியன், செழியன் இருவரும் நண்பர்கள். மாலை நேரத்தில் பள்ளி நூலகத்திற்குச் சென்றனர். இலக்கியன் மறுநாள் நடைபெறும் கவிதைப் போட்டிக்கான புத்தகங்களைத் தேடிக் கொண்டிருந்தான்.

இலக்கியன் : ஆகா! கிடைத்துவிட்டது. என்ன ஒரு அருமையான கவிதை! கற்பனைத் திறனைக் கவிஞர் வாரி வழங்கியிருக்கிறார்.

"சொம்பொற் கொடியனையாள்

கண்டாளைத்தான் காணான்

மல்லல்மா ஞாலம் இருளூட்டி மாமலைமேல்

செவ்வென் கதிர் சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்ப" – சிலப்பதிகாரம்

(நண்பனிடம் அவ்வரிகளை வாசித்துக் காட்டுகிறான்)

செழியன் : எதிர்காலத்தில் நீயும் கவிஞனாக வருவாய்.

இலக்கியன் : இப்பாடல் பகுதி அணிநயம் மிக்கது.

செழியன் : அணியா? கொஞ்சம் விளக்கமாகச் சொல்.


இலக்கியன் : அணிகள் பலவுண்டு. இப்பாடலில் அமைந்திருப்பது தற்குறிப்பேற்ற அணி. இயல்பாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியின் மேல் கவிஞன் தன் கருத்தை ஏற்றிக் கூறியிருப்பார். இதைத்தான் இலக்கணத்தில் தற்குறிப்பேற்ற அணி என்பார்கள்.

செழியன் : ஞாபகம் இருக்கிறது. ஆனால் எப்படின்னு கொஞ்சம் விரிவாகச் சொல்லேன்.

இலக்கியன் : கேளு சொல்கிறேன், அதாவது மாலை நேரத்தில் செங்கதிரோன் மறைவது இயல்பான நிகழ்ச்சி. கண்ணகியின் துன்பத்தைக் காணப் பொறுக்காத கதிரவன் தன் செங்கதிர்களைச் சுருக்கிக் கொண்டு மலையில் மறைந்தான் என ஆசிரியர் தன் குறிப்பை ஏற்றிக் கூறி உள்ளதால் இது தற்குறிப்பேற்ற அணிக்குப் பொருத்தமாக உள்ளது.

செழியன் : நன்றாகப் புரிந்தது. நன்றி.

# விடியலைத் தேடி



## மரங்கள்!!

மானுட ஆண்மைக்கு
மண் கொடுத்த சீதனங்கள்
மரங்கள்.

நாங்கள்
சிறகுத் துடுப்புகள்
செலுத்திச் செல்கிற
படகுப் பறவைகளின்
பயணியர் விடுதிகள்.

எந்தப் பறவைக்கும்
இருக்க இடங்கொடுக்கும்
பொதுவுடைமை வீடுகள்.

அதனால்தான்...
தராதரம் அறியாத
தான்தோன்றிப் பறவைகள்
எங்கள் தலைமீதே
எச்சமிட்டுச் செல்கின்றன.

நாங்கள்
சூடுபடுகின்ற
சொந்தக்காரர்களுக்காக
விரித்தே வைத்திருக்கும்



வெண்கொற்றக் குடைகள்
மழைக்கும் ஒதுங்கும்
மர நிலையங்கள்
சரியாகப் போடாத
சல்லடைப் பந்தல்கள்
பாத சாரிகளின்
பணிமனைக் கூடங்கள்.

மனிதர்கள்
வாங்கி வைக்காத
மண்ணின் விசிறிகள்.

மானுடர் கரங்களில்
அகப்பட்டுக் கொண்ட
மண்ணின் கைதிகள்...

அதனால்தான்
ஊருக்கு வெளியே
உட்கார்ந்திருந்தாலும்
எங்கள்
மார்பிலும் தோளிலும்
எண்களை எழுதி
மாட்டி வைக்கிறார்கள்.

நாங்கள்
காற்று மன்னவன்
கால்நடை யாத்திரையைக்
கண்டு முரசறையும்
கட்டியங்காரர்கள்.

தரையில் நடக்கப்
பிரியப்படாத போது
காற்று எங்கள்
தலைகளின் மீதே
நடந்து செல்கிறது.

தென்றலின் பார்வையில்
செல்லப்பிள்ளைகள்
நாங்கள்
புயலின் கண்களில்
புரட்சிக்காரர்கள்.

வெட்டி யெடுத்தால்
விறகாவோம்... வெய்யிலிலே
சுட்டு எடுத்தாலும்
சுறுசுறுப்பாய் அடுப்பெரிப்போம்.



நாங்கள்
கல்லில் எறிந்தாலும்
கம்பில் அடித்தாலும்
பரிசு கொடுக்கின்ற
பண்பின் வார்ப்புகள்.

வானத்தில் நடக்கும்
நட்சத்திர இரவு
விளையாட்டு மேடையில்.

தவறி விழுவதைத்
தாங்கிப் பிடிப்பதற்காக
மண்ணில் கட்டிய
வலை விரிப்புகள்.

மனிதர்கள்
தூங்கிய பிறகும்
வானத்தில் விளக்கெரிவது
மரங்களுக்காகவே.

–மு. மேத்தா

**மு. மேத்தா** : இவர் 1945 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி மதுரை மாவட்டம், பெரியகுளத்தில் பிறந்தார். முகம்மது மேத்தா என்பது இவரின் முழுமையான பெயர். வானம்பாடி கவிஞர்களில் ஒருவர். கண்ணீர் பூக்கள், ஊர்வலம், ஆகாயத்திற்கு அடுத்த வீடு, மனச்சிறகு, அவர்கள் வருகிறார்கள் முதலானவை இவரது கவிதைத் தொகுப்புகள். ஆகாயத்திற்கு அடுத்த வீடு என்னும் கவிதை நூலுக்குச் சாகித்ய அகாதமி விருது பெற்றவர்.



## செயல்பாடுகள்

- மு. மேத்தாவின் மரங்கள் கவிதையின் வழியாக மரங்கள், மனிதருக்கும் விலங்குகளுக்கும் எத்தகைய பயனளிக்கின்றன என்பதை உரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- மரங்கள் கவிதையில் இடம்பெறும் உவமைகளைத் தொகுத்து எழுதுங்கள்.
- மரம் ஒரு வரம் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

## சில்லுமரத்துப்பட்டி

சில்லுமரத்துப்பட்டி உங்களை அன்புடன் வரவேற்கிறது!

"அம்மா! என்னோட ஆசையை இந்த லீவுக்காவது நிறைவேற்றி வைப்பியா?"

கௌதம் கேட்க, அவன் என்ன சொல்லப் போகிறான் என்ற ஆர்வத்தோடு அவனைப் பார்த்தாள் அம்மா.

"இந்த லீவுக்கு நானும் வைஷ்ணவியும் கண்டிப்பா தாத்தா பாட்டி ஊருக்குப் போகணும்னு ஆசைப்படுறோம். அந்தக் கிராமத்துக்குப் போய் எவ்ளோ வருசம் ஆச்சு? இந்த சிட்டி ரொம்ப போர்"

மகனின் பேச்சு அம்மாவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. கௌதம் விடாமல் தொடர்ந்தான்.

"காலைல எழுந்து ஸ்கூல், ஈவினிங் ட்யூஷன், கம்ப்யூட்டர் க்ளாஸ், அப்புறம் படிப்பு, சாப்பாடு. தூக்கம், வாரக் கடைசியில மட்டும் கொஞ்ச நேரம் டீவி அல்லது வீடியோ கேம்ஸ். எப்பவாவது வெளிய ஷாப்பிங் போவோம் அல்லது சினிமா. ஒரே மாதிரியான வாழ்க்கை சலிப்பா இருக்குது."

"ப்ளீஸ், இந்தமுறை நீங்க வரலைன்னாலும் பரவாயில்லை. நாங்க கண்டிப்பா தாத்தா, பாட்டி இருக்குற சில்லுமரத்துப்பட்டிக்குப் போயே ஆகணும்."

எல்லாவற்றையும் கேட்ட அம்மா வாய் திறந்தாள். "என்னடா சொல்லுற நீ? இது மெட்ரோ சிட்டி. இங்க இல்லாத வசதி அங்க என்ன இருக்கும்னு சொல்லுற? கிராமத்துல எப்படி உனக்குப் பொழுது போகும்?"

"இது மாநகரமில்லை. மாநரகம் தான். கிராமம் தான் சொர்க்கம். தாத்தாவோட தோட்டத்து ஓட்டு வீடு. முன் பக்கம் பெரிய திண்ணை. களத்திலே பச்சைப்பசேல்னு புன்னை மரம். குளுகுளுன்னு வேப்ப மரம், புங்க மரம், வரப்பு ஓரத்தில வரிசையா அணி வகுத்து நிக்குற தென்னை மரங்கள்.



அழகான கன்றுடன் நிற்கும் 'லட்சுமி' பசு, மெத் மெத்துனு குஞ்சுகளுடன் அலையும் தாய்க்கோழி, வால்பிடித்து தொட்டியைப் பார்த்து ஓடுற வாத்துக்கூட்டம், ஓரமா தேன் பொட்டின்னு தாத்தாவோட வீடு எவ்ளோ அமர்க்களமா இருக்கும்."

கௌதம் சொல்லச் சொல்ல அம்மாவின் கண்களிலும் கிராமத்தின் காட்சி

விரிந்தது. அவளுக்கும் உள்ளுக்குள் ஆசை ஓர் ஓரமாக இருந்தது. என்ன செய்ய, நகர எந்திர வாழ்க்கையின் சூழலில் சிக்கிக் கொண்டு வெளிவர முடியாத சூழல்.

"இந்த லீவுக்கு நானும் தங்கச்சி வைஷ்ணவியும் அவசியம் தாத்தா வீட்டுக்குப் போய் தங்கப் போறோம். நான் முடிவு பண்ணிட்டேன். தாத்தாவைப் பார்த்து நிறைய பேசணும்னு திட்டம் போட்டு வைச்சிருக்கேன். ஓகேவா?"

கௌதம் அம்மாவிடம் கேட்டுக் கொண்டே இருந்தான். தேர்வுகள் எப்போது முடியும், தாத்தா பாட்டியைக் காண எப்போது போவோம், சுடச்சுட நெய் மணக்கும் 'கேசரி' சாப்பிடுவோம். அவன் நினைவெல்லாம் தாத்தாவின் கிராமத்தைச் சுற்றியே வந்தது.

பள்ளி விடுமுறை தொடங்கியது. அதுவரை அமைதி காத்த அப்பா, ஓர் ஆச்சரிய அறிவிப்பு கொடுத்தார்.

"கௌதம், வைஷ்ணவி உங்களோட திங்ஸ் எல்லாம் பெட்டியில எடுத்து வையுங்க. நாளைக்கு நைட் நாம சில்லுமரத்துப்பட்டிக்குக் கிளம்புறோம். உங்களைத் தாத்தா, பாட்டி வீட்டுல கொண்டு விட்டுட்டு நான் திரும்பி வந்துருவேன். சந்தோஷமா?"

"ஹூர்ரே....." என்று அபார்ட்மெண்ட் அதிரக் கத்தினார்கள் இருவரும்.

சில்லுமரத்துப்பட்டி உங்களை வரவேற்கிறது என்ற மஞ்சள் நிறப் பலகையைக் கண்டதுமே கௌதமின் அடிவயிற்றுக்குள் சந்தோஷப் பட்டாம் பூச்சிகள் பறந்தன. ஊர் எல்லையிலேயே காத்திருந்தார் தாத்தா. அவரைக் கண்டதும் ஓடிச் சென்று கட்டிக்கொண்டார்கள் குழந்தைகள் இருவரும்.

சின்னஞ்சிறிய கிராமம்தான். அழகான மலையின் அடிவாரத்தில் சிறியதாக ஓர் ஆறு. லாரிகள், ஆற்று மணலைத் திட்டுத்திட்டாகத் திருடிச் சென்றுக் கொண்டிருந்தன.

"என்ன தாத்தா, இப்படி லாரி லாரியா மணலை எடுத்துக்கிட்டுப் போறாங்களே, எதுக்கு? ஆத்துல மண் காலியாப் போயிடாதா?"



கௌதமின் கேள்விகள் தொடங்கின.

எல்லாக் குழந்தைகளுக்கும் இருக்கும் பொதுவான பழக்கம்தான் அது. இந்தக் கேள்வி சரியானதுதானா? இந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்குமா? என்ற கவலையெல்லாம் அவர்களுக்குக் கிடையாது.

தாத்தா விவசாயிதான். என்றாலும் அவர் விவசாயம் பற்றி கல்லூரியிலோ பல்கலைக்கழகத்திலோ படித்ததில்லை.



விவசாயம் பற்றி அவருக்குத் தெரிந்த அத்தனை விஷயங்களும் பாரம்பரியமாக வந்து சேர்ந்தவை. அனுபவபூர்வமாகக் கற்றுக் கொண்டவை. நம் மண்ணின் இயல்புக்கு ஒத்துவருபவை, புழு, பூச்சிக்குக்கூட தீங்கு விளைவிக்காதவை. அதோடு தாத்தா பெரிய படிப்பாளி, பாட்டாளியும் கூட.

பேரன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல ஆரம்பித்து விட்டார் தாத்தா.

"இதுதானப்பா இன்றைய கிராமத்து அவலம், மணல் கொள்ளையரும் மரக் கொள்ளையருமாகச் சேர்ந்து எங்களோட பொருளாதாரத்தையே சீரழிக்கிறாங்க. எதிர்காலத்தைப் பற்றிக் கொஞ்சம்கூட கவலைப்படாம ஆற்றுமணலை அள்ளி அள்ளி விற்கிறாங்க.

ஆற்றில் மணல் குறைந்தால் என்னவாகும்? கிணறுகளுக்குப் போதுமான நீரூற்று கிடைக்காது. நிலத்தடி நீர்மட்டம் குறையும், விவசாயம் பொய்க்கும்."

நம் மாநிலத்தில் இதையெல்லாம் யாரும் சிந்திக்கிறதே இல்லை. உன் அப்பா உன்னைப்போல சிறுவனாக இருக்கும்போது இந்த ஊர் காடு மாதிரி இருந்துச்சு.

எத்தனை விதமான பறவைகள் தெரியுமா? பச்சைக்கிளி, சிட்டுக்குருவி, குயில், மைனா, மயில், செம்பூத்து, மரங்கொத்தி, நாரை, கொக்கு, புறா, ஆந்தை, கழுகுகள். பழம் தின்னி வௌவால், பறவைக் கீரி, மலை அணில் போல நிறைய பார்ப்போம்.

காட்டுப் பன்றி, முள்ளம் பன்றி, கழுதைப்புலி, செந்நாய், நரி, குழிமுயல் இருக்கும். இப்போ பார். கண்ணுக்கெட்டிய தொலைவு வரை மரமே இல்லை. இதற்கெல்லாம் காரணம் மனுசனோட பேராசைதான்.

தாத்தா மரம் வெட்டுவது தப்பா? வீடு கட்ட மரத்துக்கு என்ன செய்யறது தாத்தா?

நல்ல கேள்வி கேட்டப்பா. ஒரு மரம் வெட்டி வீடுகட்ட எடுத்துக் கொள்ள நினைத்தால் பத்து மரக்கன்றுகளாவது நட வேண்டும். அப்போதுதான் அடுத்த தலைமுறைக்கும் மரம் இருக்கும். இயற்கை நமக்குச் சொல்லிக் கொடுத்த பாடத்தையெல்லாம் மறந்துவிட்டோம். அதோட விளைவைத்தான் இப்போது அனுபவிக்கிறோம்.

சரி, வைஷ்ணவியை ஒரு கேள்வி கேட்போம்.

அரிசி எங்கிருந்து கிடைக்கிறது? உனக்குத் தெரிஞ்சா சொல்லு. பார்ப்போம்.

வைஷ்ணவி சுட்டிப்பெண். சட்டென பதில் சொன்னாள்.

தாத்தா, இதுக்குக் கூட எனக்குப் பதில் தெரியாதா என்ன? அரிசி பலசரக்குக் கடையில கிடைக்குது.

அது சரிடா குட்டி. அந்தப் பலசரக்குக் கடைக்கு அரிசி எங்க இருந்து வந்தது?

அதையும் நான் பார்த்திருக்கிறேனே. சோப்புக் கம்பெனி வேன் வந்து சோப்புப் பெட்டியையெல்லாம் இறக்கும். அதே மாதிரி அரிசிக் கம்பெனி வேன் வந்து அரிசி மூட்டை இறக்கும். சோப்பு செய்ய மெஷின் இருக்குதுல்ல. அதே மாதிரி அரிசி செய்யறதுக்கும் ஒரு மெஷின் இருக்கும். வைஷ்ணவி சொன்ன பதிலைக் கேட்டு தாத்தா சிரித்தாலும் உள்ளுக்குள் கொஞ்சம் வருத்தம் பரவவே செய்தது.

நம் பேரக் குழந்தைகளுக்கு விவசாயம் பற்றி ஒன்றுமே தெரியவில்லையே – அவர் முகத்தில் வாட்டம் பரவியது. மறுகணமே அவருக்குள் இன்னொரு எண்ணமும் தோன்றியது.

நம் பேரன், பேத்தி பிறந்ததிலிருந்து வளர்ந்தது பட்டணத்தில்தானே. பின் வேறு எப்படி இருப்பார்கள்? குழந்தைகளுக்கு விவசாயம் பற்றிய அடிப்படையான விஷயங்களைக் கற்றுக் கொடுக்கத் தவறியது நாம் தான். இனியாவது அவர்களுக்கு விவசாயத்தின் அடிப்படைகளைக் கற்றுக் கொடுப்போம்

தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்ட அந்த விவசாயத் தாத்தா, பேரக் குழந்தைகளோடு பேச ஆரம்பித்தார். "செல்லங்களா, இந்த லீவுல நான் உங்களுக்கு விவசாயம் பற்றிச் சின்னச் சின்ன விஷயங்களைக் கத்துத் தரலாம்னு இருக்கேன். நீங்க தயாரா?"

"அதுக்காகத்தான் நான் வந்திருக்கேன் தாத்தா" – கௌதம் உற்சாகமாகக் குரல் கொடுத்தான்

வைஷ்ணவியும் சிரித்தாள்.

வீட்டைச் சென்றடைந்தார்கள். அவர்களைக் கண்ட பாட்டி ஆனந்தமாக வரவேற்றாள். அன்று இரவே அப்பா, சென்னைக்குக் கிளம்பினார். பயணக் களைப்பில் குழந்தைகள் இருவரும் இரவு சீக்கிரமே தூங்கிவிட்டார்கள்.

–ஊரோடி வீரகுமார்

**ஊரோடி வீரகுமார்** : இவர் குறிப்பிடத்தக்க எழுத்தாளர். இயற்கை விவசாயம் என்ற நூலிலிருந்து இப்பாடப்பகுதி எடுக்கப்பட்டுள்ளது. ஆடு வளர்ப்பு, லாபநிரந்தரம், முல்லைப் பெரியாறு போன்ற நூல்களை எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- இக்கதையில் இடம்பெறும் வட்டார வழக்குச் சொற்களைத் தூய தமிழ் நடையில் எழுதுங்கள்.
- சில்லுமரத்துப்பட்டி கதையில் வரும் கதாபாத்திரங்களில் உங்களைக் கவர்ந்த கதாபாத்திரம் யார்? காரணத்தைக் குறிப்பிடுங்கள்.
- விவசாயம் நம் நாட்டின் முதுகெலும்பு என்ற தலைப்பில் பேச்சுப்போட்டியில் பங்கு பெறுவதற்கான குறிப்புகள் தயார் செய்யுங்கள்.
- சில்லுமரத்துப்பட்டி கதையினை விமர்சனம் செய்யுங்கள்.

## நீர்ப்பாசன வசதி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய செய்தி. பண்டைத் தமிழ்ப் புலவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டும் தம்மைத்தாமே புகழ்ந்து கொண்டு வாழவில்லை. இவ்வுலக மக்கள் இன்ப வாழ்விலே நீந்துவதற்கு என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்ற நுண்ணறிவு படைத்தவர்களாக இருந்தனர். இதற்கு ஒரு நிகழ்ச்சியை இங்குக் கூறுகின்றோம்.

பாண்டியன் நெடுஞ்செழியன் பாண்டியநாட்டு அரசன். மதுரை நகரத்து மன்னன். பாண்டிய நாடு முழுவதற்கும் அவனேதான் அரசனாக விளங்கினான். அவன் காலத்தில் பாண்டிய நாட்டில் மழைவளம் குறையவில்லை. பருவமழை தாராளமாகப் பெய்தது. ஆயினும் பஞ்சம் தலைவிரித்தாடியது. நாட்டிலே விளைநிலமிருந்தும் உணவுப்பொருள் உற்பத்தி ஒடுங்கிவிட்டது. உணவுப் பற்றாக்குறை காரணமாக மக்கள் பசியோ பசியென்று பரிதவித்துக் கிடந்தனர்.

பாண்டியன் நெடுஞ்செழியன் நல்லவன்தான். ஆனால் கொஞ்சம் அசதியுடையவன். குடிமக்கள் எல்லோரும் குறையொன்று மில்லாமல் குதூகலமாக வாழவேண்டுமென்பது தான் அவனுடைய ஆசை. குடிகளைக் கொடுமைக்கு ஆளாக்கும் எண்ணம் கொஞ்சங்கூட அவனுக்கில்லை.



"என்னுடைய முன்னோர்களைப்போல நானும் எல்லோராலும் கொண்டாடப்பட வேண்டும். வீரத்திலே சிறந்தவனாக விளங்கவேண்டும். எல்லா அரசர்களும் எனக்குத் தலைவணங்க வேண்டும். என்னுடைய புகழ் தமிழ்நாடு முழுவதும், தமிழ்நாட்டுக்கு அப்பாலும் பரவவேண்டும். என்னுடைய குடிமக்கள் எல்லோரும் என்னைத் தங்கள் குலதெய்வமாகப்



போற்றிப் புகழவேண்டும்." இவ்வாறு அடிக்கடி எண்ணினான் பாண்டியன்.

இச் சமயத்திலேதான் உணவுப் பஞ்சம் என்ற மக்களுடைய கூக்குரல் அவன் உள்ளத்தைப் பிடித்து உலுக்கியது. இப் பஞ்சத்தை எப்படிப் போக்குவது என்ற ஏக்கம் அவனைப் பிடித்து ஆட்டி வதைத்தது.

"பஞ்சத்திற்கும் முடிவு காணவேண்டும். நம்முடைய ஆவலும் நிறைவேற வேண்டும். இதற்கு நமது சபையைக் கூட்டுவோம். குடிமக்களையும் புலவர்களையும் ஆலோசனை கேட்போம்" என்ற முடிவுக்கு வந்தான் பாண்டியன். அவையைக் கூட்டினான்.

"மந்திரிமார்களே! பொதுமக்கள் தலைவர்களே! நமது நாட்டிலே உணவுப்பஞ்சம் பெருகிவிட்டது. இந்த உண்மை உங்களுக்கும் தெரியும். பருவமழை பெய்யாவிட்டால்தான் பயிர்த்தொழில் சுருங்கும்; உணவுப் பொருள் உற்பத்தி குறையும்; பஞ்சம் தோன்றும் என்பார்கள். பருவமழை பெய்யாமல் இல்லை; பெய்கின்றது. நாடெங்கும் பசுங் கம்பளம் விரித்தாற்போன்ற புல்வெளிகள் காட்சியளிக்கின்றன. இப்படியிருந்தும் உணவுப்பொருள் உற்பத்தி குறைவதற்குக் காரணம் என்ன? என்றான் பாண்டியன்.

"அரசே! நீங்கள் சொல்லுவது உண்மைதான். வானம் பெய்தும் வளம் பெருகவில்லை என்றால் அதற்குக் குடிமக்கள்தாம் காரணம். அவர்கள் சோம்பேறிகளாகி விட்டனர். பயிர்த்தொழில் செய்வதிலே ஆர்வம் காட்டவில்லை. உழுவோர் ஊக்கமுடன் நிலத்திலே பயிரிடுவார்களானால் உணவுப் பஞ்சம் தலை காட்டவே முடியாது. ஆகையால் நிலத்தைப் பண்படுத்தாமல், பயிர் செய்யாமல், தரிசு போட்டிருக்கும் உழவர்களைத் தண்டிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் படிந்து வேலை செய்வார்கள்; பயிர்ச் செலவு நடைபெறும்; உணவுப்பொருள் விளையும்; பஞ்சம் பறக்கும். இதைத்தவிர வேறு வழியில்லை" என்று கூறினான் அந்தப் பண்டைய அரசாங்கத்தின் முதல்மந்திரி,

மந்திரியின் இந்த ஆலோசனைக்குச் சபையிலே மதிப்பில்லை. சபையினரில் ஒருவரும் இந்த ஆலோசனையை வரவேற்கவில்லை.

"புலவர்களே! குடிமக்கள் தலைவர்களே! அமைச்சர் குடிமக்களின்மேல் குறைகூறினார். பஞ்சத்திற்குக் காரணம் உழவர்களே என்று பழி

சுமத்தினார். இதை நீங்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்பதை உணர்கிறேன். உண்மைக் காரணத்தை நீங்கள் உரைக்கவேண்டும்" என்று சபையோரைப் பார்த்துக் கூறினான். உடனே குடபுலவியனார் என்ற புலவர் எழுந்து உணவுப் பஞ்சத்திற்கான உண்மை நிலையை உரைக்கத் தொடங்கினார்.

"நிறைந்த செல்வங்களையும், பழமையான ஊரையும் வெற்றியையும் உடைய அரசனே! நான் சொல்லும் செய்தியைச் சிறிது பொறுமையுடன் கேட்க வேண்டுகின்றேன்.

நீ சிறந்த குணமுடையவன், மந்திரியின் ஆலோசனை சரியல்ல என்பதை உணர்ந்தாய்; மக்களின் ஆலோசனையைக் கேட்கத் துணிந்தாய். இது ஒன்றே உனது உயர்ந்த குணத்திற்கு அடையாளம். என்றும் அழியாத புகழை இவ்வுலகிலே நிலைநாட்ட விரும்பினாலும் இதற்கேற்ற தகுதி உனக்கு வேண்டும் அத் தகுதி என்னவென்பதை எடுத்துரைக்கின்றேன் கேள்.

தண்ணீரில்லாவிட்டால் உடல்கள் இல்லை; உணவில்லா விட்டால் அந்த உடல்களிலே உயிர் ஒட்டிக்கொண்டிருக்க முடியாது. ஆகையால் உணவு கொடுப்பவர்கள்தாம் உயிரைக் கொடுப்பவர்கள். உணவு காரணமாகத்தான் உடல் நிலைத்து நிற்க முடியும்.

உணவென்று சொல்லப்படுவது நிலமும், நீருந்தான். ஆகவே, நிலத்தையும் நீரையும் ஒன்றாக இணைந்திருக்கும்படி செய்பவர்களே இவ்வுலகில் உடம்பையும் உயிரையும் இணைந்திருக்கச் செய்பவர்களாவார்கள்.

உழவர்கள் நிலத்திலே விதையை விதைத்துவிட்டு மழை பெய்கிறதா என்று வானத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் நிலம் ஏராளமாக இருந்தும் என்ன பயன்? இத்தகைய நிலம் எவ்வளவு பரந்ததாயிருந்தாலும் அதனை ஆளும் அரசனுடைய முயற்சிக்கு அது சிறிதும் பயன்படாது.



ஆகையால் போர்த்திறம் மிகுந்த பாண்டியனே! நான் கூறுவதை அலட்சியம் பண்ணாமல் விரைந்து செய். பள்ளமான நிலங்களிலே நீர் நிறைந்து தேங்கியிருக்கும்படி கரை போட்டுத் தடுத்து நிறுத்தவேண்டும். மழைநீர் வீணாகாமல் இவ்வாறு தடுத்து நிறுத்தப்பட்டால்தான் அதை வேண்டும்போது வயல்களுக்குப்



பாய்ச்சிப் பயிர் செய்யலாம். இவ்வாறு மழை நீரைத் தேக்கி வைத்து அந்நீர் வயல்களுக்குப் பாயும் படியான பாசன வசதிகளைச் செய்பவர்கள் தாம் இந் நாட்டில் பசிப்பிணி பரவாமல் தடுப்பவராவர். நீரைத் தடுத்து நிறுத்தி வைக்க முடியாதவர்கள் பசிப்பிணியையும் தடுக்க முடியாதவராவர்.

உழவர்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தால் தான் அவர்களால் பயிரிட முடியும். நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்காமல் குடிமக்களைக் குறை கூறுவதில் பயனில்லை." இவ்வுண்மையைக் குடபுலவியனார் என்னும் புலவர் எடுத்துக்காட்டினார். அவையோர் அனைவரும் புலவர் மொழியை வரவேற்றனர். பாண்டியன் நெடுஞ்செழியனும் உண்மையுணர்ந்தான். உடனே சீரழிந்து கிடக்கும் ஏரிகளையும் வாய்க்கால்களையும் செப்பனிடும்படி உத்தரவு பிறப்பித்தான். புலவரின் உண்மை உரையையும் போற்றிப் புகழ்ந்தான். இந்த நிகழ்ச்சியைப் புறநானூற்றின் 18–வது பாடல் நமக்குக் கூறுகின்றது

"மல்லல் மூதூர் வயவேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்,
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி
ஒருநீ ஆகல் வேண்டினும், சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினும், மற்றதன்
தகுதி கேள்இனி, மிகுதி யாள!
நீர்இன்றி அமையா யாக்கைக் கெல்லாம்;
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே
வித்தி வானோக்கும் புன்புலம் கண்ணகல்
வைப்பிற்று ஆயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே; அதனால்
அடுபோர்ச் செழிய; இகழாது வல்லே;
நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்

தட்டோர் அம்ம இவண்தட் டோரே:
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே." (புறம் 18)

–சாமி சிதம்பரனார்

**சாமி சிதம்பரனார்** : நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறையில் 1900 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ஆம் தேதி சாமிநாத மலையமானுக்கும் கமலாம்பாள் அம்மையாருக்கும் மகனாய் பிறந்தார். இவர் பத்துப்பாட்டும் பண்டையத் தமிழரும், பழந்தமிழர் அரசியல், தொல்காப்பியத் தமிழர், வள்ளலார் கூறும் வாழ்க்கை நெறி ஆகிய நூற்களை எழுதியுள்ளார். திராவிட, சுய மரியாதை இதழ்களில் உதவியாசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

## செயல்பாடுகள்

- 'நிலன்நெளி மருங்கின் நீர்நிலை' என்ற வரியில் 'நீர்நிலைகளின் அதிகரிப்பு நாட்டு வளத்திற்கு தேவை' என்பதை வலியுறுத்தும் விதமாக துண்டுப்பிரசுரம் தயாரியுங்கள்

- 'நீரின்றி அமையா யாக்கைக் கெல்லாம்
  உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
  உண்டி முதற்றே உணவின் பிண்டம்
  உணவெனப் படுவது நிலத்தொடு நீரே'

  என்ற வரிகள் உணர்த்தும் பொருளைத் தற்காலச் சூழலுடன் பொருத்தி விமர்சனக் குறிப்பு தயார் செய்யுங்கள்.



# உயிர்த்துளி



## நதிகள் இணைப்பில் வளமான இந்தியா



"கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்"
"வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர்செய்கு வோம்"

என்றார் பாட்டுக்கொரு புலவன் பாரதி. ஆம்! இன்று பாரதம் முழுவதும் பரவலாகப் பேசப்படும் நதிகள் இணைப்பு ஏறத்தாழ ஒரு நூற்றாண்டு காலத்திற்கு முன்பே பாரதியின் சிந்தனையில் உருவாகி உள்ளது.

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்," "வற்றாத வளம் கொழிக்கும் வள்ளல்கள்" என்றெல்லாம் ஆறுகளைப் பற்றிச் சிறப்பித்துக் கூறுவர். எகிப்திய நாகரிகம் நைல் நதிக் கரையிலும், சுமேரிய நாகரிகம் யூப்ரடீஸ், டைகிரீஸ் நதிக் கரைகளிலும் சீன நாகரிகம் ஹோயாங்கோ (மஞ்சள் நதி) நதிக் கரைகளிலும் தோன்றியதால் நதிகளை "நாகரிகத் தொட்டில்கள்" என அழைப்பர். நாடோடியாக வாழ்ந்த மனிதன் நிலையாக, நாகரிகமாக வாழத் தொடங்கியதும் நதிக் கரைகளில்தான் என்பர் வரலாற்றறிஞர்கள்.

"என்னவளம் இல்லை இந்தத் திருநாட்டில்?
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்
ஒழுங்காய்ப் பாடுபடு வயக்காட்டில் உயரும்
உன்மதிப்பு அயல் நாட்டில்"

என்றெல்லாம் கவிஞர்கள் கூறினாலும், நன்செய் குலுங்கும் தஞ்சை இன்று பாலைவனமாய்க் காட்சியளிக்கிறது. "தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம்" என அழைக்கப்பட்ட தஞ்சை விவசாயிகளின் இன்றய அவலநிலைக்குக் காரணம் என்ன? "வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி" இன்று பொய்த்து விட்டதால்தானே! தமிழகம் முழுவதும் சகாரா போல் மாறியது என அனைவரும் வருந்தும் இவ்வேளையில் அண்டை மாநிலமான கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களிலும் இதே நிலைதான். விவசாயத்திற்கு மட்டுமின்றி குடிநீர்ப் பிரச்சினை களாலும் மக்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகியுள்ளனர். மின்சார உற்பத்தியும் வெகுவாகப் பாதிப்புக்கு ஆளாகியுள்ளது. இந்த அவலநிலை மாற வேண்டும் என்றால் நதிகளை இணைக்க வேண்டியது அவசியம் அன்றோ?

நதிகளின் இணைப்பால் விவசாயமும், அதனைச் சார்ந்த பிற தொழில்களும் நடைபெறுவதால் விளைச்சல் பெருகும். விலைவாசி குறையும். நாட்டின் பொருளாதாரம் உயர்வடையும்.

நதிகள் இணைப்பால் போக்குவரத்து தங்கு தடையின்றி நடைபெறும். சாலைகள், இருப்புப் பாதைகள் உருவாக்கிப் பராமரிப்பிற்கு ஆகும் செலவை விட நீர்வழிப் பாதைகளை உருவாக்குவதில் செலவு குறைவு. விளைநிலங்களோ, கட்டிடங்களோ அழிக்க வேண்டிய நிலை ஏற்படாது. நீர்வழிப் போக்குவரத்தால் அந்நியச் செலாவணியும் அதிகம் கிடைக்க வாய்ப்புகள் உள்ளன.

மின் உற்பத்தியும், மீன் உற்பத்தியும் பெருகி வளமான பாரதம் உருவாகும். சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா போன்ற வற்றாத ஜீவ நதிகளின் இணைப்பால் குஜராத், ராஜஸ்தான் போன்ற மாநிலங்கள் பயனடையும்.

"சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி" என்று கம்பரால் வர்ணிக்கப்படும் கோதாவரி, கிருஷ்ணா, மகாநதி, தப்தி போன்ற நதிகளின் இணைப்பால் தென்னிந்தியாவின் பெரும் பகுதிகள் வளம்பெறும். குண்டூர், இராயல சீமா போன்ற வறண்ட பகுதிகள் நீர்வளம் பெற்று, பாலைவனங்கள் எல்லாம் சோலை வனங்களாக மாறும்.



ஒவ்வொரு நாட்டிற்கும், மாநிலங்களுக்கும் இடையேயுள்ள தொலைவு குறைவதால் உலகின் எந்தப் பகுதிகளுக்கும் எளிதில் சென்று வரலாம். எனவே பயண நேரமும் செலவும் குறையும்.

ஏற்றுமதி–இறக்குமதி பெருகி அந்நியச் செலாவணி குறைவின்றிக் கிடைக்க வாய்ப்புகள் ஏற்படும். வேலை வாய்ப்புகள் பெருகும். பல பெரிய –சிறிய தொழில்கள் தொடங்கப்படலாம். எனவே வேலையில்லா திண்டாட்டம் குறையும்.

நதிகள் இணைப்பிற்கு ரூ 57,000 கோடி செலவாகும் என நிபுணர்கள் கூறியுள்ளனர். இதற்கான பொருளாதார வசதி இல்லை என நதிகள் இணைப்பு நடைபெறாமல் போனால் நமது பாரதமே பாலைவனமாகலாம்.

–வெ. இறையன்பு

**வெ. இறையன்பு** : இவர் 1963 ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் தேதி சேலம் மாவட்டத்திலுள்ள காட்டூர் என்னும் ஊரில் பிறந்தார். வெங்கடாசலம், பேபி சரோஜா ஆகியோர் இவர் பெற்றோர். இவர் இந்திய ஆட்சிப் பணி அதிகாரியும் எழுத்தாளரும் தன்னம்பிக்கை பேச்சாளரும் ஆவார். இலக்கியத்தில் மேலாண்மை, படிப்பது சுகமே, வாய்க்கால் மீன்கள், ஆத்தங்கரை ஓரம், தரிசனம், மூளைக்குள் சுற்றுலா ஆகியவை உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.



## செயல்பாடுகள்

- 'நதிகள் இணைப்பில் வளமான இந்தியா' என்ற கட்டுரையில் காணலாகும் இலக்கிய வரிகளை எடுத்து எழுதுங்கள்.
- நதிகள் இணைப்பால் அடையும் நன்மைகள் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.
- பாடப் பகுதியில் இடம்பெறும் நதிகளைப் பற்றிக் குறிப்பெழுதி நம் நாட்டு நதிகள் எனும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.


## குடிக்கும் நீரைப் பாழாக்கக்கூடாது

'தாயைப் பழித்தாலும்

தண்ணீரைப் பழிக்காதே'

காலம் காலமாக நமக்குச் சொல்லி வரும் அழகிய வாசகம் இது இந்த உலகமே நீரால் சூழப்பட்டது. அதைத் தாண்டி இந்த உலகத்தில் பலருடைய பல நேர உணவாக நீரே உள்ளது என்பதும் தவிர்க்க இயலாத ஒன்று. அந்த நீரை நாம் பாதுகாக்க வேண்டும் என்பதைத் தாண்டி யாரேனும் தாகம் என்று வந்தால் அவர்களுக்கு நாம் நீரை வழங்கி அவர்களுடைய தாகம் தீர்க்க வேண்டும் என்றே வள்ளலார் விரும்புகிறார்.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய நெஞ்சம் அவருடையது தானே. நீரின்றி வாடும் பயிரைக் கண்டு வருந்தும் பேராண்மை



படைத்தவர் அவர், கோடையில் அக்காலம் முதல் இக்காலம் வரை தண்ணீர்ப்பந்தல் வைத்து மக்களுக்குத் தொண்டாற்றி வருகிறார்கள். இன்று கூட பல வீடுகளில் வறண்டநிலை வருகையில் ஒரு கிண்ணத்தில் தண்ணீரைத் தாகத்தோடு வரும் பறவைகளுக்காக மாடியில் வைக்கின்றனர்.

அப்பூதியடிகள் தனது தண்ணீர்ப் பந்தலுக்குத் திருநாவுக்கரசரின் பெயரைச் சூட்டியது பற்றிச் சேக்கிழார் தனது பெரியபுராணத்தில் குறிப்பிடுவார். மன்னர்கள் தங்கள் ஆட்சியில் ஏரி குளம், கிணறு முதலிய நீர் நிலைகளை அதிகமாக வெட்டி மக்களின் துயரத்தைத் தீர்ப்பதற்குப் பாடுபட்டார்கள்.

ஓர் ஊரின் வாழ்வாதாரம் நீர் ஆகும். அதைக் கொண்டு தான் அந்தப் பகுதியின் வளம் அமையும். புலவர்கள் மாதம் மூன்று முறை மழை வேண்டும் என்று பாடுவார்கள். மன்னர்கள் தாங்கள் பெற்ற வெற்றியின் சிறப்பை ஊரில் கோயில்கள் மற்றும் குளம், ஏரி முதலிய நீர் நிலைகளை அமைக்க தங்கள் கொண்டு வந்த பகை தேசத்துத் திறைப் பொருள்களைப் பயன்படுத்துவர்கள்.

எங்கெல்லாம் நிலம் பள்ளமாக இருக்கிறதோ அங்கெல்லாம் கரை அமைத்து நீர் நிலைகள் உருவாக்கிய மன்னர்களே இந்த உலகில் தங்களது பெயரை நிலைநிறுத்திக் கொள்வார்கள் என்கிறார் குடபுலவியனார் (சங்ககாலப் புலவர்களில் ஒருவர்).

10 வயது முதல் 80 வயது வரை குடிமராமத்துப் பணி செய்வது கடமையாகக் கருதப்பட்டது. இப்படியாக நீர் நிலைகளை உருவாக்குவதும், பராமரிப்பதும் பழந்தமிழர் வாழ்வோடு ஒன்றியதாக இருந்தது. நமது இலக்கியங்களில் சொல்லப்பட்டிருக்கும் நீர் நிலைகள் மொத்தம் 47 என்கிற போது நம் முன்னோர்களைப் பற்றிய வியப்பே மேலிடுகிறது.

இவ்வாறு அக்காலத்தில் நீருக்கு மிகவும் முக்கியத்துவம் தந்து சிறப்பாக அமைத்துப் பாதுகாத்தனர் நமது முன்னோர்கள். ஆனால் நாம் நீரை எவ்வளவு கெடுக்க முடியுமோ அவ்வளவும் செய்கிறோம். கழிவு நீர் கலந்த குடிநீர், நச்சுத்தன்மை உடைய நீர், அமிலம், ரசாயன நீர் எனப் பல வகையான நீரைப் பயன்படுத்தி நமது உடலை நோய்க்கு இரையாக்கிக் கொள்கிறோம். நமக்கு வரும் நீரையும் எல்லைக்குள் உட்படுத்தி சண்டையும் செய்கிறோம். அதனாலேயே வள்ளலார் நீரின் அருமை உணர்ந்து அதைப் பாடியுள்ளார்.

நீரை வீணாக்கும் ஒவ்வொரு நிமிடமும்

நம் வாழ்வையே வீணாக்கி வருகிறோம்

வள்ளலார் மொழி : குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தேனோ!

முனைவர் மஞ்சுளா

**முனைவர் மஞ்சுளா** : இவர் தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்தில் பாலசுப்ரமணியம், லீலாமணி ஆகியோருக்கு மகளாகப் பிறந்தவர். வடலூர் தலைமைச் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளராக இருக்கிறார். குமாரபாளையத்திலுள்ள எஸ்.எல்.எம். கலை அறிவியல் கல்லூரியில் தமிழ்துறைத் தலைவராகப் பணியாற்றுகிறார். மனம் ஒரு மகாத்மா, வள்ளலாரும் பாரதியும் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். ஆத்ம ஞானம் என்ற இதழின் ஆசிரியராகவும் உள்ளார்.

## செயல்பாடுகள்

- 'நீரை வீணாக்கும் ஒவ்வொரு நிமிடமும்
  நம் வாழ்வையே வீணாக்கி விடுகிறோம்' –வள்ளலார்

  'நீர் இன்றி அமையாது உலகெனின்' –வள்ளுவர்
  இப்பாடல்கள் உணர்த்தும் கருத்துக்களை ஒப்பிட்டு எழுதுங்கள்.
- 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்ற பழமொழி குடபுலவியனார் பாடலுடன் பொருந்தும் பாங்கினைக் குறிப்பாக எழுதுங்கள்.
- பாழ்பட்டுக் கிடக்கும் ஏரியைத் தூய்மைப்படுத்த ஊராட்சி மன்றத் தலைவருக்குப் புகார் கடிதம் எழுதுங்கள்.
- 'ஆறு இல்லாத ஊர் அழகு பாழ்' என்ற பழமொழிக்கு உகந்த ஒரு கதையை எழுதுங்கள்.
- நச்சுத்தன்மையுடைய குடிநீரை அருந்துவதால் ஏற்படும் நோய்களைக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.

## மழைநீர் சேகரிப்பு

"நீரின்றி அமையாது உலகு" என்ற திருவள்ளுவர் வாக்கிற்கமைய இந்த உலகின் அனைத்து உயிரினங்களுக்கும் ஆதாரமாய் விளங்குவது நீர். தாவரங்கள் தனது உணவை உற்பத்தி செய்வதற்கும். விலங்குகளும் பறவைகளும் தாகம் தணிப்பதற்கும் நீர் இன்றியமையாததாய் விளங்குகின்றது. இத்தகைய நீர் பூமிக்குப் பலவகைகளில் கிடைத்தாலும் மழை மூலம் கிடைக்கப் பெறுகின்ற நீரே மனிதர்களின் பெரும்பாலான தேவைகளைப் பூர்த்தி செய்கின்றது. ஆகவே இத்தகைய மழைநீரை நாம் அனைவருமே சேமித்து சிக்கனமாக நமது தேவைக்குப் பயன்படுத்த வேண்டியது நம் ஒவ்வொருவருடையவும் தலையாய கடமையாகும். இக்கட்டுரையில் மழை நீர் சேமிப்பின் அவசியம் மற்றும் மழை நீர் சேமிக்கும் முறைகள் பற்றிப் பார்க்கலாம்.

### மழை நீரின் முக்கியத்துவம்

பொதுவாக நீரின் முக்கியத்துவத்தைப் பற்றி வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. அந்த வகையில் மழைநீரானது நிலம் மற்றும் நீர்நிலைகளிலுள்ள நீர் ஆவியாகி பின் மழையாகி மீண்டும் இப்பூமியை வந்தடைகின்றது. இத்தகைய மழைநீரை நாம் சமைப்பதற்கும் குடிப்பதற்கும் பயன்படுத்தலாம்.

ஆனால், இந்த நீரை நேரடியாகப் பயன்படுத்தாமல் நன்றாகக் கொதிக்க வைத்து வடிகட்டியே பயன்படுத்த வேண்டும். மனிதர்களுக்கு உணவைத் தருவது விவசாயம். ஆதிகாலம் தொட்டு விவசாயத்திற்கு மழைநீரே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத்தகைய விவசாயிகள் அணைக்கட்டுக்கள் அமைத்து அந்நீரை மழை கிடைக்காத காலங்களில் பயன்படுத்தி வருகின்றனர்.

இத்தகைய மழைநீர் நமக்குக் கிடைக்காவிட்டால் வேளாண்மை நிலங்களெல்லாம் வறண்டு உணவுப்பஞ்சம் தோன்றிவிடும். இந்த உலகை உயிர்ப்பாக வைத்திருப்பதில் பெரும்பங்கு வகிப்பவை காடுகளே. அந்தக் காடுகள் நிலைத்திருத்தலிற்குக் காரணமாய் அமைவது மழைநீர், இவ்வாறு மழைநீரின் இன்றியமையாமையானது நீண்டு கொண்டே செல்கின்றது.

## மழைநீர் சேகரிப்பின் அவசியம்


இப்பூமிப்பரப்பில் காணப்படும் நீரானது மாசடைதலிற்கு உட்படுவதாலும், ஆழ்துளைக்கிணறுகளை அமைத்து நிலத்தடிநீரை உறிஞ்சுவதனாலும் அழிவடைகின்றது. இந்நிலை மாறவேண்டுமாயின் மழைநீரைச் சேமிப்பது அவசியமாகும். மழைநீரானது வெறுமனே வீணாகக் கடலுக்குச் செல்வதனைத் தடுத்து நிறுத்தி அதனை நமது அன்றாட தேவைகளுக்குப் பயன்படுத்தும் போது நிலத்தடி நீர் சேமிக்கப்படுகிறது. அத்துடன் மழைநீரைச் சேமிக்கும் போது அவற்றைப் பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்ளல், கட்டடம் கட்டுதல் போன்றவற்றிற்குப் பயன்படுத்தலாம்.

## மழை நீர் சேகரிப்பு முறைகள்

வானிலிருந்து பொழியும் மழையைச் சேகரித்து நீண்டகாலத்திற்குப் பயன்படுத்துவதற்கு பல முறைகள் இருக்கின்றன. பண்டைய காலத்தில் நமது முன்னோர்கள் மழைநீரைச் சேகரிப்பதற்காகப் பெரிய அளவிலான அணைக்கட்டுக்களையும் குளங்களையும் அமைத்தார்கள்.

அத்துடன் மலைச்சரிவுகளில் விழும் நீரை வயலிற்கு அனுப்புவதற்காக படிக்கட்டு முறையிலான கால்வாய்களையும், உருளை வடிவில் நிலத்தடிநீரைச் சேமிக்கும் அமைப்புகளையும் அமைத்தார்கள்.

தற்காலத்தில் நீரைச் சேகரிப்பதற்கு பல நவீன முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. நகர்ப்புறங்களில் மொட்டை மாடிகளில் மழைநீர் தொட்டிகள் அமைத்தும், கட்டடக்கூரைகளில் இருந்து விழும் மழைநீரை நிலத்தடியில் தொட்டிகள் அமைத்தும் சேகரிக்கும் முறைகள் காணப்படுகின்றன.



கிராமப்புறங்களில் கிணறுகள் மூலமும் தூர்வாரப்பட்ட குளங்கள் மூலமும் மழைநீர் சேகரிக்கப்படுகின்றது.



## மழைநீர் பாதுகாப்பு

இந்த உலகில் ஒவ்வொரு வருடமும் பெய்கின்ற மழையில் கிட்டத்தட்ட நாற்பது சதவீதம் மழைநீரானது வீணாகக் கடலைச் சென்றடைகின்றது. இந்த மழைநீரைச் சேமித்து வைத்தாலே உலகிலுள்ள தண்ணீர்ப்பஞ்சம் தீர்ந்துவிடும். மழையினால் கிடைக்கும் மிகுதி நீரானது நிலத்தினால் உறிஞ்சப்படுகிறது. ஆனால், தற்பொழுதுதான் நாகரிகமாக மாறிவிட்டதே… திறந்தவெளிகள் அனைத்தும் சிமெண்ட் தளங்கள் அமைத்து மூடப்பட்டுவிட்டது. இதன் காரணமாக நிலத்தினால் மழைநீரை உறிஞ்ச முடிவதில்லை.

இதன் காரணமாகத் தான் நிலத்தடி நீரின் அளவு குறைந்து வருகின்றது. அதற்கு மாற்று வழியாக கட்டடத்தைச் சுற்றி உறிஞ்சு குழிகளை அமைப்பது அவசியம். மழையை இவ்வுலகிற்கு வாரி வழங்குவதில் உயர்பங்கு வகிப்பது காடுகள். ஆகவே காடுகளை அழித்தால் மழை கிடைப்பது என்பது மிகவும் அரிதான ஒன்றாகிவிடும். எனவே காடுகளைப் பாதுகாப்பதும், மரங்களை மேலும் உருவாக்குவதும் நம் அனைவருடையவும் கடமையாகும்.

அனைத்து நாடுகளும் மழை நீர் சேகரிப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்டிவருவதையும் மழைநீர் சேகரிப்பில் ஈடுபடுவோரை ஊக்குவிப்பதனையும் காணலாம். மழைநீர் சேகரிப்பு என்பது ஒரு பணிமட்டும் இல்லை. மாறாக எதிர்கால நீர்வளத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு அரிய முதலீடு ஆகும். கடுமையான நீர்ப்பற்றாக்குறையை இவ்வுலகம் எதிர்நோக்கி வரும் இக்காலகட்டத்தில் இலவசக் கொடையாகக் கிடைக்கும் மழைநீரைச் சேமித்துப் பெருகிவரும் நீர்ப்பற்றாக்குறையைத் தடுப்போமாக.

## செயல்பாடுகள்

- நீர் பற்றாக்குறையைக் கவனத்தில் கொண்டு அதனைத் தடுப்பதற்கான தீர்வுகளைச் சுட்டிக்காட்டி ஒரு தலையங்கம் தயார் செய்யுங்கள்.
- உங்கள் பள்ளியில் மழைநீர் தொட்டி அமைப்பது தொடர்பாக மாவாட்ட ஊராட்சித் தலைவருக்கு மனு தயார் செய்யுங்கள்.
- 'மனித வாழ்வில் சுற்றுச்சூழலின் பங்கு' என்ற தலைப்பில் செயல்திட்டம் உருவாக்குங்கள்.
- இயற்கை பற்றிய பாடல்களைச் சேகரித்து சுற்றுச்சூழல் மலரில் வெளியிடுங்கள்.
- காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் சுட்டித் தலையங்கம் எழுதுங்கள்.
- தமிழர்களின் நீர் மேலாண்மை பண்பினை விளக்கி ஒரு கட்டுரை வரையுங்கள்.



அலகு 2

# நேசமே சுவாசம்



மனிதநேயச் செயல்கள்தான் மனித வாழ்வை உயர்த்தும். பிற உயிர்களிடத்தில் கனிவுடன் வாழ்தலே சிறப்பான வாழ்வு. மனித நேயம் ஒருவருக்கொருவர் உதவி செய்தல், தன்னம்பிக்கை, நல்லிணக்கம் போன்ற மனப்பான்மையை உருவாக்கும்.

ST-319-5-TAMIL (AT)-9-VOL-1

# உதவிக்கரம் நீட்டுவோம்



## ராஜா வந்திருக்கார்!



செல்லையா, தம்பையா, மங்கம்மாள் மூன்று பேரும் நெஞ்சோடு புத்தகக் கட்டுக்களை அணைத்துக்கொண்டு வீடு சேரும் போது, அவர்களுடைய தாயார் தாயம்மாள் வாசல் பெருக்கித் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தாள்.

மங்கம்மாள் ஒரே ஓட்டமாக ஓடி, "அம்மா...!" என்று தாயம்மாளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டாள். குனிந்து வாசல் தெளித்துக் கொண்டிருந்த தாய் செல்லமாக, "ஐயோ!... இது என்னடா இது!" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு அழுவது போலச் சிரித்தாள்! அம்மா 'அழுவ'தைக் கண்டு மங்கம்மாளுக்கு அடக்க முடியாதபடிச் சிரிப்பு வந்தது.

தாயம்மாள் வீட்டிற்குள் நுழைந்தாள். மூலையிலிருந்த ஒரு ஜாதிக்காய்ப் பெட்டியைச் சுட்டிக்காட்டி, "அந்தப் பெட்டியைத் திறந்து பாரு மங்கம்மா" என்றாள். மூவருமே ஓடிப்போய்ப் பெட்டியைத் திறந்தனர். பெட்டிக்குள்ளே இருந்த ஜவுளிப் பொட்டணத்தை வெளியே எடுத்து அவிழ்த்துப் பார்த்தனர்.

மறுநாள் விடிந்த பிறகு ஆரம்பமாகும் தீபாவளி, குழந்தைகளுக்கு ஆரம்பித்துவிட்டது. ஒரே குதூகலம்! ஒவ்வொரு துணியாக எடுத்து, "இது யாருக்கு இது யாருக்கு" என்று இனம் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பொட்டணத்தில் இரண்டு மல் பனியன்களும் இரண்டு கால் சட்டைகளும் ஒரு பாவாடையும் ஒரு பச்சை நிறமான சட்டையும் ஒரு நான்கு முழ ஈரிழைச்சிட்டைத் துண்டும் இருந்தன. துண்டைத் தவிர மற்ற உருப்படிகள் இன்னின்னாருக்குத்தான் என்று குழந்தைகளே பங்கு போட்டுவிட்டார்கள். உடனே செல்லையா கேட்டான் "துண்டு யாருக்கும்மா?"

"ஐயாவுக்கு" என்றாள் தாயம்மாள்.

அப்படின்னா உனக்கு?" என்று மங்கம்மாள் கேட்டாள்.

தாயம்மாள் சிரித்துக்கொண்டு "எனக்குத் தான் ரெண்டு சீலை இருக்கே இன்னும் எதுக்கு? எல்லோரும் புதுத்துணி எடுக்க நாம என்ன பணக்காரரா?" "ஐயாவுக்கு மட்டும் பிறகு புதுத்துண்டு எதுக்காம்?" என்றாள் மங்கம்மா, "வாயாடி! வாயாடி! ஐயாவுக்கு ஒரு துண்டுகூட இல்லே. துண்டு இல்லாமே எத்தனை நாளைக்குப் பழைய வேட்டியை உடம்பிலே போட்டுக்கிட்டு அலையறது?" என்று சொல்லிவிட்டு, மங்கம்மாளைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள் தாய். அந்தி மயங்கி, இருட்டத் தொடங்கியது. விளக்கேற்றுவதற்காகத் தாயம்மாள் எழுந்தாள் விளக்கேற்றிவிட்டுக் குழந்தைகளை வெந்நீரில் குளிப்பாட்டி விட்டாள்.

சாப்பாடு முடிந்தது. ராப்பாடம் படிக்க மாடக்குழியில் இருந்த அகல் விளக்கைத் தூண்டிவிட்டுக் கொண்டு அதன் முன்னால் மூன்று பெரும் உட்கார்ந்தார்கள்.

தாயம்மாள் சாப்பிட்டுவிட்டு, எச்சில் கும்பாக்களைக் கழுவ முற்றத்துக்கு வந்தாள். முற்றத்தின் மூலையில் கொஞ்ச தூரத்துக்கு அப்பால் ஒரு முருங்கை மரம் உண்டு. அதன் நிழலில் கருப்பாக ஓர் உருவம் தெரிந்தது. பக்கத்து வீட்டு நாயாக இருக்கும் என்று நினைத்து உள்ளே வந்துவிட்டாள்.

தம்பையா, அண்ணனைப் பார்த்து, துணைக்கு வாரயா?" என்று கூப்பிட்டான். இருட்டானதால் வீட்டு முற்றத்துக்குப் போய் ஒன்றுக்குப் போய்விட்டுவர – அவனுக்குப் பயம். செல்லையா துணைக்குப் போனான். இந்தச் சிறுவர்களின் கண்ணிலும் முருங்கை மரத்தடியில் இருந்த கருப்பு உருவம் தென்பட்டது. இருவரும் உருவத்தைக் கூர்ந்து பார்த்தார்கள்.

அது இவர்களைப்போன்ற ஒரு சிறுவனுடைய உருவம்தான். அவனுக்கு வயது எட்டு அல்லது ஒன்பது இருக்கும். அவன் உடம்பில் அழுக்கடைந்த கௌபீனம் ஒன்றைத் தவிர, வேறு உடைகள் கிடையாது,

தரையில் உட்கார்ந்தால் குளிரும் என்று, பாதங்கள் மட்டும் தரையில் படும் படியாக அவன் குந்திக் கொண்டிருந்தான். அவனுக்கு முன்னால் மூன்று எச்சில் இலைகள்.

கிராமத்தில் வெண்கலக் கும்பாவில் சாப்பிடாமல், இலை போட்டுச் சாப்பிடுகிற வீடு ராமசாமியின் வீடுதான். அந்த வீட்டின் வாசலிலிருந்துதான் அந்த எச்சில் இலைகளை எடுத்துக் கொண்டு வந்து, அவற்றில் ஒட்டிக் கொண்டிருந்த பருக்கைகளையும் கறிவகைகளையும் எடுத்து வாயில் போட்டுக் கொண்டிருந்தான். செல்லையாவோ தம்பையாவோ ஒன்றும் சொல்லாமல் பார்த்துக்கொண்டே நின்றார்கள். செல்லையாவுக்குத் திடீரென்று ஏதோ உதயமானது போல், "டேய்! ஏண்டா எங்க வீட்டு வாசலிலே வந்து உட்கார்ந்திருக்கே? போடா.. என்று அதட்டினான்.

சிறுவன் போகாவிட்டாலும் பயந்துவிட்டான்; அதனால் இடது கையால் தலையைச் சொறிந்துகொண்டு, அதிவேகமாக இலையை வழித்தான். "உங்க வீட்டுக்குப் போயேன்" என்றான் தம்பையா. மழை பலமாகப் பிடித்து விடும்போல இருந்தது. அதற்குள்ளாக அவனை விரட்டிவிட்டு, வீட்டிற்குள் ஓடிவிட முடிவு கட்டினார்கள்.

"போடா... இல்லாட்டி மேலே துப்புவேன்" என்றான் தம்பையா. சிறுவன் எழுந்திருக்கும் வழியைக் காணோம். அவனைக் காலால் மிதிக்க வேண்டுமென்று தம்பையா தீர்மானித்தான்.

மழை 'சட சட வென்று பெய்ய ஆரம்பித்துவிட்டது. வெளியே போன குழந்தைகள் மழையில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற திகைப்புடன் தாயம்மாள் ஓடிவந்து, "செல்லையா.." என்று கூப்பிட்டாள். ம்ம்" என்று பதில் வந்தது. "இருட்டிலே அங்க என்ன பண்றீங்க?" என்று சொல்லிக் கொண்டே மரத்தின் பக்கமாக வந்துவிட்டாள். அங்கே வந்து, நின்று யோசிப்பதற்கு நேரமில்லை; மழை. ஆகவே, மூன்று பேரையும் அவசர அவசரமாக வீட்டுக்குள்ளே அழைத்துக்கொண்டு ஓடிவந்தாள். "இது யாரம்மா?" என்று மங்கம்மாள் திகைப்போடு கேட்டாள்.

"யாரோ? யார் பெத்த பிள்ளையோ?" என்று சொல்லிவிட்டு, மழையில் நனைந்த குழந்தைகளைத் துவட்டப் பழைய துணியை எடுக்கப்போனாள். அவள் மறுபக்கம் திரும்பியதும், தம்பையா அம்மாவுக்குக் கேட்காமல், வாய்க்குள்ளேயே "போடா" என்று பயமுறுத்தினான். செல்லையா, 'போ' என்று அவனைப் பிடித்துத் தள்ளினான். இவர்கள் இருவரையும் பார்த்து மங்கம்மாளும் அர்த்தமில்லாமல் "போயேன்' என்று சிணுங்கிக்கொண்டே சொன்னாள்.

அவ்வளவுதான். திடீரென்று மடை திறந்த மாதிரி 'கோ' வென்று அழுது விட்டான். விஷயம் என்னவென்று தெரியாமல் பதைபதைப்புடன் ஓடி வந்தாள் தாயம்மாள். சிறுவன் அழுகையை அப்படியே நிறுத்திவிட்டான். ஆனால் பெருமூச்சு விடுவதை மட்டும் அவனால் நிறுத்த முடியவில்லை.

"சும்மா இரு தம்பி !... அழாதே!" என்று தாயம்மாள் சொன்னாள்.

இந்தா தம்பையா! இனிமே அப்படிச் சொல்லாதே!" என்று அதட்டிவிட்டு, "நீ யாரப்பா? உனக்கு எந்த ஊரு?" என்று தாயம்மாள் சிறுவனை விசாரித்தாள். "விளாத்திகுளம்" என்றான் சிறுவன். "உனக்குத் தாய்

தகப்பன் இல்லையா?" கேட்டாள் தாயம்மாள். உம். செத்துப் போயிட்டாக"

"எப்போ?"

"போன வருஷம் அம்மா செத்துப்போயிட்டா. ஐயா, நான் சின்னப் பிள்ளையாயிருக்கும் போதே செத்துப் போயிட்டாராம்."

"உனக்கு தம்பி ஒருத்தரும் இல்லையா?"

"இல்லை"

உடனே தம்பையா கேட்டான்: "தங்கச்சியும் இல்லையா?"

"இல்லை"

"பாவம்" என்று சொல்லிவிட்டுத் தம்பையா நிறுத்திக் கொண்டான்.

"இங்கே எதுக்கு என்று தாயம்மாள் கேட்டாள். "கழுகுமலைக்குப் போறேன்.'

"அங்கே ஆரு இருக்கா?"

"அத்தை" என்று பதில் சொன்னான் சிறுவன். அவன் விளாத்திக் குளத்திலிருந்து கால்நடையாகவே நடந்து அந்தக் கிராமம் வரையிலும் வந்திருந்தான். இந்த இருபது மைல் பிரயாணத்துக்கு நான்கு நாட்களாகிவிட்டன. நான்காவது தினத்தில் தான் இந்தக் கிராமத்தில் வந்து தங்க நேர்ந்தது. அதுவும் பொழுது இருட்டி விட்டதனாலும் பசியும் இருந்ததனாலும் தான். மறுநாள் விடிந்த பிறகு, எட்டு மைல் தூரம் நடந்து கழுகுமலைக்குப் போனால், அவனுடைய அத்தை தன் வீட்டில் அவனை வைத்துக் கொள்ளுவாளா, விரட்டி விடுவாளா என்பது அவனுக்குத் தெரியாது. அத்தையையும் அவன் பார்த்ததில்லை. எப்படியோ, ஒரு வழியில் அவனுக்கு அவள் அத்தை என்றும், 'அங்கே போ' என்றும் யாரோ சொல்ல, அதை நம்பிக்கொண்டு அந்தச் சிறுவன் விளாத்திக் குளத்திலிருந்து கால்நடையாகவே நடந்து வந்திருக்கிறான்.

மேற்கண்ட விவரங்களை எல்லாம் சிறுவனுடைய வாய் மொழி மூலமாகவே தாயம்மாள் அறிந்து கொண்டாள்.

"உன் பேரு என்ன?" என்று கடைசியாகக் கேட்டாள் தாயம்மாள், "ராஜா" என்றான் சிறுவன்,

அப்புறம் அவனுக்குச் சாப்பாடு போட்டார்கள். அவன் சாப்பிட்ட பிறகு, குழந்தைகளுக்குப் படுக்கையை எடுத்து விரித்தாள்.

தாயம்மாளுக்குத் திகைப்பாக இருந்தது. 'எதை மூடிக்கிறது? ஊம்? என்று ஒரு கணம் யோசித்தாள். அப்புறம், என் பிள்ளைகளை விடவா அந்தப் பீத்தல் பெரிசு? என்று சொல்லிக் கொண்டே எழுந்து போய், மறு நாள் கட்டிக்கொள்வதற்காக துவைத்து உலர்த்தி மடித்து வைத்திருந்த உண்மையில் 'பீத்தல்' இல்லாத நாட்டுச் சேலையை எடுத்துக்கொண்டு வந்து ராஜா உட்பட எல்லோருக்கும் சேர்த்துப் போர்த்தினாள்.

தாயம்மாளும் அகல் விளக்கை அணைத்துவிட்டுத் தலையைச் சாய்த்தாள்.

முதல் கோழி கூப்பிட்டதும் தாயம்மாள் கண் விழித்து விட்டாள். அப்போது மணி நாலு. நல்ல வேளையாக மழை அப்போதுதான் நின்றிருந்தது. சிறு தூவானம் மட்டும் ஓலைக் கூரையில் விழுவது, ஒரே நிதானத்துடன் சோளம் பொரிவது போலக் கேட்டுக் கொண்டிருந்தது..

தாயம்மாள் எழுந்து விளக்கை ஏற்றினாள். பழைய படியும் மழை பிடித்து விடக்கூடாதே என்று அவளுக்குப் பயம். அதனால் குழந்தைகளை எழுப்பி, விறுவிறு என்று குளிப்பாட்டிவிட்டு மற்ற வேலைகளைக் கவனிக்கலாம் என்று திட்டம் செய்தாள். குழந்தைகளுக்குப் படுக்கையை விட்டு எழுந்திருக்க மனமில்லை. கடைசியில் முனகிக் கொண்டும் புரண்டு படுத்துக் கொண்டும் ஒருவழியாக எழுந்து விட்டார்கள். அவள் ஒவ்வொரு குழந்தையாக எண்ணெய் தேய்த்து விட்டாள். ஆனால் ராஜா மட்டும் எண்ணெய் தேய்த்துக் கொள்ள முடியாது என்று சொல்லித் தூரத்தில் போய் உட்கார்ந்து கொண்டான்.

தீபாவளிக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்காவிட்டால் தோஷம் என்று சொன்னாள். ராஜாவுக்கோ என்ன சொன்னாலும் காதில் ஏறவில்லை. "அரப்புக் காந்தும்; நான் மாட்டேன்." என்று பிடிவாதமாகச் சொன்னான் ராஜா.

"அரப்புப் போடல்லே; சீயக்காய் போட்டுக் குளிப்பாட்டுறேன். குளிர்ச்சியாயிருக்கும்." "ஊஹூம்,"

"தம்பி, சொன்னாக் கேளுடா. என்னை உன் அம்மான்னு நெனைச்சுக்கோ. உனக்குக் காந்தும் படியாக நன் தேய்ப்பனா? வா, எண்ணெய் தேய்ச்சிக்குளி. இந்தத் தீபாவளியோடே பீடை எல்லாம் விட்டுப்போகும். குளிக்காம இருக்கக்கூடாதப்பா" இப்படி வெகுநேரம் கெஞ்சிய பிறகுதான் அவன் வேறு வழி இல்லாமல் சம்மதித்தான்.

தாயம்மாள் பயபத்திரமாகச் சீயக்காய்த் தூளைப் போட்டுத் தேய்த்த போதிலும், ராஜா பல தடவை 'ஐயோ, ஐயோ' என்று அழுதுவிட்டான். அவன் அழும்போதெல்லாம் அவள் இன்னிக்கோட உன் சிரங்கு குணமாயிரும் என்று மட்டும் மாறி மாறிச் சொல்லிக்கொண்டே இருந்தாள்.



அவள் தோசை சுட்டுக் கொடுத்தாள், அவளுடைய குழந்தைகள் புதுத் துணி உடுத்திக்கொள்ள வேண்டும் என்ற ஆவலினால் அவசர அவசரமாகச் சாப்பிட்டார்கள். தம்பையா கடைசித் தோசையைப் பாதியிலேயே வைத்து விட்டு எழுந்துவிட்டான். அவனால் மேற்கொண்டும் இரண்டு தோசைகள் சாப்பிட முடியும். இருந்தாலும் அவசரம். புதுத் துணிகளுக்கு மஞ்சள் வைத்துச் செல்லையாவும் உடுத்துக்



கொண்டான்; தம்பையாவும் உடுத்துக் கொண்டான். மங்கம்மாளும் பாவாடையும் சட்டையும் போட்டுக் கொண்டாள்.

ராஜா கௌபீனத்தோடு நின்றான்.

தாயம்மாளுக்குப் 'பகீர்' என்றது. இத்தனையும் செய்தும் புண்ணியமில்லாமல் போய்விட்டதே என்று கலங்கினாள். இந்த மாதிரியான ஒரு கட்டத்தை அவள் எதிர்பார்க்கவே இல்லை. துண்டை எடுத்துக் கொடுக்காமல் இருப்பதா? அவள் மனதுக்குள்ளே வேதனை மிக்க போராட்டம். மாதக் கணக்கில் ஒரு ரூபாய்த் துண்டு இல்லாமல் அவளுடைய கணவன் கஷ்டப்பட்டதையும், வீதிவழிப் போவதற்குக் கூசியதையும், ஒரு துண்டு வாங்க வழியில்லையே! என்று கணவன் துயரத்துடன் வாய்விட்டுப் புலம்பியதையும் நினைத்துப் பார்த்தாள். இந்தத் துயரத்தின் எதிர்புறத்தில், ஒன்றும் செய்யாமல், மௌனமாக நின்று கொண்டிருந்தான் ராஜா,

தாயம்மாளுக்குத் திக்குத் திசை தெரியவில்லை; ராஜாவின் முகத்தை எதற்கோ ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தாள். ராஜாவோ வெகுநேரமாகக் கண்கொட்டாமல் அவளையே பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தான்."

அப்போது மங்கம்மாள் எழுந்துவந்து அம்மாவின் கன்னங்களில் தன் உள்ளங்கைகளை வைத்து, தன் முகத்துக்கு நேராக அவளுடைய முகத்தைத் திருப்பினாள்; அப்புறம் ஏதோ ரகசியத்தைச் சொல்லுவதுபோலச் சொன்னாள்.

"பாவம்! அவனுக்கு அந்தத் துண்டைக்குடு அம்மா!"

குழந்தை இந்த வார்த்தைகளைச் சொல்லி நிறுத்தினாள். ஒரு நிமிஷம் மௌனம் நிலவியது. பிறகு, திடீரென்று தாயம்மாளின் முகம் கோரமாக மாறியது. முந்தானையால் முகத்தை மூடிக் கொண்டு கேவிக் கேவி அழுதாள். பெருமூச்சும் விம்மலும் வீட்டை அடைத்துக் கொண்டு கேட்டன. குழந்தைக்கு விஷயம் விளங்கவில்லை. மங்கம்மாள், தான் அப்படிச் சொன்னதற்காகத் தான் அம்மா அழுகிறாள் என்று பயந்துவிட்டாள்.

தாய், தன் பலத்தை எல்லாம் பிரயோகித்து அழுகையைத் தொண்டைக் குழியில் அமுத்தினாள். அவள் நெஞ்சு வெடித்துவிடும் போல் விம்மியது. குரலும் அந்த ஒரு நிமிஷத்தில் ஜலதோஷம் பிடித்ததுபோலக் கம்மலாகி விட்டது. பிறகு தழுதழுத்துக் கொண்டே சொன்னாள்:

"தம்பையா"

"என்னம்மா"

"ஹூம், ராஜாவுக்கு அந்தத் துண்டை எடுத்துக்குடு!"

ராமசாமியின் வீட்டுப் பக்கம் எச்சில் இலைகள் ஏராளமாகக் கிடந்தன. அங்கே நாலைந்து பேர் நின்று பேசிக் கொண்டும் வெற்றிலைப் பாக்குப் போட்டுத் துப்பிக் கொண்டும் இருந்தார்கள். ராமசாமி நீலநிறமான

கால்சட்டையும் அந்த ஊருக்கே புதிய புஷ்கோட்டும் போட்டுக் கொண்டு நின்றான். மங்கம்மாளைப் பார்த்ததும் அவன் பக்கத்தில் ஓடிவந்தான். மங்கம்மாளும் அவனைப் பார்த்து நடந்தாள். இருவரும் பாதி வழியில் சந்தித்துக் கொண்டனர். சந்தித்த மாத்திரத்தில், மிகவும் சந்தோஷத்துடன் ராமசாமி சொன்னான்.. "எங்க வீட்டுக்கு ராஜா வந்திருக்கார்!"

ஊர்க்காரர்களைப் போல அவனும் தன் அக்காள் புருஷனை ராஜா என்று சொன்னான். ஆனால் அவன் சொன்னதற்குக் காரணம் சந்தோஷம்தானே ஒழிய மங்கம்மாளைப் போட்டிக்கு அழைப்பதற்கு அல்ல ஆனால், அவளோ வேறுவிதமாக நினைத்து விட்டாள். முதல் நாள் பள்ளிக் கூடத்திலிருந்து வந்தபோது நடந்த போட்டிதான் அவள் ஞாபகத்தில் இருந்தது. அவன் சொன்னதற்குப் பதில் சொல்லி அவனுடைய பெருமையை மட்டம் தட்டவேண்டும் என்று அவள் மனம் துடித்தது..

அதனால் ஓர் அரை அடி முன்னால் நகர்ந்து வந்து நின்றாள். யாதொரு திகைப்பும், தயக்கமும் இல்லாமல் ராமசாமியைப் பார்த்து ரேகை சாஸ்திரியிடம் காட்டுவது போலக் கையை வைத்துக் கொண்டு, மிக மிக ஏளனமாகச் சொன்னாள்.

ஐயோ! உங்க வீட்டுக்குத்தானா ராஜா வந்திருக்கார்? எங்க வீட்டுக்கும் தான் ராஜா வந்திருக்கார். வேணும்னா வந்து பாரு.

– கு. அழகிரிசாமி

**கு. அழகிரிசாமி :** இவர் தமிழ்நாட்டிலுள்ள கோவில்பட்டி என்ற ஊரில் 23 செப்டம்பர் 1923 அன்று குருசாமி, தாயம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். 20 ஆம் நூற்றாண்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளராகத் திகழ்ந்த இவர் சிறுகதை, கட்டுரை, புதினங்கள், நாடகங்கள், மொழி பெயர்ப்புகள் என பல துறைகளில் சாதனை புரிந்துள்ளார். இதழாசிரியராகவும் பணியாற்றினார். இவர் எழுதிய அன்பளிப்பு என்னும் சிறுகதைத் தொகுப்பிற்கு சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது. 1970 ஆம் ஆண்டு ஜூலை 5 ஆம் நாள் இயற்கை எய்தினார்.

## செயல்பாடுகள்

- ராஜா வந்திருக்கிறார் என்னும் சிறுகதையை மையக்கரு, மொழி நடை, பாத்திரப் படைப்பு நோக்கில் விமர்சனம் செய்து எழுதுங்கள்.
- ராஜா வந்திருக்கிறார் சிறுகதையை நாடகமாக மாற்றி பள்ளி இலக்கிய மன்ற விழாவில் நடித்துக் காட்டுங்கள்.

## இலக்கியத்தில் மனிதம்

உண்டால் அம்ம, இவ்வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்;
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும், கொள்ளலர் அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே

(புறநானூறு 182)

இப்பாடல் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது. இப்பாடலை கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்ற அரசப் புலவர் பாடியுள்ளார். இவர் பாண்டிய மன்னர் ஆவார்.

தானம் கொடுக்கும் தகைமையும் மானத்தால்
குற்றம் கடிந்த ஒழுக்கமும் தெற்றெனப்
பல்பொருள் நீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை ஆர்க்கும் கயிறு

(திரிகடுகம் 23)

மூன்று நீதிகள் மனிதனின் அறியாமையாகிய நோயைப் போக்கி, வாழ்வை செம்மை பெறச் செய்ய உதவுமென்ற கருத்தமைந்தமையால், இந்நூல் திரிகடுகம் எனப்படுகிறது. இதனை இயற்றியவர் நல்லாதனார் ஆவார்.

பரிசு பெற்றோன் பெறாதோனை விளித்தல்
பீடுகெழு திருவின் பெரும்பெயர் நோன்தாள்
முரசுமுழங்கு தானை, மூவரும் கூடி
அரசனை இருந்த தோற்றம் போல
பாடல் பற்றிய பயனுடை எழாஅல்
கோடியத் தலைவ கொண்டது அறிந
அறியாமையின் நெறிதிரிந்து ஒராஅது
ஆற்றுஎதிர்ப் படுதலும் நோற்றதன் பயனே
போற்றிக் கேண்மதி, புகழ்மேம் படுந.

– பொருநராற்றுப்படை

சங்க இலக்கியம் பத்துப்பாட்டுள் ஒன்றான பொருநராற்றுப்படை என்னும் ஆற்றுப்படை நூலிலிருந்து எடுக்கப்பட்டது இப்பகுதி. கரிகால் வளவன் எனப்படும் சோழ மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டது இந்நூல் இதன் ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார்.

## செயல்பாடுகள்

- நல்வினை ஆர்க்கும் கயிறாக திரிகடுகம் கூறுவனவற்றை வரிசைப்படுத்துங்கள்.
- பதினெண் கீழ்க்கணக்கு நூற்களின் பெயர்களைக் கேட்டறிந்து வரிசைப்படுத்தி எழுதுங்கள்.
- பரிசில் பெற்று வந்த பொருநன் எதிரே வரும் பொருநனுடைய சிறப்பு இயல்புகளைப் புகழ்ந்து கூறியதைக் குறிப்பாக எழுதுங்கள்.

## ஒரு பிடி சோறு

எனது நண்பனும், ஆங்கிலத்தில் எழுதும் கவிஞனுமான ரஞ்சன் மகோபாத்ரா வந்திருந்தான். அவன் அமெரிக்காவில் ஆங்கில இலக்கியத்தில் ஆய்வு செய்பவன். பல வருடங்களுக்குப் பிறகு சென்னைக்கு வருகிறான். மாநகர வாழ்வும் கடற்கரையும் சாப்பாடும் அவனுக்குத் தன் சொந்த ஊரில் இருப்பது போலவே தோன்றுவதாகச் சொன்னான். நூலகம், சினிமா என இரு வார காலம் கடந்து போன பிறகு, 'தமிழ்நாட்டில் கட்டாயம் பார்க்க வேண்டிய இடம் என்று ஏதாவது இருந்தால் சொல்லு, போகலாம்!' என்றான். உடனே மனதில் ஒரு இடம் தோன்றியது!



மறுநாள் அதிகாலையில், நானும் அவனும் காரில் பயணம் செய்யத் துவங்கினோம். எங்கே செல்கிறோம்? என அவன் கேட்கவே இல்லை. நாங்கள் அந்த ஊருக்குள் போய்ச் சேர்ந்தபோது காலை பத்து மணி. சிறிய கிராமம் போன்ற இடத்துக்கு வந்திருக்கிறோமே என்ற தயக்கத்துடன், 'இங்கே ஏதாவது சோழர்களின் கற்கோவில் இருக்கிறதா?' என்று கேட்டான். 'நான் பார்த்து இன்று வரை வியந்தும் பெருமைப்பட்டும் வரும் ஒரு ஊர் இது. நீயே வந்து பார்!' என்று அழைத்தேன். அது ராமலிங்க வள்ளலார் வாழ்ந்த வடலூர்.

அறுகோண வடிவத்துடன் உள்ள அந்த மண்டபம் சுற்றிலும் கம்பி பாய்ச்சப்பட்டிருந்தது. சத்ய ஞான சபை எனப்படும் அந்த மண்டபம். அன்பே கடவுள்! என்ற உயர்ந்த கோட்பாட்டைப் பிரதிபலித்தது. 1871–இல் வள்ளலாரால் துவங்கப்பட்ட அந்தச் சபையின் உள்ளே நானும் அவனும் நடந்து சென்றோம். புறாக்களின் விம்மும் குரல் எங்கிருந்தோ கேட்டுக்கொண்டே இருந்தது. மிக வயதான ஒருவர் எங்களைப் பார்த்து "அருட்பெருஞ்சோதி தனிப்பெரும் கருணை" என்று கூறியபடி கையெடுத்து வணங்கினார். மண்டபத்தின் உள்ளே அணையாத தீபம் ஒன்று எரிந்துகொண்டு இருந்தது. விளக்கின் முன்னால் ஏழு நிறத் திரைகள் இருந்தன. ஒவ்வொரு திரையும் மனிதனின் அஞ்ஞானத்தைக் குறிப்பதாக வயதானவர் விளக்கம் சொன்னார்.



சபையின் உள்ளே சிலர் தியானத்தில் லயித்திருந்தனர். பார்வையற்ற ஒரு பெண் சப்பணமிட்டு அமர்ந்தபடி திரு அருட் பாவை முணுமுணுக்கும் குரலில் பாடிக்கொண்டு இருந்தார். இருவரும் வெளியே வந்தபோது ரஞ்சன், இது போன்ற தியான மண்டபங்களைக் கொல்கத்தாவில் பார்த்து இருப்பதாகச் சொன்னான். 'நீ இன்னும் முழுமையாகப் பார்க்கவில்லை. அமைதியாக என்னுடன் வா' என்று வெளியே அழைத்து வந்தேன். வெளியே வெயில், உச்சிக்கு வந்திருந்தது. 'நூற்றாண்டு காலமாக பசித்தவர்களுக்கு உணவு அளிக்கும் அறச்சாலையைப் பார்' என்று நான் காட்டிய கட்டிடம் ஒரு கோவிலைப் போல மௌனமாக இருந்தது. உள்ளே, மதிய உணவு தயாராகிக்கொண்டு இருந்தது. இந்த அறச்சாலையில் தினமும் ஆயிரம் பேருக்கு மேல் உணவு அருந்துகிறார்கள். 'நூறு வருடங்கள் கடந்தும் இன்னும் அணையாமல் எரிந்துகொண்டே இருக்கும் அடுப்பு இது!' என்று காட்டினேன். நீளமான அடுப்பு அது. அதில் கொழுந்துவிட்டு எரியும் நெருப்பின் சப்தம், 'உலகில் உள்ள மனிதர்களின் பசியைப் போக்குவது மட்டுமே தனது பெரும்பணி!' என்று உரத்துச் சொல்லிக் கொண்டு இருப்பது போலிருந்தது.

ரஞ்சன் அந்த நெருப்பை வியப்போடு பார்த்தான். 'இரவில்கூட இதை அணைக்க மாட்டார்களா?' என்று கேட்டான். 'ஆம், இது எப்போதும் எரிந்துகொண்டேதான் இருக்கும்... பக்கத்தில் வந்து பாருங்கள்' என்று சொன்னார் சமையல் செய்பவர். ஏதோ ரகசியம் பேசுவது போல நெருப்பின் குரல் கேட்டது. 'சாதிசமய பேதமின்றி, யாவரும் சமம் என்ற உயர்ந்த எண்ணத்தில் உணவு அளிக்கிறோம். இருந்து நீங்களும் சாப்பிட்டுவிட்டுச் செல்லுங்கள்!' என்றார் சமையல் செய்பவர்.

வாழை இலை போட்டு வடை பாயசத்துடன் அறுசுவை உணவு படைத்தார்கள். எங்களோடு பந்தியில் அமர்ந்து சாப்பிட்டவர்களில் பாதிப்பேர் வயதானவர்கள். ஏதேதோ ஊர்களில் இருந்து வந்து தங்கிவிட்டவர்கள். ஒன்றிரண்டு நோயாளிகள், கிராமத்து விவசாயிகள், குழந்தைகள் எனப் பந்தியில் இருநூறு பேருக்கு மேலிருக்கும். அத்தனை சுவையான உணவை வேறு எங்கும் நான் சாப்பிட்டது இல்லை.

தைப்பூசம் அன்று அங்கே ஒரு லட்சம் பேருக்கும் மேல் உணவு அளிக்கப்படுமாம். எங்கள் எதிரில் அமர்ந்திருந்த பார்வையற்ற பெண் கைகளைக் குவித்து முதலில் உணவை வணங்கினாள். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து சுவைத்துச் சாப்பிட்டாள். அவள் முகத்தில் சாந்தியும் அமைதியும் படிந்திருந்தது. சாப்பிட்டு முடித்ததும் சமையல் செய்தவர்களுக்கும், பரிமாறியவர்களுக்கும் கைகூப்பி நன்றி சொல்லியபடி வெளியே வந்து மர நிழலில் உட்கார்ந்தாள்.

'உலகம் முழுவதும் வன்முறையும் அழிவும் பெருகிவரும் வேளையில் மௌனமாக ஒரு கிராமம் எப்படி அன்பைச் செயல்படுத்திக் காட்டிக் கொண்டே இருக்கிறது! நூற்றாண்டுகளாக தொடர்ந்து வரும் இந்த அறம் தமிழ் மக்களை எவ்வளவு மாற்றியுள்ளது?' என்று ரஞ்சன் கேட்டான். நான் அமைதியாக,

'இங்கு அளிக்கப்படும் உணவு முழுவதும் வள்ளலாரின் அறக்கோட்பாடுகளின் மீது விசுவாசம் கொண்டவர்கள் அளிக்கும் நிதியிலிருந்துதான் சாத்தியமாகிறது. இங்கு சமைப்பவர்கள்கூட ஒரு சேவையாகத்தான் இதைச் செய்கிறார்கள். உண்மையில் இவர்கள் யாவர் மனதிலும் அன்பும் கருணையுமே நிரம்பியிருக்கிறது!' என்றேன்.

ரஞ்சன் என் கைகளைப் பிடித்தபடி, 'சரியான இடத்துக்குதான் என்னை அழைத்து வந்திருக்கிறாய்' என்றான் உணர்ச்சிப் பெருக்குடன்.

–எஸ். ராமகிருஷ்ணன்

**எஸ். ராமகிருஷ்ணன் :** இவர் 1966 ஏப்ரல் 13 ஆம் நாள் விருதுநகர் மாவட்டத்தில் மல்லாங்கிணர் என்னும் ஊரில் பிறந்தார். இவரது பெற்றோர் சண்முகம், மங்கையர்க்கரசி என்போராவர். சிறந்த இலக்கியவாதி, பேச்சாளர், படைப்பாளர். நெடுங்குருதி, உறுபசி, துயில், நிமித்தம் போன்ற எண்ணற்ற படைப்புகளைப் படைத்துள்ளார். இவர் சஞ்சாரம் என்ற நாவலுக்காக சாகித்திய அகாதமி விருதினைப் பெற்றார்.

## செயல்பாடுகள்

- சத்திய ஞான சபையின் சிறப்புகளைக் கலந்துரையாடிக் குறிப்பாக எழுதுங்கள்.
- பள்ளிஇலக்கியமன்றத்தில் உரையாற்ற 'தானத்தில் சிறந்தது அன்னதானம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவுரை தயாரியுங்கள்.
- அன்பே கடவுள் என்னும் கோட்பாட்டிற்கு ஏற்ப உன் வாழ்வில் நடந்த ஏதேனும் நிகழ்ச்சியைப் பற்றிக் கலந்துரையாடல் நடத்துங்கள்.



# தன்னம்பிக்கை



## பிரணவ மந்திரம்

தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும்
தரத்தினில் குறைவதுண்டோ உங்கள்
அங்கத்திலே ஒரு குறை இருந்தாலும்
அன்பு குறைவதுண்டோ

சிங்கத்தின் கால்கள் பழுது பட்டாலும்
சீற்றும் குறைவதுண்டோ
சிந்தையும் செயலும் ஒன்றுபட்டாலே
மாற்றம் காண்பதுண்டோ

பல ஆண்டுகளுக்கு முன் கவியரசு கண்ணதாசன் ஒரு திரைப்படத்திற்காக எழுதிய பாடல் வரிகள் இவை. எவ்வளவு உண்மை! உடல் உறுப்புகளில் ஏதேனும் குறைபாடு உடையவர்களை ஊனமுற்றவர்கள் என்று சொல்லிவந்தோம். ஆனால் இத்தகையோர் இன்னொரு நிலையில் ஆற்றல் மிகுந்தவர்களாக இருப்பார்கள். எனவே இப்போது ஊனமுற்றவர்கள் என்பதற்குப் பதிலாக 'மாற்றுத்திறனாளி' என்றே சொல்லிவருகின்றோம். உடல் ஊனத்தைப் பொருட்படுத்தாமல் அதைப்பற்றிக் கவலைப்படாமல் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் மாற்றுத்திறனாளிகளை உலகெங்கும் காணலாம். ஓவியம், சிற்பம் நாட்டியம். இசை முதலான கலைகளிலும் பல்வேறு



விளையாட்டுகளிலும் இவர்கள் அனைவரையும் ஆச்சரியப்படுத்தும் சாதனைகள் படைத்து வருகின்றனர். அவர்களில் ஒருவராக நாடறியும் பல்துறைத் திறனாளியாகப் பிரபலமானவர் திரு. பிரணவ்.

இவர் கேரளத்தில் பாலக்காடு மாவட்டத்தில் ஆலத்தூர் என்ற ஊரில் திரு. பாலசுப்பிரமணியன், திருமதி. சொர்ணகுமாரி ஆகியோரின் இரண்டாவது மகனாகப் பிறந்தார். இப்போது இருபத்தைந்து வயதாகிறது. பிறக்கும்போதே இரண்டு கைகளும் இல்லாமல் பிறந்தவர் பிரணவ். கைகளுக்குப் பதிலாகக் கால்களைப் பயன்படுத்த அவருக்குப் பயிற்சி கொடுத்தனர் பெற்றோர்கள். பின்னர் கால்விரல்களால் எழுதப் பயிற்சிபெற்றார். கால் விரல்களுக்கு இடையே கரண்டியை வைத்துச் சாப்பிடவும் பழகிக்கொண்டார். நாளடைவில் காலும் கால்விரல்களும் கையும் கைவிரல்களும் போல் அவருக்குப் செய்யத்தொடங்கினார். காலை உயர்த்தி ஸ்விட்ச் போடுவார். வலதுகால் விரலில் பேனா வைத்து எழுதுவார். அருமையாக ஓவியங்கள் வரைவார். வீட்டைப் பெருக்கித் துடைப்பார். கிளாஸைப் பிடித்து பானியங்கள் குடிப்பார். இப்போது ஆண்ட்ராய்டு கைப்பேசியையும் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார். சமூக ஊடகங்களை நன்றாகவே பயன்படுத்துகிறார். குளிப்பதற்கும் உடைகள் மாற்றுவதற்கும் மட்டும் அவருக்குப் பிறர் உதவி தேவைப்படுகிறது.

இளம் வயதில் அவரது இயலாமையைக் கண்டு பெற்றோர்களும் மற்றவர்களும் உதவினர். ஆனால், அவரிடம் அன்பைக் காட்டுங்கள். அனுதாபம் காட்டவேண்டாம். தமது வேலையைத் தாமே செய்ய அவரைச் சுதந்திரமாக விட்டுவிடுங்கள் என்று பலரும் அறிவுரை கூறினர். மிகவும் பாடுபட்டு, வருந்தி அவரது வேலைகளை அவரே செய்வதைப் பார்த்தபோது பெற்றோர்களுக்கு வருத்தமாகத்தான் இருந்தது. ஆனாலும் அவர்கள் மனக்கவலையை அடக்கிக் கொண்டனர். அந்த ஊக்கப்படுத்தலே பிரணவுக்கு ஒரு தன்னம்பிக்கையைக் கொடுத்தது. தமது இயலாமையை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு கடின முயற்சியால் முன்னேறினார். படிப்பிலும் பிரணவ் சிறந்து விளங்கினார். பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு பாலக்காடு சிற்றூர் அரசுக் கல்லூரியில் படித்து இளங்கலை வணிகவியலில் நல்லமுறையில் வெற்றிபெற்றார்.



பிரணவ் இளமையாக இருக்கும்போதே கால்விரல்களால் அழகழகான ஓவியங்கள் வரைவதில் ஆற்றல் பெற்றிருந்தார். ஓவியம் என்றால் அவருக்கு உயிர். அவர் கால்களால் வரைந்த ஐம்பது ஓவியங்கள் விற்றுக் கிடைத்த தொகையை 2018 வெள்ளப்பெருக்கு நிவாரண நிதிக்கு வழங்கினார். நேரடியாகக் கேரள முதல்வர் அவர்களைச் சந்தித்து இந்நிதியை வழங்கியது குறிப்பிடத்தக்கது. அப்போது முதல்வருடன் ஒரு செல்ஃபி எடுக்க ஆசைப்பட்டார் இரண்டு கைகளும் இல்லாதவர்

எப்படி செல்ஃபி! முதல்வர் ஆச்சரியப்பட்டிருக்கலாம். ஆனால் தன் காலால் அதை எடுத்துக் காட்டினார் பிரணவ். அழகான ஒரு படம் அடுத்தநாள் எல்லா நாளிதழ்களுமே இதை ஒரு செய்தியாகக் கொடுத்திருந்தன. கொரோனா காலத்திலும் பல படங்கள் வரைந்து அதன் வாயிலாகக் கிடைத்த தொகையை கொரோனா நிவாரண நிதிக்கு வழங்கினார். கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர். நடிகர்கள் மோகன்லால், ரஜனிகாந்த் போன்றாரின் படங்கள் வரைந்து அவர்களுக்கு வழங்கி அன்பும் ஆசியும் பெற்றுள்ளார்.

பள்ளியில் படிக்கும்போது இசையிலும் பாடலிலும் பிரணவுக்கு ஆர்வம் இருந்தது. சில ஆசிரியைகளின் உதவியுடன் அதிலும் தம் திறமையைக் காட்டினார். நல்ல ஒரு பாடகராக மாறினார். விளையாட்டிலும் குறிப்பாக ஓட்டப்பந்தயத்தில் மிகுந்த ஆர்வம் காட்டினார் பிரணவ். மாநில, தேசிய அளவில் தங்கப் பதக்கங்கள் பெற்றார். 2019 இல் நடைபெற்ற 'பாராலிம்பிக்ஸ்' போட்டியில் 400 மற்றும் 800 மீட்டர் ஓட்டங்களில் தமது திறமையை வெளிப்படுத்தினார்.

தமது சகோதரர் பிரவீனின் உதவியுடன் ஏழாவது வகுப்பு படிக்கும்போதே சைக்கிள் ஓட்டவும் கற்றுக்கொண்டார். இப்போது நன்றாக சைக்கிள் ஓட்டுவார். ஐம்பது கிலோமீட்டர் தூரம் சைக்கிள் ஓட்டி நெகிழிக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார் என்பது அவரது சமூக ஈடுபாட்டைக் காட்டுகிறது. இனி, பூமியைக் காப்பாற்றுங்கள் என்ற கருத்தைப் பிரச்சாரம் செய்யவும் மக்களிடயே சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சைக்கிளில் இந்தியப் பயணத்தை மேற்கொள்ளவேண்டும் என்பது பிரணவின் ஆசை.

பெற்றோர், உற்றார், கற்றுத்தந்த ஆசிரியர் உடன்படித்த நண்பர்கள் நாட்டு மக்கள் ஆகியவர்களின் ஆக்கமும் ஊக்கமும் உதவியும் கிடைத்ததால்தான் நான் இந்த நிலையை அடைந்தேன் என நன்றியுடன் நினைவுகூர்கிறார் பிரணவ். நான் இரண்டு கைகளுமே இல்லாமல் பிறந்தபோது என் பெற்றோர்கள் நடுக்கம் அடைந்திருக்கலாம். கவலைப் பட்டிருக்கலாம். ஒரு பாரமாகக் கூட நினைத்திருக்கலாம். இப்போது அவர்கள் மகிழ்ச்சியோடு சொல்கிறார்கள். உன்னால் நாங்கள் புகழும் பெருமையும் அடைந்தோமென்று அவர்களின் இந்தக் கூற்றால் நான் என் இயலாமையை மறக்கின்றேன்" என்கிறார் பிரணவ்.

பிரணவின் வாழ்க்கை எல்லோருக்கும் ஒரு பிரணவ மந்திரம்தான்!

## செயல்பாடுகள்

- பிரணவ் வரைந்த ஓவியங்களின் கண்காட்சி உம் பள்ளியில் ஜூலை 10 அன்று நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு தயாரியுங்கள்.
- உங்கள் பள்ளி விளையாட்டு தினத்தன்று பிரணவ் வருகை தர உள்ளார். அவரை வரவேற்கும் பொருட்டு வரவேற்புரை தயாரியுங்கள்.

- தன்னம்பிக்கை தொடர்பான பழமொழிகள், பொன்மொழிகளைத் திரட்டி வெளியிடுங்கள்.
- தமிழகத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி மாரிமுத்து குறித்து குறிப்பு தயாரியுங்கள்.

## பூமியின் தேவதை



அன்னை தெரேசா செய்து வரும் அரும்பணிகளில் அடுத்த கட்டப் பணி தொழுநோயாளிகளைப் பராமரிக்கும் பணி.

நோய்களிலேயே ராஜநோய் தொழுநோய். மனிதனே மனிதனை நேயம் கொள்ள மறுக்கும் மாபெரும் நோய். பாதி மேனியில் மீதி வாழ்க்கையை நடத்தும் மனிதப் பிறவிகள்.

உற்றார் உறவினர்களாலும் சமூகத்தாலும் புறக்கணிக்கப்பட்ட நோயாளிகள். இவர்களைத் தொட்டுத் தூக்குகிற தோழமை உணர்வு யாருக்கு வரும்?

அன்னையின் அடிமனதில் கேள்வி வேள்வியானது! ஒரு நோயால் ஒரு மனிதனை இவ்வளவு ஊதாசீனப் படுத்தப்படுவதைத் தாங்க முடியாமல் தவித்தார். அதன் விளைவாக நிர்மல் ஹிருதய் இல்லத்திலேயே ஒரு பகுதி தொழுநோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்டது.

ரயில் நிலையங்களிலும், பேருந்து நிலையங்களிலும், பிச்சைத் தொழிலால் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த இந்த தொழுநோயாளிகளுக்காக, 1952லிருந்து முயற்சித்து, 1959ல் பேராயர் பெரியெர் வழியாக தொழுநோய் மருத்துவமனை ஹவுராவில் திறக்கப்பட்டது.

தொழுநோயாளர்களுக்கு மனமுவந்து உதவி செய்ய பல பெண்கள் இயக்கத்திற்கு அன்னை அழைப்பு விடுத்தார். பலரும் பல இயக்கங்களிலிருந்து வந்து சேர்ந்தார்கள்.

இந்த இல்லம் திறப்பதற்கு முன்பெல்லாம், அன்னை தில்லியில் உள்ள கத்தோலிக்க பொது நல இயக்கம் அன்பளிப்பாக வழங்கியிருந்த மருத்துவ ஊர்தியில் சென்று எல்லாப்பகுதிகளிலும் உள்ள தொழு நோயாளர்களைப் பார்த்து வருவார். அதன் பிறகு மோட்டிஜில் என்ற இடத்தில் இரண்டாவது தொழு நோய் நிலையம் அமைக்கப்பட்டது.

அதைவிட, கல்கத்தாவிலிருந்து 200 மைல் தொலைவில் உள்ள டிட்டாகூர் எனும் வெட்ட வெளி பொட்டலைப் பார்த்த அன்னை,

தொழுநோயாளர்களின் மறுவாழ்வுக்கு ஏற்ற இடமாக இருக்கிறது, அதை எப்படியாவது அரசிடமிருந்துப் பெறவேண்டும் என்ற உணர்வால், அப்போது மேற்கு வங்கத்தின் முதல்வராக இருந்த பி.சி. ராயிடம் தனது எண்ணங்களையெல்லாம் எடுத்து வைத்தார்.

முதல்வரும் முகமலர்ச்சியுடன் அந்தக் கருத்தைக் கவனத்தில் கொண்டு, தரிசு நிலமாக இருந்த 34 ஏக்கர் நிலத்தைத் தொழுநோயாளர் குடியிருப்பிற்காக அளித்துவிட்டார்.

இடம் வாங்கிய பிறகு, வீடுகளைக் கட்ட கல்கத்தா நகர் மக்களிடமே நிதி திரட்ட நினைத்தார். மகளிர் இயக்கங்கள் மூலமாக, "உங்கள் அனுதாபத்தால், தொழுநோயாளியைத் தொடுங்கள்" என்ற வேண்டுகோளை – பத்திரிகைச் சுவரொட்டி மூலம் வெளியிட்டு நிதி திரட்டினார்.

கண்கவர் தோட்டங்களுக்கிடையே, இன்று அந்த இடம் 200 குடியிருப்புகளைக் கொண்டு "சாந்தி நகர்" எனப் பெயர் பெறுகிறது. தற்போது, "காந்திஜி பிரேம் நிவாஸ்" என்று அழைக்கப்படுகிறது. இந்த நகர் பல பிரிவுகளைக் கொண்டது.

தொடக்க நிலை தொழுநோயாளர்கள் ஒரு பகுதி, முற்றிப்போன தொழுநோயாளர்கள் ஒரு பிரிவு. நோய் நீங்கி குணமானவர்கள் ஒரு பகுதி. இந்தப் பிரிவினருக்குத்தான் பல குடிசைத் தொழில்கள்: பாய் பின்னுதல், பொம்மை செய்தல், கயிறு திரித்தல் போன்ற கைத்தொழில் கற்பிக்கப்ப்டுகின்றன. எனவே வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்கு அவை வருவாய் தருகின்றன.

அன்னை வெறும் நோய்களைக் குணப்படுத்தும் குணவதியாக மாத்திரமல்ல ….. எதிர்வரும் வாழ்விற்கு ஏற்றம் நிறைந்த பாதையும் அமைத்துக் கொடுக்கிற பாவையாக நிலைபெற்றிருக்கிறார்.

தொழுநோயாளர்களே தொடர்ந்து தொய்வில்லாமல், ஒவ்வொரு தொழிலாக ஆரம்பித்தனர். முதலில் செங்கல் சூளை, பால்பண்ணை, பிறகு அச்சுக்கூடம் என்று வருவாய் ஈட்ட வழிகளை மேற்கொண்டார்கள்.

இருமிக் கொண்டிருக்கிறவனைப் பார்த்தாலே, இரண்டடி தூரமாகிப் போகிற துயரமான மனித உறவுகளுக்கு மத்தியில் அழுகிக் கொண்டிருப்பவனை அள்ளியெடுத்து அரவணைப்பதென்பது அவ்வளவு சாதாரணமல்ல.. அந்த அசாதாரணப் பணியைப் பார்த்துதான் அகிலமே அசந்து போகிறது.

– வின்செண்ட் சின்னதுரை

இப்பாடப்பகுதியானது பூமியின் தேவதை என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. அருட்பணியாளர் வின்செண்ட் சின்னதுரை அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார்.

## செயல்பாடுகள்

- தொழு நோயாளிகளுக்கு தன்னம்பிக்கையூட்டிய தொழில்களைப் பட்டியலிடுங்கள்.
- அன்னைத் தெரசாவின் வாழ்க்கைக் குறிப்பினை தன் விவரப் பட்டியலாக மாற்றி எழுதுங்கள்.
- தன்னம்பிக்கை குறித்த பழிமொழி/பொன்மொழிகளைத் திரட்டுங்கள்.

## வள்ளுவத்தில் தன்னம்பிக்கை

### தன்னம்பிக்கை

ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்புகள் உண்டு. ஒன்று அவன் தன் தாய் வயிற்றில் குழந்தையாகப் பிறப்பது. மற்றொன்று, அவன் தன்னிலிருந்து தன்னை மனிதனாகப் பிரசவித்துக் கொள்வது. முன்னது உடல் சார்ந்தது; அடுத்தது மனம் சார்ந்தது. எனவே தான் ஆளுமைபற்றி எழுதும் எழுத்தாளர்கள் மனம் பற்றி அதிகம் சிந்திக்கிறார்கள். பெற்றோர் உனக்கிட்ட பெயரோடு நின்றுவிடாதே; உன்னுடைய சிறப்புப்பெயர் உன்னிலிருந்து உருவாகட்டும்" என்பது ஒரு சிந்தனை.



காலம் என்ற சிற்பி நம்மைச் செதுக்கிக் கொண்டிருக்கிறான். அதில் நாம் சிற்பமா? சிதறி விழும் கற்களா? நாம் சிற்பமாகத்தான் ஆகவேண்டும். அதற்குச் சாதனைகள் செய்ய வேண்டும். சவால்களைச் சந்திக்காமல் சிகரங்களைத் தொட முடியாது. அதற்குத் தேவையானவற்றைப் பட்டியலிடுகிறார் திருவள்ளுவர்.

வலியறிதல் என்னும் அதிகாரத்தில் வரும் குறள்.

"வினைவலியும், தன்வலியும், மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்".

நாம் மேற்கொள்ளப் போகிற செயலின் தன்மை என்ன? அதை நிறைவேற்ற என்னிடம் உள்ள ஆற்றல் என்ன? எதிர்கொள்ள முடியும் என்ற தன்னம்பிக்கை உள்ளதா? எதிரியின் வலிமையைப் புரிந்து கொண்டோமா? நமக்குத் துணை நின்று உற்சாகப்படுத்துகிற நட்பு வட்டம் உள்ளதா?

இவற்றில் மிக முக்கியம், இது என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கை.

"முடியுமா? என்பது மூடத்தனம்; முடியாது என்பது
கோழைத்தனம்; முடியும் என்பதே மூலதனம்"

இந்த உந்து சக்திதான் ஒருவனை வெற்றியாளன் ஆக்குகிறது. எல்லாம் நன்றாக வாய்த்திருந்தும், இது என்னால் முடியாது என்று நடுங்குகிறவனுக்கு வெற்றி இல்லை.

## எண்ணத்தின் வலிமை

முடியும் என்ற நம்பிக்கையே ஒரு செயலை முடித்து வைக்கும். எவன் எந்தச் செயலில் நம்பிக்கை வைக்கிறானோ அவன் அதுவாகவே ஆகிறான் என்கிறது கீதை.

எண்ணங்களின் தன்மைக்கேற்ப நமது செயல்கள் அமைகின்றன. ஊக்கத்துக்குத் தக்கவாறுதான் உயர்கின்றோம். நம்பிக்கைக்குத் தக்கவாறு நடக்கின்றன.

"வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு".

என்கிறது திருக்குறள். தண்ணீரின் உயரத்துக்குத் தக்கபடி உயரும் தாமரை போல உள்ளத்துக்குத் தக்கபடி உயர்கிறது எண்ணம்.

## தன்னம்பிக்கையின் எதிரிகள்

தன்னம்பிக்கை கொண்டவன், அதிலே நிலைத்திராமல் தடுமாறினால் சிக்கல்தான். அவனை அப்படித் தடுமாற வைக்கிற எதிரிகள் யார்? யார்? குறித்த வேலையைக் குறித்த நேரத்தில் செய்து முடிக்காமல் தள்ளிப்போடுகிற தாமத குணம், மறதியினால் வரும் கேடு, சோம்பல், நீண்ட நேரத் தூக்கம் இவைகள்தான். நீண்ட நேரத் தூக்கம் என்பது தேவையினால் ஏற்பட்டதல்ல; பழக்கத்தால் ஏற்பட்டது என்கிறார் ஓர் அறிஞர்.

'நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்'

என்கிறது வள்ளுவம்.

## நம்பிக்கையை நடத்திவைக்கும் நன்மருத்து

தளராத தன்னம்பிக்கை நமக்குள் இருக்குமானால், அதனை நிறைவேற்றித் தரும் வல்லமையை முயற்சியே வழங்கும். ஆள்வினை உடைமை அதிகாரத்தில்,

'அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்'.

என்று குறள் பேசுகிறது.

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்",

என்கிறது மற்றொரு குறள்.

## நல்ல எண்ணம் வேண்டும்

எதையாவது நினைத்து குறுக்கு வழியில் முன்னேறிவிடலாம் என்று நினைத்தால் அந்த வெற்றி தற்காலிகமானதுதான். 'உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்' என்கிறார் திருவள்ளுவர். அப்போதுதான் செயலில் தெளிவு இருக்கும். தேவை இல்லாத அச்சம் ஏற்படாது. மிகவும் கம்பீரமாக செயலில் ஈடுபடலாம். வெற்றிக் கனியைப் பறிக்கலாம்.

தளராத ஊக்கத்தோடு உண்மையாக உழைப்பவர்களின் முகவரியைத் தெரிந்து கொண்டு செல்வமும், புகழும் வந்து சேரும்.

### சோம்பலில் சுருங்கிப் போகாதீர்

ஊக்கத்துக்குப் பரம எதிரி சோம்பல். அதில் சிக்குண்டவர்கள் தனது குடும்பத்தைச் சிறப்புடையதாக ஆக்க இயலாது. தனது சுயநலச் சோம்பலால் தன்னைச் சார்ந்தவர்கள் பாதிக்கப்படலாமா?

மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்

என்கிறார் திருவள்ளுவர்.

மடி என்றால் சோம்பல். சோம்பல் மட்டுமல்ல. விரைந்து செய்ய வேண்டிய செயலை மெதுவாகச் செய்வது, உரிய நேரத்தில் செய்ய வேண்டியதை மறந்து விடுவது. அதை விடவும் அதிக நேரம் தூங்கித் தொலைவது.

தூக்கத்தில் சுகம் காண்பவர்கள்
ஆக்கத்தில் சோகம் காண்பார்கள்

மறதி, ஒரு மோசமான குணம். மறதியால் பாதிக்கப்பட்ட ஒருவர் மருந்துக்கடைக்குப் போய் மறதிக்கு மருந்து இருக்கா? என்று கேட்டார். இருக்கு. ஆனா அதை எங்க வச்சிருக்கோம்னு தெரியலை என்று பதில் வந்தது. கடை வைத்து என்ன பயன்?

### துன்பத்தில் துவளாதீர்

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில்",

வெற்றிச் சிகரத்தை அடைய விரும்புவோர்க்கு வள்ளுவர் தரும் அரும் மருந்து இந்தக் குறள்.

பிரச்சினை வரும்போது மிரண்டுவிடாதீர்கள். அதைப்பார்த்துச் சிரியுங்கள். ஏனென்றால் துன்பம் நிரந்தரமானதல்ல. அதனை அடுத்து வருவது சிறப்பானதாக இருக்கும். இதுதான் வாழ்க்கைத் தத்துவம். இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

### திருக்குறளின் குறிக்கோளும் கொள்கையும்

திருக்குறள் தனிமனிதனின் வாழ்க்கைக்கும், சமூகப் பொது வாழ்க்கைக்கும் வழிகாட்டும் நூல்; நல்லன எவை, அல்லன எவை எனச் சுட்டிக்காட்டும் நூல்; கடமைகளை வலியுறுத்தும் நூல்; நற்பண்புகளையும் நற்செயல்களையும் வரையறுக்கும் நூல், தீய பண்புகளையும் தீய செயல்களையும் வெறுத்து ஒதுக்கும் நூல்; சால்பினை வற்புறுத்தும் நூல்; அறிவுக்கும் ஆற்றலுக்கும் மதிப்பு அளிக்கும் நூல்; முயற்சிக்கும் ஊக்கத்திற்கும் ஆக்கந்தரும் நூல்; உழைப்பையும் உற்பத்திப் பெருக்கத்தையும் வலியுறுத்தும் நூல்; மனிதகுலம் முழுவதும் ஒன்றே என்பதை வலியுறுத்தும் நூல்; சிறந்த காதலின்ப வாழ்வைப் போற்றும் நூல்.

திருக்குறளை,
வாசிப்பது மட்டுமல்ல,
நேசிப்பது மட்டுமல்ல,
சுவாசிக்க வேண்டும்

வள்ளுவத்தை வாழ்வியல் ஆக்க வேண்டும்.

– முனைவர் இளசை சுந்தரம்

**முனைவர் இளசை சுந்தரம் :** இவர் 16.7.1946 ஆம் ஆண்டு எட்டயபுரத்தில் பிறந்தார். ஒரு சிறந்த சொற்பொழிவாளர், எழுத்தாளர், வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர். 1970 முதல் 1976 வரை எட்டயபுரம் ராஜா மேனிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். சாதகப் பறவைகள், நகைச்சுவை நந்தவனம், வாங்க சிரிச்சுட்டுப் போகலாம், கர்ம வீரரின் காலடிச் சுவடுகள், பலியாடுகள் போன்ற படைப்புகளைப் படைத்துள்ளார்.

## செயல்பாடுகள்

- "வெள்ளத்து அனைய மலர்நீட்டம் – மாந்தர்தம்
  உள்ளத்து அனையது உயர்வு" – குறள்

  "நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற
  நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" – மூதுரை

  இரண்டினையும் ஒப்பீடு செய்து எழுதுங்கள்.

- பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
  ஆள்வினை இன்மை பழி – குறள் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுங்கள்.

- அகரவரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்
  மடி, துயில், அசைவாமை, ஊழ்



# நல்லிணக்கம்





## நாடு!

அறம்நாடு அருள்நாடு அன்பை நாடு
அடக்கத்தை ஆள்வினையை அறிவை நாடு
திறம்நாடு தெளிவான கொள்கை நாடு
திட்டமிட்டுச் செயலாற்றும் திட்பம் நாடு.
இறவாத புகழ்நாடு எளிமை நாடு
எல்லார்க்கும் வழங்குகிற ஈகை நாடு
சிறந்துயர்ந்து பெருமைபெறும் வழிகள் நாடு
செய்ந்நன்றி மறவாத சீர்மை நாடு!
இன்சொல்லை நற்பண்பை என்றும் நாடு
இரக்கத்தை ஒப்புரவை இனிதே நாடு
நன்மையினைப் பிறர்க்காற்றி நட்பை நாடு
நாடுமொழி காக்கின்ற உணர்வை நாடு
உண்மையினை ஒழுக்கத்தை உயர்வாய் நாடு
உறவோரை மதிக்கின்ற தகைமை நாடு
புன்செயல்கள் புறந்தள்ளிப் பொதுமை நாடு
புலமையினால் பிறர்நெஞ்சில்இருப்பை நாடு!
வல்லவனாய் வரலாறு படைக்க நாடு
வருங்காலம் வயப்படவே வளமை நாடு

கல்லாமை இல்லாமை நீங்க நாடு
கடமையினை நிறைவேற்றும் கருத்தை நாடு!
பொல்லாத பழிகளைந்து பொறுமை நாடு
புத்தாக்கச் சிந்தனையில் புரட்சி நாடு
நல்லவனாய் வாழ்கின்ற எண்ணம் நாடு
நல்லுழைப்பு முயற்சியினில் வெற்றி நாடு!

– முனைவர் கடவூர் மணிமாறன்

**முனைவர் கடவூர் மணிமாறன் :** கரூர் அருகில் உள்ள கடவூரை அடுத்த அய்யம்பாளையத்தில் 21.01.1947 இல் பிறந்தார். இவர்தம் பெற்றோர் திரு. கு. பழனியப்பனார் – கன்னியம்மாள் ஆகியோர் ஆவர். அழகோவியம், சிறகை விரித்த சிந்தனைகள், பொன்னி, தமிழ்க்களம் ஆகியவை இவரது முக்கிய நூல்களாகும்.

### செயல்பாடுகள்

- நாடு என்னும் கவிதையை நயம் பாராட்டி எழுதுங்கள்.
- மனித இனம் மேற்கொள்ள வேண்டிய நற்பழக்கங்களாக நாடு என்னும் கவிதை கூறுவனவற்றைத் தொகுத்து விளக்கக் குறிப்பு எழுதுங்கள்.
- பள்ளியைத் தூய்மையாக வைப்போம் என்னும் கருத்தினை வலியுறுத்தி பள்ளிக் காலைக் கூட்டத்தில் வாசிப்பதற்கான உறுதிமொழி தயார் செய்யுங்கள்.
- நாடு என்னும் சொல்லை வைத்து இரு பொருள்படும் விதத்தில் வாக்கியம் அமையுங்கள்.
- நற்பண்பை வளர்க்கும் நீதி நூல்களைப் பட்டியலிடுங்கள்.

## இளைய பாரதம்



இடம் : தலைவர் வீடு.

(மலைச்சாமி பத்திரிகை படித்தபடி நிற்க மாணவிகள் சிலர் வருகிறார்கள்)

மலை : என்ன வேணும்? பொண்ணுக எல்லாம் கூட்டமா வந்திருக்கீங்க

ராணி : அங்கிள பாக்கலாம்னு வந்தோம்.

மலை : அங்கிளுனா யாரு? ஓ! தலைவரா?

ராணி : ஆமாம் அங்கிள்

மலை : நானும் அங்கிளா? உருப்புட்ட மாதிரிதான். காலேஜில போயி ரெண்டு வார்த்த இங்கிலிஸ் படிச்சிட்டா வெள்ளக் காரினு நெனப்பு வந்துடுது.

ராணி : ஒரு முக்கியமான விசயமா அங்கிளப் பாக்கணும்.

மலை : தலைவரும் முக்கியமான வேலையா உள்ள இருக்காரு. என்ன விசயம்னு எங்கிட்ட சொல்லுங்க. இல்லனா போயிட்டு நாளைக்கி வாங்க.

உமா : தயவு செஞ்சி அப்படியெல்லாம் சொல்லாதீங்க. நாங்க கண்டிப்பா அங்கிள பாக்கணும்.

மலை : கண்டிப்பா பாக்கணுமா? நாளைக்கி வான்னா போவிங்களா... நீங்க நெனைச்சவுடனே பாக்குறதுக்கு தலைவர் என்ன ஒங்க வூட்டு வேலக்காரனா? போங்க.. போங்க முதல்ல எடத்தக் காலிப்பண்ணுங்க.

(சப்தம் கேட்டு தலைவர் அங்கே வருகிறார்)

தலைவர் : என்ன மலைச்சாமி? ஏன் சத்தம் போட்டுகிட்டு இருக்க. இவுங்கள்ளாம் யாரு?

மலை : தலைவரே.. கும்பலா வந்து இங்குக் கலாட்டா பண்ணிக்கிட்டிருக்காங்க.

தலைவர் : ஒன்னப் பாத்தாத்தான் கலாட்டா பண்ற மாதிரி தெரியுது. புள்ளங்க அமைதியாத் தான் நின்னுகிட்டிருக்காங்க.

பெண்கள் : வணக்கம் அங்கிள்.

தலைவர் : வணக்கம். இளைய தலைமுறைக எல்லாம் ஒன்னா வந்திருக்கீங்க... என்ன விசயம்?

மலை : ஆளுங்கள பாக்கையிலேயே தெரியல. பசங்களுக்குப் போட்டியா ரசிகை மன்றம் வச்சிகிட்டு கட்டவுட்டு, பாலாபிசேகம் பண்ணனும்னு டொனேசன் கேக்க வந்திருப்பாங்க.

தலைவர் : ஒன் குறுக்குப் புத்தி ஒன்னவுட்டு போகல பாத்தியா! கொஞ்ச நேரம் சும்மாயிருய்யா... இந்தாளு கெடக்கிறான். நீங்க சொல்லுங்கம்மா.. என்ன வேணும்?

ராணி : நாங்க கல்லூரி மாணவிகள்ளாம் சேந்து சமூக நீதி இயக்கம்னு ஒன்னு ஆரம்பிச்சிருக்கோம்.

மலை : எதுக்கு இந்த வேலை?

தலைவர் : சும்மாயிருக்க மாட்டே.. ரொம்ப நல்ல விசயம்தான். அதுக்கு நா என்ன செய்யணும்?

மலை : நா சொல்லல.... டொனேசன்தான்.

தலைவர் : தள்ளி நில்லுய்யா.

ராணி : இந்தப் பகுதியில நீங்கதான் பெரியவுங்க...எல்லாத்துக்கும் வழிகாட்டி. எங்க இயக்கத்த நீங்கத்தான் ஆரம்பிச்சி வைக்கணும்.

மலை : அதனால்... (தலைவர் முறைக்க)ம்... அதனால்... நா இப்டித் தள்ளியே நிக்கிறேன் சொல்ல வந்தேன்.

தலைவர் : நல்ல விசயத்துக்கு எப்பவுமே என் ஆதரவு உண்டு. அதிலயும் ஒங்கள மாதிரி இளைய சமுதாயம் எடுக்கிற எந்த நல்ல முயற்சியையும் நான் வரவேற்கத் தயாரா இருக்கேன்.ஒங்க இயக்கத்தோட பணிகள் என்னன்னு நா தெரிஞ்சிக்கலாமா?

உமா : பொருளாதார ரீதியா நம்ப பகுதி ரொம்ப பின்தங்கிய பகுதி. நாங்க 35 ஏழை மாணவ மாணவிகளத் தேர்ந்தெடுத் திருக்கோம். எல்லாரும் இந்த வருசம் அரசுத்தேர்வு எழுதப்போறவங்க. அவுங்களுக்கு இலவசமா டியூசன் எடுத்து அவுங்கள அதிக மதிப்பெண்களோடத் தேர்வு ஆகறதுக்கு முயற்சி எடுத்துக்குறோம்.

தலைவர் : அருமையான முயற்சிம்மா. அப்புறம்.

மலை : அப்புறம்...(தலைவர் முறைக்க) அப்புறம் புள்ளங்க குடிக்க ஏதாவது கொண்டு வரட்டுமான்னு கேக்க வந்தேன்.

தலைவர் : போயி அந்த உருப்படியான வேலைய செய்யி போ! (மலைச்சாமி போகிறான்)

ராணி : ரத்ததான முகாம் ஒன்னு ஆரம்பிக்கிறோம். இந்த ஆண்டுக்குள்ள 100 உறுப்பினர்களைச் சேத்து தொடர்ந்து ரத்தத்தானம் வழங்க முடிவு செய்திருக்கோம்.

தலைவர் : கல்விச்சேவை... உயிர்காக்கும் சேவை,

ராணி : அது மட்டுமில்ல அங்கிள்.. இயற்கைப் பாதுகாப்பு சேவைய ஆரம்பிக்கிறோம். இந்த ஒரு வருசத்துக்குள்ள நம்ப பகுதியில மட்டும் 1000 மரக்கன்றுகளை நடுறதுன்னு உறுதி எடுத்திருக்கோம்.

தலைவர் : நீங்கள்லாம் பேசுறத கேக்குறதுக்கே நல்லா இருக்கு. சினிமா, தொலைக்காட்சி, ரசிகர் மன்றம்,அரசியல்னு இளைஞர்கள் கவனம் திசைமாறி போய்கிட்டிருக்கு. கவர்ச்சிக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிற இந்த நேரத்தில சின்ன பொண்ணுங்க நீங்கள்லாம் ஒன்னு கூடி இப்டியொரு சமூகப் பணி ஆரம்பிச்சிருக்கிறது என்னை மாதிரி நம்பிக்கை இழந்திருக்கிறவங்களுக்குப் புதுத்தெம்ப ஏற்படுத்திருக்கும்மா. ஒங்கள உற்சாகப் படுத்த வேண்டியது

என்னைமாதிரி பெரியவங்களோட கடமை. உங்க முயற்சி நிச்சயம் வெற்றி அடையும், அடையணும். விளக்கு நோக்கிப் பறக்கிற விட்டில் பூச்சிகளாயில்லாம இலக்கு நோக்கிப் பறக்கிற பறவைகளாத் தெரிகிற உங்களுக்கு என் வாழ்த்துக்கள்.

–திருச்சி ஜார்ஜ்

**திருச்சி ஜார்ஜ் :** நாடகத் தென்றல் என அழைக்கப் பெறும் திருச்சி ஜார்ஜின் முதல் மேடை நாடகம் 1965 ல் அரங்கேறியது. குடும்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விதமாக இவரது பல நாடகங்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவரது ரதிதேவி வந்தாள் என்ற நகைச்சுவை நாடகம் 200 முறைகளுக்கு மேலே மேடையேற்றப்பட்டு பாராட்டு அடைந்துள்ளது. கலைக்காவேரி நுண் கலைக் கல்லூரி இவருக்கு நாடகத்திற்கான உயர் விருதினை வழங்கி கௌரவித்தது.

## செயல்பாடுகள்

- இளைய பாரதம் நாடகத்தில் இடம் பெறும் கதாபாத்திரங்களுள் உங்களைக் கவர்ந்த கதாபாத்திரத்தினைச் சுட்டி அதற்கான காரணம் எழுதுங்கள்.
- நாளைய நாட்டின் சமூகச் சிற்பிகள் இளைஞர்கள் என்னும் கருத்திற்கு இளைய பாரதம் நாடகம் பொருந்தும் விதத்தை ஒப்பிட்டு எழுதுங்கள்.
- இரத்ததானம் செய்வதன் அவசியத்தை வலியுறுத்தித் துண்டுப்பிரசுரம் தயாரியுங்கள்.

## மலர வேண்டும் மனிதநேயம்

மனிதர்கள் மனிதநேயத்துடன் இருக்கிறார்களா என்பதை நீதிமன்றங்களில் உள்ள வழக்கு எண்ணிக்கைகளைக் கொண்டு எளிதில் அறிய முடியும். நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வழக்குகள் மனித நேயங்கள் குறைந்து வருவதைப் பறைசாற்றும்.

நேயங்கள் ஏடுகளில் மட்டுமல்ல, நேரிலும் காணமுடிகின்றது. எனக்குச் சமீபத்தில் அறிமுகமான சென்னையில் வசிக்கும் இளம் தம்பதி, அயல்நாடுகளிலும் அயல் மாநிலங்களிலும் பல ஆண்டுகளாய் வெவ்வேறு பணியில் இருந்தவர்களை அவர்களது பெற்றோரின் முதுமை, பிறந்த மண்ணான சென்னைக்கு அவர்களை வரவழைத்தது.

இப்போது வந்த நாம் சில ஆண்டுகள் முன்னரே வந்திருந்தால், முதியவர்கள் இன்னும் சில காலம் வாழ்ந்து அதிக இன்பம் பெற்று இருந்திருப்பார்கள் என்பதை அவர்கள் உணர்ந்தனர். அவர்கள் இரு ஆண்டுகள் மட்டுமே பெற்றோரோடு இருக்க முடிந்தது. பின் பெற்றோர் காலமாகி விட்டனர்.

அந்த தம்பதிக்கு இது ஒரு பாடமாக அமைந்தது. தங்களுக்கு ஏற்பட்ட அனுபவம் போல் மற்றப் பெற்றோருக்கு இருக்கக் கூடாது என எண்ணினர். முதியோர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் நாம் பயனுள்ளவர்களாக இருக்க வேண்டும் என முடிவெடுத்தனர்.

இன்றைய சராசரி மனித ஆயுட்காலம் 72 ஆண்டுகளாக உள்ளது. இது 2100 இல் 82 ஆக உயரும் எனத் தெரிவிக்கின்றனர். முதியோர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகி வருகின்றது. தற்போது உள்ள முதியோர் எண்ணிக்கை 13.8 கோடி. இது இன்னும் ஏழு ஆண்டுகளில் 19.4 கோடியாக அதிகரிக்கும் எனக் கணக்கிட்டுள்ளனர்.

மருத்துவத் துறை அபரிமிதமாக முன்னேறியுள்ளது. மருத்துவம் அதிகரித்த அளவிற்கு முதியவர்களுக்குத் தேவையான சமூக, பொருளாதார வசதிகள் அதிகரிக்கவில்லை என்பதை அந்தத் தம்பதி உணர்ந்தனர்.

அவர்களின் தீவிர முன்னெடுப்பால், இன்று சென்னையில் அவர்களுக்காக 400 க்கும் மேற்பட்ட மூத்த குடிமக்கள் நாள்தோறும் வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கின்றனர். அவர்களுக்கு காலை சிற்றுண்டி முதல் இரவு உணவு வரை ருசியான, தரமான ஊட்டச் சத்துள்ள உணவு வகைகளை நேரந் தவறாது வழங்கி வருகின்றனர்.

உணவு தரமாக இருப்பதில் மிகுந்த அக்கறையோடு செயல்படுகின்றனர். இல்லம் தேடிச் செல்லும் உணவு அவர்களுக்குப் பொருளாதாரப் பளுவாக இருக்கக் கூடாது என்பதில் கவனங்கொண்டு செயல்படுகின்றனர். விநியோகம் செய்வதற்குக் கூடக் கட்டணமின்றியிருக்க வழி தேடி வருகின்றனர்.

அவர்களது பிறந்த தினம், பண்டிகை நாள்கள் ஆகியவற்றிற்கு விசேஷமான விருந்துச் சாப்பாடு பரிமாறி அவர்களை மகிழ்விக்கின்றனர். அவரவர் தேவை மற்றும் உடற்கூறுக்கு ஏற்றாற் போல் உணவு தயாரிக்கின்றனர். அதனை மிகுந்த அனுசரணையுடனும் அன்புடனும் முதியோர்களுக்கு அளித்து அவர்களை மகிழ்விக்கின்றனர். அந்தத் தம்பதியின் இத்தகைய மனிதநேயப் பணி பெரும் பாராட்டிற்குரியது.

மூத்த குடிமக்கள் ஈட்டிய தங்கள் பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத் தொகையை எதிர்காலத் தேவையைக் கணக்கிட்டுத் திட்டம் தீட்டுவதற்குப் புதுச்சேரி இளைஞர் ஒருவர் உதவி வருகிறார். முதியோர்களுக்கான வங்கிப் பணிகள், பயனரது பெயர், கடவுச் சொல் குறியீட்டு எண்கள் போன்றவற்றைப் பாதுகாப்புடன் வைத்துச் செயல்பட வழி காட்டுகிறார். வங்கியில் பண இருப்பு மற்றும் பாதுகாப்புப் பெட்டகங்களுக்கு நினைவூட்டல் போன்றவற்றைத் தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்துள்ளார். இப்பணியால் பல மூத்த குடிமக்கள் பயனடைந்து வருகின்றனர்.

அரசு மற்றும் பெரு நிறுவனங்களில் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், தங்கள் பிள்ளைகள் அயல்நாடுகளில் பணிபுரிவதால் தனிமையில் பெரும் அச்சம் கொண்டு வாழும் சூழலில் உள்ளனர். சமூகப் பொருளாதார வாழ்வில் அவர்கள் தனித்து இருக்க வேண்டிய சூழலுக்கு ஆளாகின்றனர்.

அவர்களுக்கு நம்பிக்கையையும் ஆதரவையும் வழங்கிட அவர்களது ஓய்வு வாழ்க்கைக்கு வேண்டிய மருத்துவக் காப்பீடு வங்கி நிதி ஆதார சேவைகளை உரிய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அவர்கள் மனநிம்மதியுடன் வாழ்வதற்கு வழிகாட்டி வருகிறார். இதனால் பல முதியோர்கள் நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

முதியோர்களை வீட்டிலேயே முடங்க வைக்காது அவர்களைப் பார்க், பீச், சர்ச், கோவில் போன்ற இடங்களுக்கு வாரத்தில் சில தினங்கள் பாதுகாப்பாக அழைத்துச் சென்று வரத் திட்டமிட்டுள்ளனர். அதன் மூலம் அவர்கள் தங்கள் முதுமையை, தனிமையை மறந்து மகிழ்ச்சியாக இருக்க முடியும் என எண்ணுகிறார். தங்கள் பெற்றோரைப் போன்று மற்றைய பெற்றோர்களும் மகிழ்வு பொங்க வாழ வேண்டும் என விருப்பங் கொண்டு இவர் ஆற்றிவரும் மனித நேயப் பணி மகத்தானதே.

சீரான உடல் நலம் பேணுதல் இன்றைய வாழ்வில் பெரும் சவாலாக உள்ளது. மாத்திரை மருந்துகளுடன் வாழ்ந்தாக வேண்டிய சூழலுக்கு நாம் தள்ளப்பட்டு விட்டோம். தொற்றுநோய்கள், தொற்றா நோய்கள் எனப் பல விதமான நோய்கள் மனிதர்களை ஆள ஆரம்பித்துள்ளன. இவற்றிற்கான சிகிச்சைகளும் அறிவியல் வளர்ச்சியால் பெருகி விட்டன. ஆனால் அப்பேற்பட்ட சிகிச்சைகளைப் பெறுவதில் பொருளாதாரம் பெரும் தடைக்கல்லாக உள்ளது. குறிப்பாக காசநோய், புற்றுநோய் போன்றவற்றால் ஏழை மக்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

இவர்களும் சிகிச்சை பெற்று, நலம் கொண்டு இருக்க வேண்டி ஓர் தம்பதி கோயம்புத்தூரில் ஓர் அமைப்பினை நிறுவியுள்ளனர். இதில் தன்னார்வ மருத்துவர்கள், தன்னார்வத் தொண்டர்கள் பலர் இணைந்துள்ளனர். பொருளாதாரத்தில் பின்தங்கியோரும் அரசு வழங்கும் சிகிச்சையில் குணப்படுத்த முடியாமல் சிறப்பு சிகிச்சை தேவைப்படுவோரும் உயர் சிகிச்சை பெறும் வாய்ப்பினை இந்நிறுவனம் ஏற்படுத்தித் தருகிறது.

தன்னார்வத் தொண்டர்கள் சிகிச்சை தேவைப்படுவோரை அடையாளங்கண்டு அவர்களை அதற்கு உரிய மருத்துவர்களோடு தொடர்பு கொள்ளச் செய்கின்றனர். நோயுற்றவர்களுக்கு உரிய



ஆலோசனையை வழங்கி அவர்களுக்குத் தேவையான தரமான சிகிச்சைகளை அளிக்கின்றனர்.

மருத்துவமனைகளும் ஏழை மக்களுக்காகக் குறைந்த கட்டணத்தில் சிகிச்சைகளை வழங்கி வருகின்றன. மருத்துவ நிபுணர்கள் நோயாளிகளுக்குத் தேவைப்படும் உயர்தர சிகிச்சைகளை சாதாரண மக்களும் பெறும் வழிவகை செய்கின்றனர்.

மேலும் இந்நிறுவனமானது சிகிச்சை பெற்று வருபவரை முறையாகக் கண்காணித்து அவர்கள் நலம் பெற்று வருவதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்கிறது. மருத்துவரின் நேரடிக் கண்காணிப்பு இல்லாத இடங்களில் தொலைதூர மருத்துவ வசதி அமைப்புகளுடன் இணைப்பு ஏற்படுத்துகின்றனர்.

சிலரின் வழக்குகள் நீதிமன்றத்தில் இருந்தால் அதில் அவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு உரிய ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் தருகின்றனர். சிகிச்சை பெற்றவர்கள் வருமானம் ஈட்ட முடியாத ஏழைகளாக இருந்தால் அவர்களின் வாழ்வாதாரத்திற்குத் தங்களோடு இணைந்து பணியாற்றும் தொண்டர்களின் உதவியுடன் நிதி திரட்டி அவர்களைக் குறுந் தொழில் முனைவோர்களாக உருவாக்குகின்றனர்.

வறியவர்கள் என்றைக்குமே ஆதரவற்றவர்கள் இல்லை. அவர்களுக்கும் ஆதரவு உண்டு அவர்களை ஆதரிக்க மனிதர்கள் உள்ளார்கள் என்பதை ஆந்திராவில் உள்ள இளைஞர் ஒருவர் நிரூபித்துத் தன் மனிதநேயத்தைக் காட்டியுள்ளார்.

ஆதரவற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டத் தயாராக இருக்கும் மனம் கொண்டோரை இணைக்கும் முயற்சியை அவர் கையில் எடுத்தார்.

அதன் மூலம் வாழ்வாதாரத்தை உயர்த்த நினைத்தோருக்கு நிதி உதவி பெற வழி செய்தார். பெற்றோர்கள், உடுக்கை இழந்து நின்ற நேரத்தில் கிடைத்த உதவியாக அதனைக் கருதி அதனைத் தங்கள் வாழ்வாதாரம் உயர்த்துவதற்குப் பயன்படுத்தினர். ஏழைகளின் வாழ்வு உயர்வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்து அவர்களோடு இருந்து வழி நடத்திச் செல்லும் பணியில் பல ஆண்டுகளாய் ஈடுபட்டு வருகிறார்.

மானிடப் பிறவி கிட்டுவது அரிதினும் அரிது. மானுடத்தில் வேறுபாடுகள் அமைவது தவிர்க்கப்பட முடியாதது. கற்கும் கல்வியால் ஈட்டுகின்ற பொருளால் மனிதர்கள் ஒருவருக்கொருவர் வேறுபடலாம்.

ஆனால், மனிதர்களின் மனதில் உள்ள மனிதநேயம் அந்த வேறுபாடுகளைக் களையவல்லது. மனிதநேயம் பெருகிவிட்டால் மனிதகுலம் மாண்படையும் என்பது திண்ணம்

## செயல்பாடுகள்

- நல்லிணக்கமும், நட்புறவும் ஏற்பட மேற்கொள்ள வேண்டியவற்றைக் குறிப்பிடுங்கள்.
- இன்று இளைஞர்களிடம் சமூக அக்கறை பெருகி வருகிறதா/குறைந்து வருகிறதா என்ற தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்தில் நீங்கள் பேச விரும்பும் தலைப்பில் குறிப்பு தயாரியுங்கள்.
- மனித நேயப் பண்புகளால் புகழ் பெற்றவர்களின் புகைப்படங்களையும் வாழக்கைக் குறிப்புகளையும் திரட்டி படத்தொகுப்பு தயாரியுங்கள்.



அலகு 3

# நீரும் நிலமும்



நிலநடுக்கம், எரிமலை, புயல், சுனாமி, வெள்ளப் பெருக்கு, கடும் வறட்சி, நிலச்சரிவு , பெருந்தொற்று போன்றவை பேரிடர்களாகும். இத்தகைய சீற்றங்களை எதிர்கொள்ள மனிதன் தன்னைத் தயார் செய்து கொள்ள வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம்.

# இயற்கை விளையாட்டு



## மழை

திக்குகள் எட்டும் சிதறி–தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட – தீம்தரிகிட
பக்க மலைகள் உடைந்து–வெள்ளம்
பாயுது பாயுது பாயுது–தாம்தரிகிட
தக்கத் ததிங்கிட தித்தோம்–அண்டம்
சாயுது சாயுது சாயுது–பேய்கொண்டு
தக்கை யடிக்குது காற்று தக்கத்
தாம்தரிகிடதாம் தரிகிட தாம்தரிகிட  தாம்தரிகிட.
வெட்டி யடிக்குது மின்னல்,–கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம்;–கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று;
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
தாளங் கொட்டிக் கனைக்குது வானம்;
எட்டுத் திசையும் இடிய –மழை
எங்ஙனம் வந்ததடா, தம்பி வீரா!
அண்டம் குலுங்குது, தம்பி!–தலை
ஆயிரந் தூக்கியே சேடனும் பேய்போல்



மிண்டிக் குதித்திடு கின்றான்;–திசை
வெற்புக் குதிக்குது; வானத்துத் தேவர்
செண்டு புடைத்திடு கின்றார்;– என்ன
தெய்விகக் காட்சியைக் கண்முன்பு கண்டோம்!
கண்டோம் கண்டோம், கண்டோம்– இந்தக்
காலத்தின் கூத்தினைக் கண்முன்பு கண்டோம்!

–சுப்ரமணிய பாரதியார்

**பாரதியார்** : இவர் சின்னச்சாமி ஐயர், இலக்குமி அம்மாள் ஆகியோரின் மகனாக டிசம்பர் 11, 1882 இல் எட்டயபுரத்தில் பிறந்தார். கவிஞர், எழுத்தாளர், இதழாசிரியர், விடுதலை வீரர், சமூகச் சீர்திருத்தவாதி எனப் பன்முகம் கொண்டவர். பாரதியார், சுப்பையா, முண்டாசுக் கவிஞன், மகாகவி, சக்திதாசன் எனப் பலப்பெயர்களில் அறியப்படுகிறார். பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு ஆகிய படைப்புகள் பாரதியாரின் முப்பெரும் படைப்புகள். செப்டம்பர் 11, 1921 இல் மறைந்தார்.

### செயல்பாடுகள்

- புயல், மழை, நிலச்சரிவு போன்ற கருத்துகளையுடைய கவிதை, கட்டுரை, பத்திரிகைச் செய்தி போன்றவற்றைத் திரட்டி வகுப்பில் படியுங்கள்
- நீங்கள் இரசித்து மகிழ்ந்த மழை நாட்களை நாட்குறிப்பாக எழுதுங்கள்.

## மூணார் பெட்டிமுடி

இடுக்கி மாவட்டம் மூணாறு ராஜமலை அருகேயுள்ள பெட்டிமுடி என்னும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புப் பகுதி அது. 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் தேதி இரவு 11.30 மணிக்குப் பெய்த பேய் மழை, கடுமையான நிலச்சரிவை உருவாக்கியது. இதில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் 30 வீடுகள் மண்ணில் புதைந்து போயின. சம்பவத்தில் 11 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தாலும் குழந்தைகள், வயதானவர்கள், கர்ப்பிணிகள் என 70 பேர் மண்ணில் புதைந்து இறந்து போயினர். ஆகஸ்ட் 7 ஆம் தேதி மதியம் முதல் ஒரு மாதத்தைக் கடந்து மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றன.



கடுமையான மழை, குளிர்ந்த காற்று என ஆரம்பத்தில் மீட்புப் பணிகளில் தொய்வு ஏற்பட்டாலும் மீட்புக் குழுவினரின் தொடர் முயற்சியாலும் அதிநவீன மீட்புக் கருவிகளின் உதவியாலும் 66 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. சம்பவம் நடந்த இடத்தின் அருகே ஓடும் நீரோடையில் உடல்கள் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் 10 நாட்களுக்கு

மேலாக நீரோடை செல்லும் வழித்தடத்தில் தேடுதல் பணி நடைபெற்றது. பூதக்குழி, ராஜமலை, கல்லாற்றங்கரை, மாங்குளம், பாண்டியாகுடி, சிக்கனம்பட்டி ஆகிய பகுதிகளில் மீட்புக் குழுவினர் உடல்களைத் தேடி மீட்டனர். பெட்டிமுடியிலிருந்து சுமார் 20 கிலோமீட்டருக்கு அப்பால் காஸ் சிலிண்டர் உட்பட வீட்டு உபயோகப் பொருள்கள் நீரோடையில் கண்டுபிடிக்கப்பட்டன.

## செயல்பாடுகள்

- இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களின் அனுபவங்களை மையப்படுத்தி அவர்களிடம் நேர் காணல் காண்பதற்கான வினாநிரல் தயார் செய்யுங்கள்.
- நிலச்சரிவு, வெள்ளப் பெருக்கு போன்ற பேரிடர் சூழல்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வழிமுறைகளைக் கலந்துரையாடி வரிசைப்படுத்துங்கள்.
- இயற்கையை அழிப்பதனால் பேரிடர் ஏற்படுகிறது. இக்கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் உங்கள் கருத்தை விளக்கிக் குறிப்பாக எழுதுங்கள்.

## வெள்ளம்

தென்னைமர ஓலைகளில் சலசலக்கும் காற்றா, இல்லை மழையின் ஓசையா என்று சரிவரத் தெரியவில்லை. தூக்கக் கிறுகிறுப்பைத் துண்டித்துக் கொண்டு எழுந்து பார்க்கவும் தோன்றாமல், விழிப்பும் மயக்கமும் கலந்த நிலையில் கிடந்தான் சங்கரன்.

வெளியில் கேட்கும் இந்தச் சலசலப்பு தன்னை எத்தனை நாட்கள் ஏமாற்றியிருக்கிறது. மழைதான் பெய்கிறதோ என்று தூக்கத்தைப் பாதியில் துண்டித்துக் கொண்டு, ஆசையுடன் எழுந்து வந்து பார்க்கும் போதெல்லாம் இருளில் தலைவிரி கோலங்களான பூதகணங்களாய் ஆடிக்களிக்கும் தென்னை மரங்கள்...!

இப்போதும் அதுதான் சம்பவிக்கிறதோ என்று உள்ளுக்குள் குமைந்து கொண்டு புரண்டு படுக்கையில்...

உள்ளே சுரீரென்று பாயும் வாடைக்காற்று. கூட நீர்த்திவலைகள். ஸ்பிரிங்கில் இயங்கும் ஒரு பொம்மையைப் போல் எழுந்து உட்கார்ந்தான் அவன்.



சத்தேகமில்லை. மழையேதான்...எழுந்து ஜன்னல் வழி வெளியே பார்த்தபோது, கொட்டு கொட்டென்று அடை மழை வலுத்து விட்டிருக்கிறது.

மனதில் நிறையும் மகிழ்ச்சி, கூட இனம் தெரியாத ஒரு பயமும். ஆறு வயசு லலிதாவை அணைத்தவாறு சுகமான தூக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் லட்சுமியை எழுப்பத் தோன்றவில்லை. பாவம். பகல் எல்லாம் ஆழக்கிணற்றின்



அதலபாதாளத்திலிருந்து தண்ணீர் இறைத்த களைப்பு. நன்றாகத் தூங்கட்டும். எதுக்கும் நாளையிலிருந்து கொஞ்ச நாட்களுக்கு தண்ணீர்த் தட்டு இருக்காது. இந்த மழையில் கிணறு நிறைவது மட்டுமல்ல, பக்கத்தில் உள்ள ஏரி, குளம் எல்லாம் கூட ரொம்ப வழிந்து விடப் போகிறது.

பளீரென்று ஒரு மின்னல். கேட்கப்போகும் இடியைப் பயந்து செவியைப் பொத்தினான். இத்தனை வயசுக்கு அப்புறமும் இந்த இடிச் சத்தம் கேட்கும்போது அச்சமாகத்தான் இருக்கிறது. பேரிடி இடித்தாலும் பெருமழை பெய்தாலும் அஞ்சாமலிருக்க போதனை செய்த சின்ன வகுப்புப் பாடங்கள் ஞாபகத்தில் இருந்தும்கூட! இந்த சாதாரண இடிக்கும் மின்னலுக்குமே பயந்தால் உச்சிமீது வானிடிந்து விழுகின்ற போது...!

சடபட என்ற பேரிடி.

அலறியடித்துக் கொண்டு எழுந்த லட்சுமி, பயந்து ஓவென்று வீறியழும் லலிதா.

இருட்டில் ஒன்றும் தெரியவில்லை.என்னங்க எங்கே நிக்கிறீங்க? என்ன பயந்துட்டியா? இங்கேதான் நிக்கிறேன்.

குழந்தையைக் கையில் எடுத்து தோளில் போட்டுத் தட்டினான்.

எனக்கென்னமோ பயமா இருக்குது. பேய் மழை யல்லவா இருக்குது.

மழை மேலும் வலுத்தது.

இந்த அடைமழையில் என்ன செய்ய? வெளியில் இறங்கினா ஆளைப் பறத்திவிடும் போலிருக்கு சுழல் காற்று. அதோ, தென்னை மரங்களைப் பாரு…!

நாளை மறுநாள் கார்த்திகை மாசம் பொறந்துடும். கார்த்திகைக்குப் பின் மழையில்லையிண்ணு சொல்லுவாங்களே, இந்த ரெண்டு நாளிலாவது மழை பெய்யாதாண்ணு வேண்டிகிட்டுத்தான் படுத்தேன். ஆனா இந்த அடை மழையைப் பாத்தா எனக்கென்னமோ பயமா இருக்கு. பாவம், ராமுவும் வனஜாவும் தூங்கறாங்களோ இல்லை.

இப்படி அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அடுத்த அறையில் படுத்திருந்த ராமுவும் – பத்து வயசு, வனஜாவும்– எட்டு வயசு, அப்பா அம்மா என்று பரிதாபமாய் கதறும் ஓசை. அதன்கூட ஆள் உயரத்தில் சோவென்று ஆர்ப்பரித்து அந்த அறையிலிருந்து பாய்ந்து வரும் மழைவெள்ளம். அந்த அறைக்குள் செல்லவிடாது நெட்டித் தள்ளும் பெருவெள்ளம். வீறிடும் லலிதாவை, நிலைகுலைந்து தத்தளித்துக் கொண்டிருந்த லட்சுமியின் கையில் கொடுத்துவிட்டு அந்த அறைக்குள் சென்று, வேரற்றுச் சாய்ந்திருந்த மரத்தின் கிளைகளைப் பிடித்துக்

கொண்டு நீரில் முழுகியும் முழுகாமலும் தடுமாறிக் கொண் டிருந்த ராமுவையும் வனஜாவையும் தோளிலேற்றித் திரும்ப வரும்போது...

பெருவெள்ளப் பாய்ச்சலில் முன் வாசல் கதவுடன் முழுச்சுவரே குடைசாய அது வழி துரும்புகளாய் அடித்துச் செல்லும் லட்சுமியும் லலிதாவும். கணப்பொழுதில், தோளிலிருப்பவர்கள் தெறித்துவிடாதிருக்க பிரயாசைப்பட்டு, ஒருவித மரண வெறியில் கைகளை நீட்டிக் குதிக்கையில், வெளியே அடித்துக் கொண்டு வருவதற்கிடையில் கையில் சிக்கிய லட்சுமியின் தலைமயிர். பக்கத்தில் எங்கிருந்தெல்லாமோ அரற்றல்கள், அபயக்குரல்கள்...!

ஐயோ... ஐயோ....

மலைவெள்ளம்...! உடைப்பு.

ஓடுங்கோ... ஓடுங்கோ..

அம்மா ....அம்மா...

அப்பா... அப்பா...

அகன்று அகன்று போய்க் கொண்டிருக்கும் லலிதாவின் குரல்.

சாவின் ஒலி.

வெள்ளத்தின் இரைச்சல்.

புயலின் கர்ஜனை.

இந்தக் களேபரத்தில் அமுங்கிப் போன தன் குரல்.

சுற்றிலும் தீனக்குரலில் பரிதாப அரற்றல்கள்.

**சுனாமி ஓர் அறிமுகம்**

சுனாமி. 26 டிசம்பர் 2004–க்கு முன்னால் இந்தப் பெயர் நமக்கு அறிமுகமில்லாத ஒரு பெயராகவே இருந்தது. அறிவியலார் மற்றும் படித்தவர்கள் பலருக்கும் இது பெயரளவில்தான் தெரிந்திருந்தது. சிலர் இதன் கடுமையான விளைவுகளைப் பற்றி இணையம் அல்லது புத்தகங்களின் மூலம் படித்து அறிந்திருக்கலாம். தற்போது சுனாமி என்ற பெயரானது இந்தியா மட்டுமன்றி ஆசியக் கண்டப்பகுதிகள் அனைத்திலும் படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை அனைவராலும் உச்சரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு பெயராக மாறிவிட்டது.

சுனாமி என்பது ஏதோ ஒரு நாகரிகப் பெண்ணின் பெயரைப் போல தோன்றுகிறது. ஆனால் இந்தப் பெயர் தற்போது இந்தோனேஷியா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் வசிக்கும் மக்களுக்கு அதிர்ச்சியூட்டும் ஒரு பெயராக மாறிவிட்டது. இந்தப் பகுதிகளில் கடலோரம் வசிக்கும் மக்கள் தூங்குவதற்குக் கூட அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். தூங்கிக் கொண்டிருக்கும் வேளையில் சுனாமிப் பேரலை தாக்கி உயிரைக் குடித்துவிடுமோ என்ற அச்சம்தான் இதற்குக் காரணம். இருபத்தி நான்கு மணிநேரமும் கடலுடனே வாழ்க்கை நடத்தி வந்த மீனவர்கள் கூட இப்போது கடலைப் பார்த்தால் பயப்படுகிறார்கள்.

மனிதர்களைப் பயமுறுத்தும் இந்தச் சுனாமிப் பேரலைகள் என்றால் என்ன அவை எவ்வாறு ஏற்படுகின்றன என்பதைப் பற்றிப் பார்ப்போம். நிலநடுக்கம், எரி மலை வெடித்துச் சிதறுதல் மற்றும் நிலச்சரிவுகள் போன்ற இயற்கைச் சீற்றங்கள் பூமியின் தரைப்பகுதியில் மட்டுமே நிகழக்கூடியவை என்று நம்மில் பலர் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இது தவறான நினைப்பாகும். பூமிக்கு மேற்பகுதியில் ஏற்படும் என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கும் இத்தகைய இயற்கைச்

சீற்றங்கள் கடலுக்கு அடியில் உள்ள தரைப்பகுதிகளிலும் நிகழும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

கடலுக்கு அடியில் தரைப்பகுதிகளில் நிலநடுக்கம், எரிமலை வெடித்தல் மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கைச் சீற்றங்கள் நிகழும் வேளைகளில் கடல் மிகப்பெரிய அளவில் பாதிப்பிற்கு உள்ளாகிறது. இதன் விளைவாக மிகவும் ஆக்ரோஷமான கடல் அலைகள் உருவாகின்றன. இவ்வாறு உருவாகும் பேரலைகள் கரையை நோக்கி மிக வேகமாக நகர்கின்றன. இவை கரையை அடைந்ததும் பெரும் சீற்றத்துடன் மோதிச் சிதறுகின்றன. கடற்கரை நிலப்பகுதிகளுக்குள் பெரும் சீற்றத்துடன் புகுந்து விடுகின்றன. இவ்வாறு பேரலைகள் பெரும் சீற்றத்துடன் நிலப்பகுதிகளுக்குள் புகும்போது கரைப்பகுதியில் இருப்பவை அனைத்தையும் அடித்துச் செல்கின்றன. கடற்கரைப் பகுதிகளில் இருக்கும் மனிதர்களை வாரிச்சுருட்டி மண்ணுக்குள் புதைத்து விடுகின்றன. இந்தப் பேரலைத் தாக்குதலே சுனாமி என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

தொகுத்தவர் ஆர்.வி.பதி

எங்கோ அடித்துச் செல்வது தெரிகிறது. காலின் கீழ் பூமி தொட்டும் தொடாமலும் தோளிலிருப்பவர்களை ஒரு கையும் லட்சுமியின் தலைமயிரை இன்னொரு கையும் கெட்டியாய் பிடித்துக் கொண்டிருப்பது ஞாபகத்தில் தங்கியிருக்கிறது. மேலெழும்பித் தாழும் மூக்கு வழி, வாய் வழி தன் சம்மதமின்றி ஒரு மடக்கு வெள்ளம் உள்ளே போக எத்தனிப்பதையும் உணர முடிகிறது.

இதென்ன தலைக்கு மேல் செங்குத்தான பாறையா, அதன் மறுபுறமா?

–நீல பத்மநாபன்



**நீல. பத்மநாபன்:** இவர் திருவனந்தபுரத்தில் 1938 ஏப்ரல் 26 ஆம் தேதி நீலகண்டப் பிள்ளை – சானகி அம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். தலைமுறைகள், பள்ளிக்கொண்டபுரம், உறவுகள் போன்ற நாவல்களையும் வானவீதியில், மூன்றாவது நாள் போன்ற சிறுகதைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார். இவர் இலையுதிர்க்காலம் என்ற புதினத்துக்காக 2007 ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருதைப் பெற்றுள்ளார். நமது பாடப்பகுதி வெள்ளம் என்ற குறுநாவலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

## செயல்பாடுகள்

- 'வெள்ளம்' கதைப்பகுதியை வாசித்த போது உங்களுக்குள் ஏற்பட்ட மனநிலையினை அனுபவக் குறிப்பாக எழுதுங்கள்.
- பெருவெள்ளம் வருவதற்கு முன் நம்மைப் பாதுகாக்கச் செய்யும் முன்னறிவிப்பை ஒலிபெருக்கி அறிவிப்பாக தயார் செய்யுங்கள்.
- பள்ளியில் நடைபெற உள்ள பேச்சுப் போட்டியில் இயற்கைப் பேரிடர் என்னும் தலைப்பில் உரையாற்ற குறிப்பெழுதுங்கள்.

# வெக்கை



## விதைச்சோளம்

ஆடி முடிஞ்சிருச்சு
ஆவணியும் கழிஞ்சிருச்சு
சொக்கிகொளம் கோடாங்கி
சொன்னகெடு கடந்திருச்சு

காடு காஞ்சிருச்சு
கத்தாழை கருகிருச்சு
எலந்த முள்ளெல்லாம்
எலையோட உதிந்திருச்சு

வெக்க பொறுக்காம
றெக்க வெந்த குருவியெல்லாம்
வெங்காடு விட்டு
வெகுதூரம் போயிருச்சு

பொட்டு மழை பெய்யலையே
புழுதி அடங்கலையே
உச்சி நனையலையே



உள்காடு உழுகலையே
வெதப்புக்கு விதியிருக்கோ
வெறகாக விதியிருக்கோ
கட்டிவச்ச வெங்கலப்ப
கண்ணீர் வடிச்சிருச்சே
காத்துல ஈரமில்ல
கள்ளியில பாலுமில்ல
எறும்பு குளிச்சேர
இருசொட்டுத் தண்ணியில்ல

மேகம் எறங்கலையே
மின்னல் ஒண்ணுங் காங்கலையே
மேற்க கருக்கலையே
மேகாத்து வீசலையே

ஊத்துதடி ஊத்துதடி
ஊசிமழை ஊத்துதடி
சாத்துதடி சாத்துதடி
சடைசடையாச் சாத்துதடி

பாழும் மழைக்குப்
பைத்தியமா புடிச்சிருச்சு?
மேகத்தக் கிழிச்சு
மின்னல் கொண்டு தைக்குதடி

முந்தாநாள் வந்த மழை
மூச்சுமுட்டப் பெய்யுதடி
தெசைஏதும் தெரியாம
தெரபோட்டுக் கொட்டுதடி

கூர ஒழுகுதடி
குச்சுவீடு நனையுதடி
ஈரம் பரவுதடி
ஈரக்கொல நடுங்குதடி

வெள்ளம் சுத்திநின்னு
வீட்ட இழுக்குதடி
ஸ்திதியில சரிபாதி
அடிச்சிக்கிட்டுப் போகுதடி

குடி கெடுத்த காத்து
கூர பிரிக்குதடி
மழைத்தண்ணி ஊறி
மஞ்சுவரு கரையுதடி

நாடு நடுங்குதய்யா
நச்சுமழை போதுமய்யா
வெதவெதைக்க வேணும்
வெயில்கொண்டு வாருமய்யா

மழையும் வெறிக்க
மசமசன்னு வெயிலடிக்க
மூலையில வச்சிருந்த
மூட்டையப் போய் நான் பிரிக்க
வெதச்சோளம் நனைஞ்சிருச்சே
வெட்டியாய் பூத்திருச்சே
மொளைக்காத படிக்கு
மொளைகட்டிப் போயிருச்சே

ஏர்புடிக்கும் சாதிக்கு
இதுவேதான் தலையெழுத்தா?
விதிமுடிஞ்ச ஆளுக்கே
வெவசாயம் எழுதிருக்கா?

காஞ்சு கெடக்குதுன்னு
கடவுளுக்கு மனுச்செஞ்சா
பேஞ்சு கெடுத்திருச்சே
பெருமாளே என்னபண்ண?

– வைரமுத்து.

**வைரமுத்து :** 1953 ல் வடுகபட்டியில் ராமசாமி – அங்கம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். கவிஞர், திரைப்படப் பாடலாசிரியர் ஆகிய துறைகளில் இயங்குகிறார். இன்னொரு தேசியகீதம், கவிராஜன்கதை, தண்ணீர்தேசம், கள்ளிக்காட்டு இதிகாசம், கருவாச்சி காவியம் ஆகிய படைப்புகளின் சொந்தக்காரர். சிறந்த பாடலாசிரியருக்கான குடியரசு தலைவர் விருதை ஏழுமுறை பெற்றுள்ளார். பத்மஸ்ரீ, பத்மபூஷன் விருதையும் பெற்றுள்ளார். கள்ளிக்காட்டு இதிகாசம் நாவலுக்காக சாகித்ய அகதாமி விருதையும் பெற்றுள்ளார்.

## செயல்பாடுகள்

- விதைச் சோளம் கவிதையை நயம் பாராட்டுங்கள்.
- இயற்கை பேரிடர்களால் பொருளாதார பின்னடைவுகள் ஏற்படுகின்றன. இவற்றை நிவர்த்தி செய்வதற்கான தீர்வுகளைப் பட்டியலிடுங்கள்.
- காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை விதைச்சோளம் கவிதை கொண்டு நிறுவுங்கள்.
- விதைச் சோளம் கவிதையில் காணும் பேச்சு வழக்குச் சொற்களைக் கண்டறிந்து எழுதுங்கள்.

## பேரிடர்கள்

மழையின்மையால் பன்னிரண்டு ஆண்டுகள் ஏற்பட்ட பஞ்சம், கடல்கோள் ஆகிய இரு பேரிடர்கள் பற்றியும் அவற்றை எதிர்கொண்டு மக்களின் நலங்காத்த அறம்சார் அனுபவங்கள் பற்றியும் மணிமேகலைக் காப்பியம் பரக்கப் பேசுகிறது. முதலில் இரண்டு பேரிடர்கள் குறித்து இங்கு விளக்கப்படுகிறது.

பாண்டிய நாட்டில் பன்னிரண்டாண்டுகள் மழையில்லாததால் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. இந்தத் தகவலைச் சிலப்பதிகாரம் காடு காண்காதையும், மணிமேகலைக் காப்பியம் ஆபுத்திரன் வரலாறு கூறிய காதையும் இறையனார் களவியல் உரையும் எடுத்துரைக்கின்றன.

முச்சங்கத்தைக் குறிப்பிடும் தொல்புனைவு ஒன்றில் இரண்டாம் சங்கம் முடிந்த பிறகு பாண்டிய அரசன் ஒருவன் அந்நாட்டிலிருந்த அறிஞர்கள், புலவர்கள், சான்றோர்கள் ஆகியோரை அழைத்து நமது நாட்டில் பெரும்பஞ்சம் ஏற்பட்டுள்ளது. நீங்கள் அனைவரும் வெவ்வேறு திசைகளில் உள்ள நாடுகளுக்குச் சென்று தங்கி உயிர் பிழைத்திருங்கள். பன்னிரண்டு ஆண்டுகள் பஞ்சம் முடிந்த பிறகு உங்களைக் கூப்பிடுகிறேன் என்று கூறி அனுப்பினான் என்றும் அப்பன்னிரண்டாண்டுகள் முடித்தபின் அப்பாண்டியரசன் அவர்கள் அனைவரையும் அழைத்து மூன்றாம் தமிழ்ச் சங்கத்தை நிறுவினான் என்றும் இறையனார் களவியல் உரை கூறுகிறது. பஞ்சக் காலமான அப்பன்னிரண்டாண்டுகளும் அரசன் ஆட்சியை எவ்வாறு நடத்தினான், மக்களின் நிலைமை யாது? என்பது குறித்துத் தகவல் எதுவும் சுருக்கமாகக் கூட இந்நூலில் சொல்லப்படவில்லை.



சிலப்பதிகார காடுகாண் காதையில் மாங்காட்டு மறையவன் வாயிலாகப் பஞ்சம் குறித்த ஒரு கதை நினைவூட்டப்படுகிறது. பாண்டிய அரசன்

ஒருவன் இந்திரனோடு சண்டையிட்டு அவரைத் தோற்கடித்து அவமானப்படுத்தியதனால் இந்திரன் அப்பாண்டிய நாட்டில் பஞ்சத்தை ஏற்படுத்தினான். அக்காலத்தில் பன்னிரண்டாண்டுகளாக மழை பெய்யவில்லை. இதனால் பஞ்சத்தைச் சமாளிக்க முடியாத அப்பாண்டியன் முத்துமாலை ஒன்றைப் பரிசளித்து இந்திரனோடு சமாதானமாகி தன் நாட்டிற்கு மழை வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதன் பேரில் அந்நாட்டில் மிகுந்த மழை பெய்தது. பாண்டிய நாடு இதனால் செழிப்படைந்தது. இத்தகையச் சிறப்பு செய்த பாண்டியன் தென்னவன் வாழ்க! என மாங்காட்டு மறையவன் வாழ்த்துகிறான்



**பஞ்சக்காலமும் நிவாரணப் பணியும்**

மணிமேகலைக் காப்பியத்தில் பாண்டிய நாட்டுப் பஞ்சம் ஆபுத்திரன் கதையோடு சேர்த்து விவரிக்கப்படுகிறது. அமுதசுரபி என்கிற கருத்தாக்கம் ஆபுத்திரன் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டதாகும். மழையின் வாட்டத்தினால் மண்ணுயிர்கள் எல்லாம் செத்து மடிகின்றன. காடுகளில் உள்ள தாவரங்கள் ஒன்றையொன்று உரசிப் பற்றியெரிந்து புகைகின்றன.

இப்பஞ்சத்தை அறிந்த ஆபுத்திரன் பிச்சைப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு செல்வர்கள் மிகுதியாக வாழும் தென்மதுரைக்குச் சென்று சிந்தாதேவியின் கோவிலில் வணங்கி அந்தத் தெய்வத்தின் ஆணைப்படி உள்ளவர்களிடம் வாங்கி எதுவும் இல்லாதவர் கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் என அனைவருக்கும் உணவுக் கொடுத்தது போக மிச்சமிருந்தால் உண்டு உறங்குவான்.

"மிக்க செல்வத்து விளங்கியோர் வாழும்
தக்கண மதுரை தான் சென்று எய்தி
சிந்தா விளக்கின் செழுங் கலை நியமத்து
அந்தில் முன்றில் அம்பலப் பீடிகைத்
தங்கினன் வதிந்து அத்தக்கணப் பேர் ஊர்
ஐயக் கடிஞை கையின் ஏந்தி
மை அறு சிறப்பின் மனைதொறும் மறுகி
காணார் கேளார் கால் முடப்பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணி நடுக்குற்றோர்
யாவரும் வருக என்று இசைத்து உடன் ஊட்டி
உண்டு ஒழி மிச்சில் உண்டு ஓடுதலை மடுத்து
கண்படைகொள்ளும் காவலன் தான் என்"

அன்று பஞ்சகாலத்தில் நிவாரணப் பணிகள் நடந்தன என்பதை இவ்வரிகள் உணர்த்துகின்றன. இத்தகைய செயலால் ஆபுத்திரனின் புகழ் பெருகியது.

–முனைவர் மு. இரமேஷ்

**முனைவர் மு. இரமேஷ்:** இலக்கியம், பண்பாடு குறித்து எழுதிவருபவர். இப்பாடப்பகுதி மணிமேகலைக் காப்பியத்தில் பேரிடர் மேலாண்மை என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. சங்க இலக்கியத்தில் சமயங்களும் மெய்யியல் கூறுகளும் சங்க இலக்கியத்தில் நிலங்கள் – குடிகள் – வழிபாடுகள் ஆகியவை இவரது பிற நூல்கள்.

## செயல்பாடுகள்

- மழையின் வாட்டத்தினால் மண்ணுயிர்கள் எல்லாம் செத்து மடிகின்றன. இக்கூற்றினை உறுதிப்படுத்தும் வகையில் உங்கள் கருத்துகளை வரிசைப்படுத்துங்கள்.
- வறட்சிக் காலத்தில் நிவாரண முகாம் நடைபெற இருக்கிறது. இதற்கான துண்டுப் பிரசுரம் தயார் செய்யுங்கள்.

## அளம்

"சின்னங்கச்சி, குட்டானயும் சல்லடயயும் எடுத்து வையி... இந்தா வந்தர்றங்" என்ற சுந்தராம்பாள் வடக்காலிருந்த பள்ளக்கொல்லைக்குள் இறங்கினாள். கொம்மட்டிக் கொடிகளைப் புரட்டிப் புரட்டித் தேடிப்பார்த்தாள்.

'பளுத்ததா இல்லாட்டியும் முத்துன காயாருந்தாக்கொட போரும். ஒண்ணயுங் காணுமே' என்றவாறே கொல்லை எங்கும் தேடிப் பார்த்தாள். சிறியதாய் குடுக்கைபோலிருந்த கொம்மட்டிப் பழமொன்று கொடிகளுக்கிடையில் யார் கண்ணிலும் படாமல் கிடந்தது. அதைப் பறித்துக்கொண்டு மேலே ஏறி வந்தாள்.

"அளத்துக்குப் போவ நாளியாவுதில்ல, எங்கபோன?" என்றாள் அஞ்சம்மாள்,

"அளத்துல அடியெடுத்து வச்சவொண்ணாயேத் தாங் நாக்க இளுத்துப் புடிச்சமேரி வறட்டுதே, கொம்மட்டிப்பளம் இருந்தாக்க அப்பப்ப கடிச்சிக்கிட்டு தொண்டய ஈரமாக்கிக்கிடலாமேன்னு தேடிப் பாத்தங் கொல்ல முளுக்க கொடிகெடக்கே ஒழிஞ்சி ஒரு காய பளத்தக் கண்ணால பாக்கமுடியல."

"எதாவது அறுத்தாந்தியா இல்லயா?" "தென்னங்குடுக்கக் கணக்கா இதாங் கெடந்திச்சி" என்று மடியில் கிடந்த கொம்மட்டிப்பழத்தைக் காண்பித்தாள்.

"பூவுலேருந்து பிஞ்சி வாரத்துக்குள்ளயே போயித் திருவியாந்தர்றம். அப்பறம் எங்க பெருக்குற பளுக்குற? என்றாள் அஞ்சம்மாள்.

அவள் சொல்வதுபோல்தான் நடந்து கொண்டிருந்தது. கொம்மட்டிப் பிஞ்சுகளை அறுத்துவந்து அரிந்து உப்புபோட்டு அவித்து 'கொம்மடிக்காய் சோறென்று தின்றார்கள், மன்மத வருடத்து புயல் வெள்ளத்துக்குப் பிறகு கடும் பஞ்சம் ஏற்பட்டது. சனங்கள் பிழைப்பதற்கு வழியில்லாமல் போனது.

ஊரில் ஆடுமாடுகள் இல்லை. நெல்லு, நீரு விளையவில்லை. பனங்கிழங்கும் கிடைக்காமல் போய்விட்டது. மின்னிக் கிழங்கும் கொட்டிக் கிழங்கும் காரக்கொட்டிக் கிழங்கும் தான் சனங்களுக்கு உணவாக இருந்து உயிர்காத்தது. இந்த கிழங்குகளுக்காகக்கூட சனங்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டார்கள். கொல்லைகளில் கீரைகள் துளிர்விடும்போதே 'பலகீரை' ஆய்ந்துவந்து கடைந்து தின்றார்கள். எந்தெந்த ஊர்களிலிருந்தெல்லாமோ வெள்ளத்தோடு வந்து ஒதுங்கிக் கிடந்த முருங்கை போத்துகளைப் புத்திசாலித்தனமாகக் கட்டுமனைகளில் ஊன்றி வைத்தார்கள். அடுத்த பத்து நாட்களுக்குள் துளிர்விட்டன அவை. துளிர் விடவிட உருவி உணவாக்கிக் கொண்டார்கள் சனங்கள். கொல்லைகளில் வெள்ளரி, தொம்மட்டி, கொம்மட்டிக் கொடிகள் தாமாகவே முளைத்துக் கிடந்தன. வெள்ளம் தேங்கி நின்ற பகுதிகளென்பதாலோ என்னவோ முளைத்தவைகளெல்லாம் தளதளவென்று வளர்ந்தது. கொடிகளில் கிடந்த கீரைகளும் உணவாகியது. கொம்மட்டிதான் பிஞ்சிலிருந்து பழம்வரை எல்லோருக்கும் முக்கிய உணவாக இருந்தது.

ஓலைக்குட்டாலுக்குள் கொம்மட்டிப்பழத்தைப் போட்டு கக்கத்தில் எடுத்து வைத்துக்கொண்டாள் சுந்தராம்பாள். சல்லடையைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு சுந்தராம்பாளோடு போனாள் அஞ்சம்மாள்.

இந்தத் துர்முகி வருடம் வறட்சியாகவேப் பிறந்தது. நல்லது கெட்டதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. சித்திரையில் வெயில் அதிகமாயிருந்தது. ஊரில் வேலைவெட்டி எதுவுமில்லை. ஊருக்கு நேர் தெற்கே இருந்த அளத்திலிருந்த கண்டிகளில் உப்புபட்டுக் கிடந்தது. மேற்கிலும் கிழக்கிலுமிருந்த கம்பெனி அளங்களெல்லாம் சீர்திருத்தம்





செய்யப்பட்டிருந்தது. கடல் நீர் ஏகமாய் பாய்ந்து விடாதபடி பண்டெடுத்துக்கட்டி வேலைசெய்து பாத்தி போட்டிருந்தார்கள். ஆனால் கோவில் தாழ்வு அளம்மட்டும் புறம்போக்காய்க் கிடந்தது. பரந்த ஓடைகளைப் போல் கண்டிகள் கிடந்தன. கடலில் ஏற்படும் ஆறுமணி நேர வெள்ளத்தின்போது கடல் நீர் மேலேறி கண்டிகள் வழியாய் பொங்கிவந்து அளமெங்கும் அலசும். அடுத்த ஆறுமணிநேர 'வத்தின்' போது பாய்ந்து வந்த தண்ணீரெல்லாம் திரும்பி கடலுக்குள் போய்விடும். அளம் துடைத்து வைத்ததுபோல் சுத்தமாயிருக்கும். ஆனால் கண்டிகளில் மட்டும் கடல்நீர் கிடந்து கொண்டேயிருக்கும். இந்தக் கண்டிகளில் தான் படுஉப்புப் பட்டுக் கிடந்தது. சித்திரை, வைகாசியில் கடும் வெயிலாயிருக்கும்போது மட்டும்தான் கண்டிகளில் உப்புப் படும். ஊர் சனங்களெல்லாம் அவர்களின் வீட்டிற்கு ஒரு வருடத்திற்குத் தேவையான உப்பை இந்த சித்திரை வைகாசியில் அள்ளி வைத்துக் கொள்வார்கள்.

இந்த வருடப் பஞ்சத்திற்குப் பிழைக்க வழியில்லாமல் படுஉப்பை அள்ளி விற்க ஆரம்பித்தார்கள். சுந்தராம்பாளின் வீட்டை அடுத்தடுத்த கட்டுமனைகளில் இருந்தவர்களெல்லாம் தினமும் உப்பள்ளச் சென்றார்கள். அவர்களைப் பார்த்துவிட்டு சுந்தராம்பாளும் கிளம்பினாள். வடிவாம்பாளும் ராசாம்பாளும் அவளுடன் கிளம்பினார்கள்.

– சு. தமிழ்ச் செல்வி

**தமிழ்ச் செல்வி:** திருவாரூர் மாவட்டம் கற்பகதாதர்குளத்தில் சுப்பிரமணி–முத்துலட்சுமி இணையருக்கு மே 4 ஆம் தேதி 1971 ஆம் ஆண்டு மகளாகப் பிறந்தார். கீதாரி, கண்ணகி, மாணிக்கம் போன்ற நாவல்களை எழுதியுள்ளார். தமிழ் வளர்ச்சித் துறை விருது, கலைஞர் பொற்கிழி விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

## வினையாலணையும் பெயர்

மாணவர்கள் மாலை நேரத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு மாணவன் பின்வரும் வினாக்களைத் தன் நண்பனிடம் கேட்டான்.

பந்தை எறிந்தவன் யார்?

பந்தை மட்டையால் அடித்தவன் யார்?

அடித்த பந்தினைப் பிடித்தவன் யார்?

என்பனவாகும்.

உடனே அவன் அவர்களை இடைமறித்து நீ கூறிய வாக்கியங்களில் எறிந்தவன், அடித்தவன், பிடித்தவன் ஆகிய சொற்களைக் குறித்து புத்தகங்களில் படித்துள்ளேன். இந்தச் சொற்களை வினையாலணையும் பெயர் என்று கூறுவர்.

எப்படி என்றால் ஒரு வினைமுற்று பெயராக மாறி வேறொரு வினைமுற்றினைக் கொண்டு முடிவதாகும். அதாவது ஒரு செயலுடன் செயலைச் செய்தவனையும் குறிப்பிடுவதாகும்.

வினையாலணையும் பெயர் என்பதை வினை + ஆல் + அணையும் + பெயர் எனப் பிரிக்கலாம்.

எ.கா: கீழே விழுந்தவனைத் தூக்கி விட்டான்.

நேற்று வந்தவன் இன்றும் வந்தான்.

இதில் விழுந்தவன், வந்தவன் என்பவை வினையாலணையும் பெயராகும்.

## செயல்பாடுகள்

- தூய தமிழ்நடையில் எழுதுங்கள்.

  "பூவுலேருந்து பிஞ்சி வாரத்துக்குள்ளயே போயித் திருவியாந்தர்றம். அப்பறம் எங்க பெருக்குற பளுக்குற?" என்றாள் அஞ்சம்மாள்.

- பஞ்சகாலத்தில் மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளைக் கலந்துரையாடிக் குறிப்பாக எழுதுங்கள்.



# கலங்கரை விளக்கம்



## கல்லணை

பதினெட்டாம் பெருக்கின்போது காவிரியைப் பார்க்க வேண்டும். கண் இரண்டும் போதாது. அதுவும் உச்சிப் பிள்ளையார் கோயிலில் இருந்து பார்த்தால் – "ஆறிரண்டும் காவேரி அதன் நடுவே சீரங்கம்" என்று வாய் தானாகவே முணு முணுக்கும்.

"கண் பாயும் இடமெல்லாம் அலை பாயும் வயல்கள்" என தி.ஜானகிராமனை மலங்கடித்த காவிரி அது.

"பூவார் சோலை மயிலாட

புரிந்து குயில்கள் இசைபாட

காமர் மாலை அருகசைய

நடந்தாய் வாழி காவேரி"

என்று ஒரு துறவியான இளங்கோவையே மயக்கிய காவிரிப் பெண்ணவள். இன்றும் அந்தத் தாயின் கருணையால்தான் அள்ளி அள்ளி வயிறு புடைக்கச் சாப்பிடுகிறோம். "சோழ நாடு சோறுடைத்து" என்று பெருமையாகச் சொல்வதற்குக் காரணமாக இருப்பது காவிரி தான். தமிழ் பிறப்பதற்கு முன்பே பிறந்தவள் அவள். கடல் மட்டத்தைவிட 4186 அடி உயரமான



குடகு மலையிலிருந்து புறப்பட்டு 800 கி.மீ பயணித்து பூம்புகாரில் வங்கக் கடலில் கலக்கிறது காவிரி.

காலப்போக்கில் பல திசைகளில் பயணப்பட்ட காவிரி, இன்று பாயும் இந்த வழித்தடத்தைப் பிற்காலத்தில்தான் வந்தடைந்ததாகவும், காவிரி மட்டுமே பாய்ந்த காலம் ஒன்று இருந்ததாகவும், கொள்ளிடம் தனியாக கி.பி.1100–1250 க்கும் இடைப்பட்ட காலத்தில் தோன்றி இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

இப்படி கால நதி போல் ஓடிவந்த காவிரியை அதன் வெள்ள அழிவைத் தடுக்கவும், மிகுதியான நீரைப் பயன்படுத்தி பாசனப் பரப்பை அதிகமாக்கவும் கட்டப்பட்ட முதல் அணை கல்லணை. இந்த அணை சோழப் பேரரசன் கரிகால் சோழனால் கட்டப்பட்டது. கட்டப்பட்ட ஆண்டு கி.பி முதல் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. கல்லணையின் நீளம் 1080 அடி, அகலம் 66 அடி, உயரம் 18 அடி.

காவிரி நீர் பெருகி அதிகம் வரும் காலங்களில் பெரும் உடைப்புகள் ஏற்பட்டு பாதிப்பை உருவாக்குவதோடு தாழ்வானப் பகுதியில் பாய்ந்து வீணாகக் கடலில் கலப்பதுதான் அன்றைய காவிரி சந்தித்த பிரச்சினை. இப்படித்தான் கொள்ளிடம் காலப்போக்கில் உருவாகி தேவிகோட்டையில் கடலோடு கலக்கிறது. திருவரங்கத்தின் கிழக்கே காவிரியின் வடகரையில்தான் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டது. அதில் பாயும் பெரும் வெள்ளமே கொள்ளிடத்தில் ஓடி வீணாகக் கடலில் கலப்பதைத் தடுக்கவே கரிகாலன் அணை கட்ட முடிவு செய்தான். உடைப்பைத் தடுத்து குறிப்பிட்ட உயரத்தில் சுவர் எழுப்பினான் (அணை). இதனால் வெள்ளம் பள்ளம் நோக்கிப் பாயும் வேகம் தடுக்கப்பட்டு, நீர் காவிரியிலேயே பாய்ந்து வேளாண்மைக்குப் பயன்பட்டது.

ஏராளமான நீர் காவிரியில் வந்ததால், கட்டப்பட்ட அணையின் மேல்மட்டத்தைத் தாண்டி வழிந்து கொள்ளிடத்தில் பாய்ந்து கடலில் கலந்தது. இதனால் டெல்டா பகுதிகள் வெள்ளக்காடாவது தடுக்கப்பட்டது. இப்படித்தான் காவிரியின் வெள்ளத்தையும் சமவெளிப் பாசனத்தையும் ஒழுங்குபடுத்தினான் சோழன் கரிகாலன். கல்லும் களிமண்ணும் சேர்த்துக் கட்டப்பட்ட அணைதான் கல்லணை. ஒருவித ஒட்டும் களிமண்ணைப் புதிய பாறைகளில் பூசி இரண்டையும் ஒட்டிக் கொள்ளும் விதமாகச் செய்தனர். இதுவே கல்லணைப் கட்டப்பயன்படுத்திய தொழில் நுட்பம் எனக் கூறப்படுகின்றது.

புவியியல் அமைப்பைப் புரிந்து, அணை கட்ட அவன் தேர்ந்தெடுத்த இடமும், வெள்ளப் பெருக்கைத் தடுத்து, தாங்கி நிற்கும் அந்த அணை (சுவர்) கட்ட அவன் மேற்கொண்ட தொழில் நுட்பமுமே தமிழர்களின் கட்டட அறிவின் சான்றாக உலகத்தால் இன்றுவரை கொண்டாடப்படுகிறது.

– விகடன் மின்னிதழ்

## செயல்பாடுகள்

- முற்காலங்களில் வெள்ளப்பெருக்கினைத் தடுப்பதற்காக நம் முன்னோர் கையாண்ட வழிமுறைகளைக் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்பாக எழுதுங்கள்.
- உங்கள் ஊர்ப் பகுதியில் காணப்படும் நீர்நிலைகளைப் பாதுகாப்பது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரம் தயாரியுங்கள்.

## நிலச்சரிவு

நிலச்சரிவு அல்லது மண்சரிவு என்றால் என்ன? அது ஏன் ஏற்படுகிறது? அதனுடைய பாதிப்புகள் எப்படி இருக்கும், அதை எப்படித் தடுக்கலாம் என்பது பற்றி இங்குக் காண்போம்.

முதலில் நிலச்சரிவின் மினியேச்சர் ஒன்றைச் செய்து பார்க்கலாமா? மணலைக் குவித்து வைத்துக்கொண்டு அந்தக் கூம்பு வடிவத்தின் மேல் பகுதியில் ஒரு குவளைத் தண்ணீரை எடுத்து ஊற்றும் பொழுது மண்ணை அரித்துக் கொண்டு ஓடும் அல்லவா!

அப்படி அங்கே ஓடும் பொழுது சிறிய அளவில் உள்ள எறும்பு போன்றவை இருந்தால் அவையெல்லாம் எங்கே இருக்கும் என்று தெரியாதவாறு மண் மூடிச் சென்றுவிடும்.

இதே நிகழ்வு பெரிய அளவில் நடைபெறுவதை நிலச்சரிவு என்கிறோம். சாதாரணமாக நிலச்சரிவு ஏற்படும் பொழுது அங்கே இருக்கக் கூடிய பேருந்துகள், கார்கள், வீடுகள், பாலங்கள் போன்றவற்றைக் கூட மண்ணில் உள்ளே வைத்து மூடிவிடும். வீட்டைத் தேடிக் கண்டுபிடிக்கவே சில நாட்கள் கூட ஆகலாம்.

நிலச்சரிவு என்பது ஒரு புவியியல் நிகழ்வாகும். பெரும் பாறைகள் சிதைந்து கீழே விழுதல், அல்லது சரிவடைதல், சாய்வின் உறுதியைக் குறைக்கும் துளை நீர் சாய்வுக்கு உள்ளே செல்லுதல், சரிவினில் உள்ள மண்பிடிப்பு பாதிக்கும்பொழுது காட்டுத் தீயினால் மரங்கள் அழிதல், சாய்வின் கீழ்ப்பகுதி தண்ணீரால் அரிக்கும்பொழுது கடல், ஆறு, கடும் மழை, எரிமலை போன்ற இயற்கைக் காரணங்களால் நிலச்சரிவு ஏற்படும்.



நாம் செய்யக்கூடிய மனிதத் தவறுகள், இயந்திரங்கள்,

போக்குவரத்துகளால் ஏற்படும் அதிர்வுகள், குண்டு வெடிப்பு, மண் தோண்டுதல், பாறைச் சரிவில் உள்ள புதர்களை அகற்றுதல், மரங்களை வெட்டுதல் போன்ற காரணங்களினால் நிலச்சரிவு ஏற்படுகிறது.

### செயல்பாடுகள்

- இயற்கைப் பேரிடர்களை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு நாளிதழுக்குத் தலையங்கம் எழுதுங்கள்
- நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட நண்பனுக்கு ஆறுதல் கூறும் வகையில் கடிதம் எழுதுங்கள்.
- நிலச்சரிவினால் ஏற்படும் பாதிப்புகளை வரிசைப்படுத்துங்கள்.
- மனிதச் செயல்பாடுகளால் ஏற்படும் இயற்கைப் பேரிடர்களைத் தவிர்க்கும் வழிமுறைகளைக் கலந்துரையாடிக் குறிப்பெழுதுங்கள்.

## வெள்ளம் புகட்டும் படிப்பினைகள்

2018 ஆம் ஆண்டின் பருவமழை கேரள மாநிலத்தை வெள்ளத்தில் மூழ்கடித்தது. மே, ஜூன் பருவத்திலேயே வழக்கத்தைவிட அதிக அளவில் பொழிந்த மழை மீண்டும் ஆகஸ்டு மாதத்தில் அடைமழையாக மாறியது. பருவ மழையின் தொடர்ச்சி என்று நம்பப்பட்ட மழை பிரளயமாக மாறியது. நூற்றாண்டுக் கண்டிராத பேரிடர் என்று விரைவில் தெரிந்தது.

மாநிலத்தில் சராசரியாகப் பெய்யும் மழையைவிட ஏழு அல்லது எட்டு மடங்கு அதிகமாகப் பெய்த மழை, மக்களின் இயல்பு வாழ்க்கையைக் கேள்விக்குள்ளாக்கியது. கேரளத்திலுள்ள அணைகள், நீர்த்தேக்கங்கள் நிறைந்து வழிந்தன. மாநிலத்தில் ஓடும் நதிகளில் பெரிய நதியான பெரியாறு கரைமீறிப் புரண்டது. அதன் வெள்ளப்பெருக்கால் எர்ணாகுளம் நகரத்தின் பலபகுதிகள் மூழ்கின. பிற நதிகளும் பெருக்கெடுத்ததைத் தொடர்ந்து பாதுகாப்பு எச்சரிக்கைகள் விடப்பட்டன. தொடர்ந்து பெய்த மழையும் நதியை மீறிப் பாய்ந்த வெள்ளம் வெளியேற முடியாத நிலையும் நகரங்களையும் ஊர்களையும் வெள்ளத்தில் மூழ்கடித்தன. பதினான்கு மாவட்டங்களில் கொல்லம், திருவனந்தபுரம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களும் நீரின் மூர்க்கப்பிடியில் அகப்பட்டன. அணைகள்






ST-319-11-TAMIL (AT)-9-VOL-1



திறந்துவிடப்பட்டபோது தொடர்ந்து பெய்த மழையால் நீர்வரத்து அதிகரித்து நகரங்களை மூழ்கடித்தன. வீடுகளில் வெள்ளம் புகுந்தது. தரைமட்டத்தில் இருந்த வீடுகள் முற்றிலும் மூழ்கின. அடுக்குமாடிக் குடியிருப்புகளில் முதல் தளத்தைத் தாண்டி இரண்டாம் தளம் வரையும், சில இடங்களில் மூன்றாம் தளம் வரையும் வெள்ளம் உயர்ந்தது. மக்கள் வீடுகளைக் காலி செய்து வெளியேறினர். சிலர் மொட்டை மாடிகளில் அடைக்கலம் புகுந்தனர். நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் ஆற்றங்கரைகளிலும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பலர் உயிர் இழந்தனர். பல்லாயிரம் ஹெக்டேர் பரப்புள்ள விளைநிலங்கள் பாழாயின. பாலங்கள் நொறுங்கின. ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் துண்டிக்கப்பட்டு ஊர்கள் தொடர்பறுந்தன. செங்ஙன்னூர், நெல்லியாம்பதி, எர்ணாகுளம் ஆகிய இடங்கள் மனிதர் எட்டமுடியாத தீவுகளாகத் தனித்து விடப்பட்டன. ஒரு நூற்றாண்டில் பெய்ய வேண்டிய மழை நான்கு நாட்களில் கொட்டித் தீர்த்ததில் கேரளம் பெரும் பேரிடரைச் சந்தித்தது.

இந்த இயற்கைப் பேரிடர் விளைவித்திருக்கும் பொருட்சேதமும் உயிரிழப்பும் அதிகம். சுமார் எட்டு லட்சம் பேர் மீட்பு முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். எட்டாயிரம் முதல் பத்தாயிரம் வரையான வீடுகள் பயன்படுத்த முடியாத அளவுக்குச் சிதிலமாகியுள்ளன. வயநாடு, கண்ணூர், பாலக்காடு மாவட்டங்களில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கியவர்களும் பிற இடங்களில் வெள்ளத்தில் மூழ்கியவர்களுமாக நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர். விவசாயம், உற்பத்தி, சேவை ஆகிய துறைகள் நிலைதடுமாறியதில் ஏற்பட்டிருக்கும் பொருளிழப்பு இன்னும் கணக்கிடப்படவில்லை. சுமார் 20ஆயிரம் கோடிக்கு அதிகம் என்பது தோராயமான கணக்கு. கேரளம் போன்ற சிறிய மாநிலம் தாங்கக் கூடிய சுமையல்ல இது.

பேரிடர்த் தருணத்தில் கேரள அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை. மாநிலம் முழுவதும் ஒன்றிணைந்து இந்த அபாயத்தை எதிர்கொண்டது. அரசு நிறுவனங்களும் குடிமைச் சமூகமும் கைகோத்து மாநிலத்தைத் துயரக்கடலிலிருந்து கரையேற்றின. பேரிடருக்கான காரணங்கள் குறித்துப் பல கருத்துகள்

சொல்லப்படுகின்றன. அவை அனைத்தும் பரிசீலனை செய்யப்பட வேண்டியவை என்ற படிப்பினையைச் சூழல் முன்வைத்திருக்கிறது.

இதுபோன்ற இயற்கைச் சிக்கலைக் கேரளம் எதிர்கொள்வது நூற்றாண்டில் முதல் முறை. பருவமழை சராசரியைவிட அதிகமாக இருக்கலாம் என்ற முன்னெச்சரிக்கையில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் வளமையானவை. ஆனால் இயற்கை எதிர்பாராத முறையில் நடந்துகொண்டது என்பதே உண்மை. எனினும் காலநிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பற்றித் தொடர்ந்து அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டே வந்திருக்கின்றன. கடந்த ஜூலை மாதத்தில் யமுனை நதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் டில்லி நகரம் திணறியது. 2017இல் பங்களூரும் 2015இல் சென்னை மாநகரமும் வரலாறு காணாத வெள்ளத்தால் கடும்பாதிப்புக்குள்ளாயின. இவை பொதுவாக எதிர்பாரா விளைவுகள். ஆனால் பன்னாட்டுக் காலநிலை அறிவியலாளர்களும் அறிவியல் அமைப்புகளும் மாற்றமடைந்து வரும் காலநிலைபற்றி எச்சரிக்கை விடுத்து வந்திருக்கின்றனர். புவி வெப்பமயமாதல், நகரப்பெருக்கம், நீர்வழித்தடங்களின் அழிவு, வனச்சீரழிப்பு, மலைகள் சிதைக்கப்படுதல் போன்ற காரணங்கள் பருவநிலையில் முன்னெப்பொழுதும் இல்லாத அதீத மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. அதன் மூலம் இதுபோன்ற தீவிர காலநிலை நிகழ்வுகள் அதிகரிக்கும் என்று ஆய்வுகள் கூறுகின்றன. இனிவரும் காலங்களில் இந்த எதிர்பாரா விளைவுகள் அதிகரிக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றன.





பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது கேரளத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்கள் கடுமையானவை. ஒப்பீட்டு அளவில் அவை வலியுறுத்தி நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன. கேரளத்தில் இன்றும் நீர்வழிப்போக்குவரத்து நடைபெறுகிறது; காயல்கள் பாதுகாக்கப்படுகின்றன; மரக்கொள்ளையும் காடழிப்பும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன; ஆற்றிலிருந்து மணல் வாருவதும் மலைகளை வெட்டுவதும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. சூழியல் செயல்பாட்டாளர்களின் கருத்துகளுக்கு அரசு செவிசாய்க்கும் நிலையும் நிலவுகிறது. இவ்வளவு இருந்தும் இயற்கை பரிவுகாட்டாததற்குக் காரணம் மனிதத் தவறுகளே. மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பாதுகாப்பை வலுப்படுத்த ஆலோசனை அளிக்கும்படி சூழலியலாளர் மாதவ் காட்கில்லிடம் கேரள அரசு கேட்டுக்கொண்டது. அவர் ஆய்வுநடத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அறிவியல்பூர்வமற்ற வகையில் நிலங்கள் திருத்தப்பட்டமை, மண்வளச்சுரண்டல், நீர்நிலைகள், சதுப்பு நிலங்கள் மீதான ஆக்கிரமிப்பு ஆகியவையே இந்த அவலநிலைக்குக் காரணம் என்கிறார். காட்கிலின் அறிக்கைக்கு எதிராக அரசியல்வாதிகளும் மாஃபியாக்களும் பொய்ப்பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். அவரை அவமதிக்கவும் செய்தனர். ஆனால் இயற்கை புகட்டும் பாடங்களைக் கற்றுக்கொள்ளவோ நடைமுறைப்படுத்தவோ முற்படவில்லை என்பதையே அண்மைப் பேரிடர் எடுத்துக்காட்டுகிறது.

வேறுவழியின்றி கேரளம் இதிலிருந்து பெற்ற படிப்பினைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராகிவருகிறது. கேரள வெள்ளக் கொடுமை சுட்டிக்காட்டும் முக்கிய அம்சம் கவனத்திற்குரியது. இந்த மழையில் பெரும் பாதிப்புக்குள்ளானவை நகரங்களே. திருச்சூர், எர்ணாகுளம், செங்ஙன்னூர் போன்ற நகரங்கள் தாம் மோசமான பாதிப்புக்கு உள்ளானவை. நகரங்கள் பெருமழைக்குத் தாக்குப்பிடிக்கக் கூடியவை அல்ல. பெரும்பாலான நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள நீர்வடிகால்கள் சராசரி மழை நீரை வெளியேற்றவே திட்டமிடப்பட்டவை. அளவுக்கு மிஞ்சி மழை பொழியுமானால் நகரங்கள் நீரில் மூழ்குவது தவிர்க்க இயலாதது. எனவே சரியான வடிகால் அமைப்புகள் திட்டமிடப்படவேண்டும். நகரங்களின் வெப்பமயமாக்கம் மழையின் இயல்பை மாற்றக்கூடியது. அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இயற்கையின் போக்குகள், அதன் விளைவுகளை வைத்தே கண்டறியப்படுகின்றன. காலநிலையின் சுழற்சி மூலமே தட்பவெப்பநிலை மாற்றங்கள் இதுவரை முன்னறியப்பட்டுள்ளன. இந்த நடைமுறைகளை மிஞ்சிய புதிய அறிவியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவேண்டியது மிக அவசியமான ஒன்று.

கேரளப் பிரளயம் இழப்புகளுடன் சில படிப்பினைகளையும் விட்டுச் சென்றிருக்கிறது. அவற்றிலிருந்து கற்றுக்கொள்வது இன்றைய

அவசரத்தேவை மட்டுமல்ல; நாளைய மனித இருப்புக்கு மிக அவசியமானதும் தவிர்க்கக் கூடாததும் ஆகும்.

– காலச்சுவடு

## செயல்பாடுகள்

- பேரிடரைத் தவிர்க்கும் வழிமுறைகளைக் கலந்துரையாடிக் குறிப்பு தயார் செய்யுங்கள்.
- உலகப் பேரழிவு தடுப்புத் தினத்தை முன்னிட்டுப் பேரிடர் தவிர்த்தல் என்னும் தலைப்பில் சொற்பொழிவுரை தயார் செய்யுங்கள்.
- பேரிடர்களைத் தவிர்க்கும் வழிமுறைகளை எடுத்துக் கூறிப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரம் தயார் செய்யுங்கள்.



# சொல்லகராதி

| | | |
|---|---|---|
| அண்டம் | – | உலகம் |
| அளம் | – | உப்பு உற்பத்தி செய்யும் இடம் |
| இசை | – | புகழ் |
| கா | – | சோலை |
| குச்சுவீடு | – | குடிசை வீடு |
| குட்டான் | – | பனையோலை நாரால் செய்யப்படும் பெட்டி |
| கொல்லை | – | வீட்டின் பின்புறம் |
| கோடாங்கி | – | உடுக்கை இசைத்துப்பாடி குறி சொல்பவர் |
| சல்லடை | – | அரிப்பு |
| சிருஷ்டி | – | படைப்பு |
| சுனை | – | நீரூற்று |
| சென்டு | – | பூங்கொத்து |
| ஞிமிறு | – | தேனீ |
| தட்டோர் | – | தடுத்து நிறுத்தியவர் |
| தாள் | – | பாதம் |
| திக்கு | – | திசை |
| துயில் | – | உறக்கம் |
| துருத்தி | – | ஆற்றின் நடுவே அமைந்துள்ள சிறு நிலம் |
| நாளி | – | நாழிகை |
| நெட்டித் தள்ளும் | – | உந்தித் தள்ளும் |
| பாழ் | – | வீண் |
| பிண்டம் | – | உணவால் பிடித்து வைக்கப்பட்ட உடம்பு |
| பிணி | – | நோய் |
| பீடு | – | பெருமை |
| புனல் | – | நீர் |
| பேணுநர் | – | பராமரிப்பவர் |
| போத்து | – | மரத்தின் கிளை |
| மரை | – | மான் |
| மல்லல் | – | செல்வம், வளம் |
| மாஃபியா | – | குற்றம் செய்யும் குழு |
| மொள கட்டுதல் | – | முளை விடுதல் |
| யாக்கை | – | உடம்பு |
| ராஜாளி | – | ஒரு பறவை |
| வல்லே | – | உடனே செய் |
| வளி | – | காற்று |
| விசும்பு | – | ஆகாயம் |
| வெற்பு | – | மலை |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
சமூக நீதித்துறை இயக்ககம், அனெக்ஸ் பில்டிங்,
பூஜப்புரை, திருவனந்தபுரம் - 12, தொலைபேசி எண் : 0471 - 2326603
இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online **R. T. E Monitoring** : www.nireekshana.org.in*